ஜூன் 07 - 13, 2004 24 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

தேன் கூட்டுக்கு கல் எறிந்தால்...!

தளபதிகள் சந்திப்பு தணிவுக்கு வழிவகுக்குமா?

ஜனாதிபதியின் புதிய நகர்வுகள்

கடந்த 27ஆம் திகதி விடுதலைப்புலிகளுடனான எரிக் சொல்ஹெய்மின் சந்திப்புடன் நோர்வேயின் முயற்சிகள் எதுவும் வெற்றியளிக்காத நிலையில் நோர்வே தரப்பினர் நாடு திரும்பியுள்ளனர்.

இடைக்கால நிர்வாக அலகு தொடர்பான பேச்சுக்களுடன் இணைந்ததாக இறுதித்தீர்வுக்கான பேச்சும் இருக்க வேண்டும் என ஜனாதிபதி விடுத்த வேண்டுகோள் புலிகளால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து சமாதான முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த நெருக்கடியை நோர்வே தரப்பும் முன்னரே உணர்ந்து கொண்டது போல் தெரிகிறது. இதற்கு முந்திய சந்திப்பின் போது, பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கும் நிலை இல்லை என்றும், அவ்வாறு ஆரம்பிக்கப்பட்டாலும் மிகவும் இறுக்கமான

மன்மோகன் சிங்

தாகவும், கடினமான நிபந்தனைகளைக் கொண்டதாகவும் அது இருக்கும் எனவும் எரிக்சொல்ஹெய்ம் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இந்தப் பேச்சு எதிர்கொள்ளப்போகும் நெருக்கடிகளை சமாதான செயலகத்தின் பணிப்பாளரான ஜயந்த தனபாலவும் முன்னரே தெரிந்துகொண்டுள்ளார் போல் தெரிகிறது.

பேச்சுக்கான இடம், காலம், கலந்து கொள்வோர் பற்றிய விபரங்கள் பற்றி அவரிடம் வினவப்பட்டபோது, ஏற்கனவே பேசப்பட்ட, தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆராய்வதாகவும், இதனால் இவை பற்றிய விவரங்களை உடன் தெரிவிக்க முடியாதெனவும் கருத்து தெரிவித்திருக்கிறார்.

வடக்கு கிழக்கின் இராணுவ சூனியப் பிரதேசம் மற்றும் முன்னரங்க காவல் நிலைகளை மாற்றியமைப்பது தொடர்பில் நோர்வேயின் மத்தியஸ்தத்தை ஜனாதிபதி கோரி நின்ற நிலமைகளும் ஜனாதிபதி எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை புலப்படுத்துகின்றன.

ஜனாதிபதியின் யாழ்.செயலகம்

எல்லாவற்றுக்கும் மேலாக வடக்கில் விசேட செயலகம் ஒன்றின் மூலமாக ஜனாதிபதி தனது அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ள முனைந்திருப்பது, தமிழ்த்தரப்பின் அனைத்துப்பிரதிநிதிகளையும், ஒரங்கட்டும் ஒரு நடவடிக்கையாகவே கருதப்படுகிறது.

வடக்கு நிலைமைகளை வடக்கின் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதிகள் மூலமாகவோ அன்றி, விடுதலைப்புலிகள் மூலமாகவா இல்லாமல், தனது நேரடிக்கண்காணிப்பின் கீழ், தனது விசேட செயலகத்தை,ஜனாதிபதி அமைத்திருப்பது, தமிழ்த்தரப்பின் மீதான அவருக்குள்ள மேலாண்மையினையே வெளிப்படுத்துகின்றது.

அச் செயலகத்தின் பணிப்பாளர் ஹரீம் பீரிஸ், குடாநாட்டை அபிவிருத்தி செய்வதில் ஜனாதிபதி ஆர்வமாக இருப்பதாக கூறியுள்ள போதும், அதி உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் மீளவும் மக்கள் குடியமர்வது தொடர்பாக ஆரோக்கியமான கருத்துக்கள் எதனையும் முன்வைக்கவில்லை.

யாழ்.மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்தவுடனேயே இந்த உயர்பாதுகாப்பு வலயங்களை மக்களின் பாவனைக்காக அரசு அனுமதித்திருக்க வேண்டும். ஆனால், அதற்கு இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனப் பெயரை மாற்றி அதனை இப்போதும் இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டிருக்கிறது என தெரிவித்துள்ளது.

மேலும், இந்தியப்படை நாட்டில் இருந்த காலத்தில் கூட, இவ்வாறான ஒரு நிலை இருக்கவில்லை என்றும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான அமைப்பான ஜே.வி.பி தன்னுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு முரணாக ஜனாதிபதி நடந்துகொள்வதாக தெரிவிக்கின்றபோதும், ஜனாதிபதியின் நடவடிக்கைகள் ஜே.வி.பியின் சமாதான முயற்சிகளுக்கெதிரான செயற்பாடுகளை விட மிகவும் மோசமானவைகளாகவே இருக்கின்றன.

சமகால வன்முறைகள்

கடந்த மார்ச் மாதத்துக்குப்பிறகு கிழக்கில் 20 வன்முறைச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றில் மொத்தமாக கொல்லப்பட்டுள்ள 35 பேரில் 21 பேர் விடுதலைப்புலி உறுப்பினர்கள். கருணாவின் தரப்பாக 7 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

பிந்திய மரணங்களில் பொருளியல் துறைத்தலைவர் தம்பையா மற்றும், சிரேஷ்ட பத்திரிகையாளரான ஐயாத்துரை நடேசன் மரணமும் கவனத்துக்குரியவை.

இக்கொலைகளுக்கு விடுதலைப்புலிகளால் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், கிழக்கில் மிகவும் செல்வாக்குள்ள இந்த நபர்களின் மரணம் தமிழ்ச் சமூகத்துக்கு மிகவும் பேரிழப்பானது என்பது சொல்லித்தெரிய வேண்டிய ஒன்றல்ல.

யுத்தம் நடைபெற்ற காலங்களில், இளைஞர் யுவதிகளை கைது செய்வதன் மூலம் தனக்குஎதிரான சக்திகளை கட்டுப்படுத்த முனைந்த அரசாங்கம் இப்போது தமிழ்ப் புத்திஜீவிகளின் மேல் தனது கைவரிசையை காட்ட முனைகிறது.

தமிழ்த் தேசத்தின் வழிகாட்டிகளை – முன்னுதாரணமான சக்திகளை – தேசத்தில் இருந்து அகற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் அதன் ஆற்றலை வலுவிழக்கச் செய்ய முடியும் என அரசு நம்புவதாக தெரிகிறது.

இந்த நிலைமைகள் மேலும் தொடருமாயின் தமிழ்த் தேசம் தனது முன்னெடுப்பை நோக்கிய அதன் பயணத்தில் கடுமையான சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது திண்ணம்.

அதுமட்டுமன்றி, போராட்டத்திற்கு எதிரான சக்திகள் பலம் பெறவும், அவர்களின் சுதந்திரமான செயற்பாடுகள் விஸ்தாரம் பெறவும் இந்த வன்முறைகள் வழிவகுப்பதாக அமைந்துவிடும்.

தொடர்ந்தும் பேச்சுக்களை முன்னெடுப்பதில் தயக்கம் காட்டிவந்துள்ள ஜனாதிபதி, இந்த மரணங்கள் குறித்து அவ்வளவு அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.

பேராசிரியர் தம்பையாவின் கொலையைத் தொடர்ந்து விசேட பொலிஸ் பிரிவொன்றை விசாரணைக்காக அமைத்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்து 4 நாட்களின்பின்பு பத்திரிகையாளர் நடேசன் கொல்லப்பட்டிருக்கிறார்.

இந்திய அரசை நோக்கிய ஆர்வங்கள்

இறுதியாக நடைபெற்ற இந்திய பொதுத் தேர்தலைத் தொடர்ந்து பதவிக்கு வந்த காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி, தனது அரசை அமைப்பதற்கு முன்னதாகவே விடுதலைப் புலிகள் மீதான இரண்டாண்டு காலதடை அறிவிப்பை இந்திய அரசு வெளியிட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதியின் தரப்பு உஷாரடைந்துவிட்டதாகத் தெரிகிறது.

இந்திய அரசின் புதிய பாதுகாப்பு ஆலோசகராக ஜே.என்.டிக்ஸிற் பதவியேற்றுள்ள தன் பின்னர் அமைச்சர் கதிர்காமர் புதுடில்லிக்கான தனது பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்திய உயர் ஸ்தானிகர் நிருபம் சென் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இந்தியா தனது அபிவிருத்திப் பணிகளை செய்வதற்கான அழைப்புக்காக காத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்.

இலங்கையின் தமிழ் பத்திரிகைகள் இந்திய அரசின் இலங்கைமீதான அணுகுமுறை தொடர்பாக சரியான புரிதலின்றி கருத்து வெளியிடுவதாக நிருபம் சென் கருத்து வெளியிட்டதற்குப் பின்பு, இந்த அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பை இந்திய அரசின் துணையுடன் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒப்பந்தம் ஒன்று கடந்த வருட இறுதியில் சாத்தியமாகியபோதும் பொதுத்தேர்தலை நோக்கிய ஆர்வங்களில் இந்திய அரசியல் தலைமைகள் இருந்தமை காரணமாக இது அப்போது சாத்தியமாகவில்லை.

பயிற்சி, ஆயுதவிநியோகம், கரையோரப் பாதுகாப்பு, பொருளாதார ஒத்துழைப்பு உட்பட இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலான ஒப்பந்தத்தை தற்போது புதுடில்லியுடன் செய்து கொள்வதில் ஜனாதிபதி ஆர்வமாக இருப்பதாக தெரிகிறது.

ஆறுநாள் விஜயமொன்றைமேற்கொண்டு கடந்த 31ஆம் திகதி புதுடில்லி சென்ற அமைச்சர் கதிர்காமர் இந்தியப்பிரதமர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என். டிக்ஸிற் உட்பட காங்கிரஸின் முக்கிய தலைவர்களை சந்தித்துப் பேசியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் முக்கிய எதிர்பார்ப்பு

நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவில் எதிர்க்கட்சியின் கை சற்று மேலோங்கியதில் பதற்றமடைந்து தனது அரசை தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வதற்காக மீண்டும் புலிகளை பேச்சுக்கு அழைத்த ஜனாதிபதி, தற்போது புலிகள் விடயத்தில் சற்று துணிவுபெற்றவராக தென்படுகிறார்.

கடந்த அரசின் காலத்தின்போது நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களை குழப்பிய பழி தன்மேல் தொடர்ந்து இருக்கும் என்ற குற்ற உணர்வுடன் ஜனாதிபதி இருந்துவந்தார். புலிகள் மீதான இனவாதிகளின் அழுத்தம் காரணமாகவே அவ்வாறு செய்ய ஜனாதிபதி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்.

இப்போதும் ஜனாதிபதி தமக்கு சரியானது என்று தெரிவதை சுதந்திரமாகச் செய்வதற்கு ஜே.வி.பி உட்பட இனவாதிகள் தரப்பு அவரை அனுமதிப்பதாக இல்லை.

எதிர்வரும் தேர்தல்களில் தன்னைப்பற்றிய கணிப்பு, வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்வதில் ஏற்படவுள்ள தடங்கல்கள், தன்னை தமிழ்மக்களும் ஒரு தலைவியாக போற்ற வேண்டும் என்ற ஆதங்கம் உட்படதனது அரசுதன் கைங்கரியத்தால் கலைந்து போயிற்று என்ற பழிச்சொல்லுக்கும் ஆளாகாமல் நடந்து கொள்ள வேண்டும் என்பதிலும் ஜனாதிபதி எச்சரிக்கையாக இருக்கிறார்.

தற்போது சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த நிலையில் தனது அரசின் பெரும்பான்மைக்கு பெரிதாக எதுவும் நடந்துவிடவில்லை என்பதைக்கண்டு கொண்டுள்ள ஜனாதிபதி இனி புலிகளை எவ்வாறு அரசியல் அரங்கிலிருந்து ஓரங்கட்டலாம் என தீவிரமாகச் சிந்திப்பதாக தெரிகிறது.

புலிகளுடன் தனது நாட்டுப் படைகளைக் கொண்டு போர்புரிந்து தேசத்தை சீரழிப்பதைவிட, வெளிநாடுகளைக் கொண்டு குறிப்பாக இந்திய அரசின் மூலம் புலிகளுக்கு முடிந்த அழுத்தங்களைக் கொடுத்து தாம் விரும்பும் வகையிலான பேச்சுக்கு வரச் செய்யலாம் என ஜனாதிபதி நம்புகிறார். யுத்தத்தில் அவர் ஆர்வமில்லாது இருக்கின்றபோதும் புலிகளை பலவீனப்படுத்த வேண்டும் என்பதிலும் குறியாக இருக்கிறார்.

நோர்வேயின் பின்வாங்கலும், கிழக்கில் நடைபெறும் கொலைகளும், நாடாளுமன்றம் ஆரவாரமின்றி தற்போது அமைதியாக இருக்கின்ற நிலைமைகளும், கூடவே

சந்திரிகா

ஜே.வி.பி தனது உடன்படிக்கையை மீறுவதாக போடும் கூச்சல்களும் ஜனாதிபதிக்கு வசதியாக இருக்கின்றன.

ஆனால், தேசம் தவிர்க்க முடியாமல் யுத்தமொன்றுக்குள் தள்ளப்படும்போது, அவர் எதிர்பார்ப்பதற்கு மாறான நிலைமைகளே ஏற்படப் போகின்றன.

நாட்டின் அதிகாரமுள்ள தலைவியாக அவர் இருப்பதால் விடயங்களை நியாயமாக அணுகுவதற்கு இப்போதும் காலம் கடந்து விடவில்லை. தனக்குள்ள இந்தச் சந்தர்ப்பத்தை ஜனாதிபதி சரியாகப் பயன்படுத்துவாரா?

-சாலையூரான்-

வாசகர் இதயம் பேசுகிறது

சி.பிரகாஷ் — கல்வயல்

நெடுங்காலமாய் சுடர் ஒளியில் வாசகனாய் இருப்பதில்நான் பெருமைப்படுகின்ற அதே நேரம் சுடர் ஒளியின் ஆக்கங்களுக்கும் நான் அடிமைப்படுகிறேன். கவிதைப்புனல், சாலையூரானின் அரசியல் கட்டுரைகள், விசித்திரனுடைய அதிரடிக் கடிதக் கருத்துக்கள் யாவுமே அருமையிலும் அருமை. இத்தனையும் தாங்கிவரும் சுடர் ஒளியானது என்றும் சுடர் விட்டுப் பிரகாசிக்க நான் மனதார வாழ்த்துகிறேன்.

எம்.எம்.ஹொப்டன் — மட்டக்களப்பு

சுடர் ஒளியே!

பக்கச் சார்பின்றி உண்மைச் செய்திகளை அரசியல் கட்டுரைகளாய் தரும் உன் பணிக்கு ஒரு சபாஷ். பித்தன் பதில்கள், சினிதகவல்கள், டேஸ்ட்கடை தணிகாசலம், கவிதைப்புனல் யாவுமே தரம். உன் சேவை மேலும் மெருகுடன் தொடர என் நல்வாழ்த்துக்கள்.

ஏ.டபிள்யூ.எம். ஜவாஹிர் — ஹொரவ்பொதானை

சுடர் விட்டு வீசும் இதழே உன்னைப் பரவசமாய் பார்க்கின்ற பலரில் நானுமோர் நாயகன், ஆகா அற்புதம் அத்தனையும் உண்மையில் உன் இதழ் சொட்டும் தேன் கருத்தே என்னைச் சொக்கவைக்கிறது.

வாழட்டும் நம் வாரமலர் சுடர் ஒளி
வளரட்டும் நம் வண்ணமலர் சுடர் ஒளி

எஸ். இன்பராஜ் — மீசாலை

எட்டுத் திசையெங்கும் சுடர் பரப்பும் சுடர் ஒளியே! நீ தாங்கிவரும் கவிதைப்புனல் தொடக்கம் அரசியல் அலசல் வரை அனைத்தும் அற்புதம். வாழ்க நீ. வளர்க உன் பணி.

கே.ஆர்.கதர்சன் — மல்லாகம்

சாலையூரானுடைய அரசியல் அலசல்கள் எதிர் காலத்தில் அரசியல் நகர்வுகள் எப்படி இருக்கப் போகின்றன என்பதை எதிர்வு கூறத்தக்கதாக உள்ளன. சாலையூரான் என்ன தீர்க்க தரிசியா? உண்மையில் இப்படியான தரம் மிக்க எழுத்தாளர்களுடைய கட்டுரைகளைத் தாங்கி வரும் சுடர்ஒளியே எங்கள் தமிழ்ச் சமூகம் சார்பில் நான் உன்னை பாராட்டி வாழ்த்துகிறேன்.

அ.றோசன் — மன்னார்.

உணர்வுகளை உறுத்தும் கருத்துக்களை உள்வாங்கி உலகெங்கும் ஒளிவீசும் சுடர் ஒளியே! இன்றைய காலத்தின் தேவை கருதி கனதியான கட்டுரைகளுக்கூடாக பல கருத்துக்களை பிரசவித்துக் கொண்டிருக்கிறாய்.

வார்த்தைகளின் நடையும். அது பேசுகின்ற விடயமும் என்னை வியக்க வைக்கின்றன. இந்த வியப்பு எனக்கு இன்னும் வேண்டும் என உன்னிடம் கூறி ஒவ்வொரு வாரமும் என் கரங்களில் நீ தவள வேண்டும் என உனை வேண்டி விடை பெறுகின்றேன் நன்றியுடன்.

எழுத்துச் சுதந்திரத்துக்கு தடை போட முயலும் துப்பாக்கி வேட்டுக்கள்

நடேசன்

எமது நாட்டில் மீண்டும் ஒரு தடவை ஜனநாயகம் புதைக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் மரணம் வெளிப்படுத்தி இருப்பது இதனைத் தான்.

மனிதாபிமானமற்ற துப்பாக்கி வேட்டுக்களால் எழுத்துச்சுதந்திரத்துக்கு தடைபோடலாம் என எண்ணுவது காற்றுக்கு அணை போட நினைப்பதற்கு ஒப்பானது.

அற்புதன், நிமலராஜன், நடேசன் என்று வெறியாட்டங்கள் தொடர்கின்றன. நடேசன் நடுநிலையாக உண்மையாக எழுதியதை துரோகிகளால் ஜீரணிக்க முடியவில்லை.

மட்டக்களப்பில் பழிவாங்கல்கள் தொடர்கின்றன. தமிழ்ப்பற்றுள்ளவர்கள், தமிழ்த் தேசியத்தைக் காப்பவர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள் ஆகியோர் கொலை செய்யப்படுகின்றனர். இவற்றைத் தடுக்க இதுவரை அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெறும் இத்தகைய அராஜகங்களுக்கு அரசு என்ன பதில் சொல்லப்போகிறது?

பாதிக்கப்பட்டவர்களுக்கும், பொதுமக்களுக்கும் உண்மை நன்கு புரியும். கள்ளனைப்பிடித்து காவலாளி வேலை கொடுத்திருப்பது எவரும் அறியாதது அல்ல.

பத்திரிகையாளர் நடேசன் மீது ஏற்கனவே இரண்டு முறைகள் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. நேர்மையான அரசாக இருந்திருந்தால் அப்போதே நீதியான விசாரணை நடத்தியிருக்கலாம். புலனாய்வுப் பகுதியினர் சூத்திரதாரிகளை மோப்பம் பிடித்திருக்க முடியும். அல்லது நடேசனுக்கு பாதுகாப்பு அளித்திருக்க வேண்டும். குற்றவாளியையும் கைது செய்திருக்கலாம். மாறாக கோட்டைவிட்டது ஏன்?

அம்பாறையில் ஊடகவியலாளர் ஆர்ப்பாட்டம்

சம்பவம் நன்கு திட்டமிட்டுச்செய்யப்பட்டிருப்பது புலனாகிறது. நுண்ணிய ஆயுதம்—பெறுமதி மிக்க ஆயுதம் — சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதனை வெளியே உள்ள எவரும் பயன்படுத்த முடியாது. அவ்வாறாயின் யார் இந்தக் கைங்கரியத்தைச் செய்தது?

இதுவரை அரச படைகள் எடுத்த நடவடிக்கைகளென்ன? நகரில் ஆயுதம் தாங்கிய படையினர் உஷார் நிலையில் நிற்கும்போது துப்பாக்கிதாரி காரியத்தை கனகச்சிதமாக முடித்து விட்டுத் தப்பியது எப்படி?

கருணாவினால் ஏற்பட்ட பிரச்சினையை இப்போது அரச பயங்கரவாதம் தனக்குச் சாதகமாகப்பயன்படுத்துகின்றது. இன ஒழிப்பு, அடக்குமுறைஎன்பவற்றைத் தூண்டி மீண்டும் யுத்தத்துக்கு வழிசமைக்கப்பார்க்கிறது. ஆனால் மனிதாபிமான மற்ற துப்பாக்கிவேட்டுக்கள் ஒருபோதும் எழுத்துச்சுதந்திரத்துக்குத் தடை போட்டதாகச் சரித்திரம் இல்லை.

ஒன்றன் பின் ஒன்றாக கடல் அலை போன்று கருத்தாளர்கள், சுதந்திரவாதிகள்,

(07 ஆம் பக்கம் பார்க்க...)

ஊடகமே உலகம்
(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை)
ஊடக டிப்ளோமா கற்கை நெறி
DIPLOMA IN MASS MEDIA
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. in MM. (Sri Lanka)
DIPLOMA IN BROADCASTING
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. in BC. (Sri Lanka)
சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்
தபால் மூலம்
6 மாத கால பாடநெறி
தொடர்பு: (011) 4512830
MMIC 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta, Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.,

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு சுரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைசெலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
ஜுன் 24 - 28 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

கல்முனையில்..
ஜூன் 05, 06, ஆம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
ஜுன் 11, 12, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
ஜூன் 15 - 20வரை
A.S.N. கற்றுவாவிடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

மதிய உணவு முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

STUDY IN INDIA

Engineering, Medicine & Pharamedical
ADMISSIONS 2004 - 05
VINAYAKA MISSIONS'GROUP OF COLLEGES
www.vinayakamissions.com

Vinayaka Missions is the leader in the field of education for more than two decades running. Totally 25 Educational Institutions imparting Medical, Engineering, Management and Computer education, in addition to various other courses.

A.V. INSTITUTE OF TECHNOLOGY (A.V. I. T)
(Approved by AICTE, New Delhi, Affiliated to Anna University)
Paiyanoor, Chennai, TAMIL NADU

B.Eng - 4 Years
* Electronics & Communication Engineering (ECE)
* Electrical & Electronics Engineering (EEE)
* Computer Science & Engineering (CSE)
* Mechanical Engineering (Mech)
Req. Pass in Maths, Physics & Chemistry at GCE A'Level.

V.M College of Pharmacy, Salem, TAMIL NADU
(Affiliated to Tamilnadu Dr.MGR Medical University)

B.Pharm - Bachelor of Pharmacy - 4 Years
Req. Pass in Biology, Physics & Chemistry at GCE A'Level.

Other under graduate courses available in
*Homeopathy & Surgery (BHMS)
* Physiotherapy (BPT)
* Optometry (B.Opto)
* B.Sc Nursing

Contact for more details:-
NN EDUCONSULT
181/1W.A.Silva Mawatha, Colombo-06.
Tel: 011 - 555 88 33 Fax: 011 - 555 88 44
E-mail: nnconsult@sltnet.lk

உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்

K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind-S.M.P.

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள். ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பனஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்

(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)

சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

500 gram 300/-, 250 gram 150/-
வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

Ayur Dr. K. Sivasubramaniam, முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு – 11. Tel: 2384645.

சுடர் ஒளி

ஜூன் 07 – 13, 2004

85, ஜெயந்த மவ்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

தளபதிகளின் சந்திப்பு! அமைதிக்கு வழிவகுக்குமா?

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமீப காலமாக வன்முறைகளும், படுகொலைகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. யுத்தநிறுத்தம் அமுலில் இருந்து வருகின்ற போதிலும் யுத்த சூழ்நிலையிலேயே மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரும், கிழக்கிலங்கை செய்தியாளர்சங்கத்தின் உபதலைவருமான ஐயாத்துரை நடேசன் கடந்த வாரம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களில் இது ஆகப் பிந்தியது.

இப்படியான சம்பவங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் மட்டும் அல்லாது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் இடம் பெற்று வருகின்றன.

தமிழ்த் தேசியத்தின் உயர்வினையும், எழுச்சியையும் நசுக்குவதற்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாக இந்த படுகொலைகள் கருதப்படுகின்றன.

ஏற்கனவே மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விரிவுரையாளர் கே. தம்பையா சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றும் ஒரு சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில், ஆயுதம் எதுவும் இன்றிச் சென்றுகொண்டிருந்த விடுதலைப்புலிப் போராளிகள் இருவர் நட்டநடு வீதியில் பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவை இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள்.

இதே சக்திகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளும் ஊடுருவி தமது கைவரிசையைக் காட்டி வருகின்றன.

சில வாரங்களுக்கு முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பெண்டுகள் சேனையில் ஜயந்தன் படை அணியைச்சேர்ந்த போராளி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆயித்தியமலையில் ஊனமுற்ற நால்வர் உட்படஏழுபோராளிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் எல்லாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பதவிக்கு வந்த பின்பே இடம்பெற்று வருகின்றன. அதுவும் கருணாவின் துரோகத்தனத்தின் பின்பே இடம்பெற்று வருகின்றன.

இத்தகைய சம்பவங்கள் நீடிப்பது நிச்சயமாக சமாதானப் பேச்சுக்கான சுமுகமான சூழ்நிலை உருவாவதற்கு உதவமாட்டாது. மட்டக்களப்பில் இறுதியாக இடம்பெற்ற படுகொலை சகலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கின்றது.

தமிழ்த் தேசியத்துக்கு உயிர் கொடுத்து தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி உறுதியுடனும், துணிச்சலுடனும் குரல் கொடுத்து வந்தவர் நடேசன்.

நடேசனின் படுகொலை, இலங்கை அரசினதும் மற்றும் அரச படைகளினதும் ஆதரவுடன் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது என்றே குற்றஞ்சாட்டப்படுகிறது. விடுதலைப் புலிகளும் இதனையே தெரிவிக்கின்றனர்.

இத்தகைய படுகொலைகள், வன்முறைகள் பற்றி ஆராய்வதற்காக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட தலைமையிலான உயர் மட்ட இராணுவக் குழு புலிகளின் அரசியல், இராணுவத் தளபதிகளுடன் கடந்த வாரம் பேச்சு நடத்தியது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் யுத்த சூனியப் பகுதியில் உள்ள வவுணதீவு பிரதேச செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் புலிகளின் சார்பில் புலிகளின் கிழக்கு மாகாண சிறப்புத் தளபதி ரமேஷும், மட்டு. – அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் மற்றும் சிலரும் கலந்து கொண்டனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம் பெற்று வருகின்ற படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பது தொடர்பாக இரு தரப்பினரும் பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சுக்கள் சுமுகமாக இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இந்தப் பேச்சுக்கள் வன்முறைகளை முற்றாகக் கட்டுப்படுத்த உதவுமா என்பதே முக்கிய கேள்வி. படைத் தரப்பு இதய சுத்தியுடன் செயற்பட்டால் மட்டுமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

கருணாவையும் அவரோடு வெளியேறிய சிலரையும் மற்றும் சில ஆயுதக் குழுக்களையும் படைத்தரப்பு பாதுகாத்து வருவதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டு வருகிறது. இதனை நிராகரிக்கவும் முடியாது. ஆகவே, தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிடும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். மட்டக்களப்பில் மீண்டும் அமைதியான சூழல் திரும்புவதற்கு படைத்தரப்பு இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும்.

அரசின் நெருக்கடியை தனக்கு சாதகமாக்க முனையும் ஜே.வி.பி

ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மே 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து, சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றி ஜனாதிபதியின் நிலைப்பாடுகள் குறித்துப் பேசியிருந்தார்.

அந்தச் சந்திப்பின்போது சோமவன்ஸ அமரசிங்க தலைமையிலான தூதுக்குழுவிடம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முக்கியவிடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

பிரதமரிடம் ஜே.வி.பி முன்வைத்த பிரதான விடயம், விடுதலைப்புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச ஜனாதிபதி விரும்புகிறாரா என்பதுதான்.

இந்த விவகாரத்தில் பிரதமரின் நிலைப்பாடு என்ன என்பதையும் ஜே.வி.பி தலைவர்கள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள முனைந்தனர்.

மத்தியகுழுவின் தீர்மானம் தீர்மானம்தான்!

விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை (ISGA) யோசனைகள் தொடர்பாக ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு ஏற்கனவே கூடி தீர்மானம் எடுத்து வெளியிட்டிருந்த அறிக்கையை ஞாபகப்படுத்தி பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை பேச்சுக்கான அடிப்படை ஆவணமாக ஏற்க முடியாமை பற்றி அன்று எடுத்த தீர்மானத்தில் எந்த மாற்றமும் கிடையாது என்று ஜே.வி.பிக்கு தெளிவுபடுத்தியிருந்தார்.

சமாதான முயற்சிகள் ஜனாதிபதியிடம்தான்!

மகிந்த ராஜபக்ஷ தனது சொந்த அரசியல் வியூகத்தின் அடிப்படையில் மிகவும் புத்திசாதுரியமாக நகரத்தொடங்கியிருக்கிறார் என்பது தெளிவாகியிருக்கிறது.

ஜே.வி.பியுடனான சந்திப்பின்போது சமாதான முயற்சிகள் தொடர்பில் சகல விடயங்களையும் ஜானாதிபதியே நேரடியாகக் கையாளுகிறார் என்பதைத் தெளிவுபடுத்தினார் பிரதமர்.

இந்த விவகாரங்கள் தொடர்பான மேலதிக கலந்துரையாடல்களை ஜே.வி.பி ஜனாதிபதியுடன் மேற்கொள்வதே பொருத்தம் என்பதையும் பிரதமர் நாசூக்காக சுட்டிக்காட்டினார்.

மகிந்த – ஜே.வி.பி தேன்நிலவு தொடருமா?

மகிந்த ராஜபக்ஷவுடன் ஜே.வி.பி ஒரு நல்லுறவை இப்போதைக்குப் பேணுவதற்கு முயல்கிறது என்பது தெளிவாகிறது. அவருடன் அடிக்கடி சந்தித்து நாட்டு நிலவரங்கள் தொடர்பாக கலந்துரையாடல்களை நிகழ்த்தவும் ஜே.வி.பி தலைவர் விரும்புகிறார் என்று தெரிகிறது.

மேற்படி சந்திப்பில் இந்த விருப்பத்தைத் தெரிவித்த ஜே.வி.பி தூதுக்குழுவினர் கூட்டணிக்குள் இருக்கும் கருத்து முரண்பாடுகளை பிரதமருடனான சந்திப்புக்களில் அலசி ஆராய்ந்து தீர்க்கலாம் எனவும் கூறி இருந்தார்கள். அவ்வாறான சந்திப்புக்களை ஜே.வி.பி மேற்கொள்வதை ஜனாதிபதி ஆதரித்து வரவேற்பாரானால் தான் தயாராகவுள்ளதாக பிரதமரும் கூறியுள்ளார்.

அனுராவா ராஜபக்ஷவா அடுத்த ஜனாதிபதி?

ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளிலும் ஏனைய அரசியல், பொருளாதார முயற்சிகளிலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஒரு 'எதிர்' அம்பாக மாற்றமுடியுமா என்று ஜே.வி.பி முயற்சிப்பதாக ஆய்வாளர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

அரசியல் நிர்ணயசபை அமைக்கப்பட்டு புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதற்கான சூழல் அற்றுப்போய்விட்ட இன்றைய நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளராகவுள்ள மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியின் அனுசரணை, ஆதரவை நிராகரிக்கவோ இழக்கவோ முடியாது என்பது தென்னிலங்கையின் அரசியல் யதார்த்தமாகும்.

ஆனால், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் நியமனத்தில் அனுரா பண்டாரநாயக்கா சும்மாவிடப்போவதில்லை. தானே அந்த ஸ்தானத்தை அலங்கரிக்க சகல தகுதிகளும் உடையவர் என்ற நிலைப்பாடே அனுராவிடம் உள்ளது.

இந்த நிலையில் சந்திரிகா – ராஜபக்ஷ – அனுரா உறவுநிலையில் மிகக்கவனமாக, நன்கு திட்டமிட்டு நெருக்கீடுகளை உருவாக்கி ஜே.வி.பி இலாபமடைய எத்தனிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இனி யார் இணைவார்?

ஜே.வி.பி செயலாளர் ரில்வின் சில்வா அண்மையில் ஜனாதிபதிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுக்கும் எழுதிய கடிதத்தில் புதிய அரசாங்கத்தின் கடந்த இருமாதகால ஆட்சியின் செயற்பாடுகள் ஜே.வி.பியுடனான புரிந்துணர்வு உடன் படிக்கையுடன் இணங்கிப் போகாமை பற்றி விபரித்திருந்தார்.

அமைச்சரவையில் மொத்தமாக 35 அமைச்சர்கள் இடம்பெற வேண்டும் என்று இணக்கம் காணப்பட்டபோதிலும் தற்பொழுது

அந்த எண்ணிக்கையை விட கூடுதலான அளவு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அக்கடிதம் கூறுகிறது.

இதுபற்றிய எவ்வித விட்டுக்கொடுப்புகளையும் செய்ய ஜே.வி.பி தயாரில்லை எனும் நிலை தொடருமெனில் ஜனாதிபதி எந்தப்புதிய கட்சியையும் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்குமாறு கேட்பதில் சிரமங்கள் தோன்றும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸோ அல்லது வேறு எந்தக்கட்சியோ புதிதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புடன் இணைவதாயின் சில அமைச்சுக்களையும் பிரதி அமைச்சுக்களையும் நிச்சயம் எதிர்பார்க்கும்.

அரசியல் நிர்ணயசபை அமைக்கப்பட்டு புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதற்கான சூழல் அற்றுப்போய் விட்ட இன்றைய நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளராகவுள்ள மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியின் அனுசரணை, ஆதரவை நிராகரிக்கவோ இழக்கவோ முடியாது என்பது தென்னிலங்கையின் அரசியல் யதார்த்தமாகும்.

அரசாங்கத்தின் பெரும்பான்மையை அதிகரித்துக்கொள்வதில் இது ஒரு உடனடி நெருக்கடியாக ஜனாதிபதிக்கு இருக்கும்.

ஜே.வி.பி கிளப்பியுள்ள பூதங்கள்

அவற்றைவிட ஜே.வி.பி அக்கடிதத்தில் குறிப்பிட்ட நிர்வாக ரீதியான நியமனங்கள் சார்ந்த கேள்விகளுக்கு ஜனாதிபதியால் ஓரளவு தீர்வு காணப்படும் வாய்ப்புக்கள் உள்ளன.

எனினும் இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாகவும் போர் நிறுத்தம், பேச்சுவார்த்தைகள், நோர்வே மத்தியஸ்தம், விடுதலைப் புலிகளின் இடைக்கால தீர்வு யோசனைகள் என்பன தொடர்பாகவும் ஜே.வி.பி குறிப்பிட்ட அக்கடிதத்திலும் அக்கடிதத்துக்கு வெளியேயும் கிளம்பியுள்ள பூதங்கள் ஜனாதிபதியை மிக மிக நெருக்கடிக்குள்ளாக்கக் காத்திருக்கும் ஜே.வி.பியின் திட்டங்களின் ஆரம்பமோ என்று எண்ண வைக்கிறது.

தூள் பறந்த விவாதம்

கடந்த திங்கட்கிழமை முன்னிரவு தொடக்கம் பல மணி நேரங்களாக ஜனாதிபதி தலைமையிலான குழுவினருக்கும் ஜே.வி.பி குழுவினருக்குமிடையில் –ஜே.வி.பி கடிதத்தில் கூறியுள்ள விடயங்கள் தொடர்பாகவும் அதன் ஏனைய கருத்து வேறுபாடுகள் தொடர்பாகவும் பேச்சுக்கள் இடம்பெற்றன.

பேச்சுக்களில் ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையில் அமைச்சர்களான மங்கள சமரவீர, மைத்திரிபால சிறிசேன, நிமால் ஸ்ரீ பாலடி சில்வா ஆகியோரும் ஜே.வி.பி சார்பில் நாயகமும் ரில்வின் சில்வா, அநுரா குமார திசநாயக்க ஆகியோரும் பங்குபற்றினர். பேச்சுக்கள் மிகக் காரசாரமான தொனியில் அமைந்திருந்தன என அறிய வருகிறது.

பொருளாதார ரீதியில் தனியார் மயப்படுத்தல் விவகாரங்கள், அரசியல் ரீதியில் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தை விவகாரங்கள், நிர்வாக ரீதியில் அரச நிறுவனங்களின் உயர் நிர்வாக அதிகாரிகளின் நியமனங்கள் என்பன தொடர்பாக மிகக் கரடுமுரடானவகையில் ஜனாதிபதிக்கும் ஜே.வி.பி காரர்களுக்குமிடையிலான சந்திப்பு தூள்பறக்கும் வகையில் விவாதங்கள் நிறைந்ததாக அமைந்திருந்ததாகத் தெரிய வருகிறது.

இரண்டாவது பெரிய அரசியல் சக்தியாகும் ஜே.வி.பி

விவசாயிகளுக்கான மானியங்களை கொடுக்கும்படியும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்கும்படியும் மக்கள் நலன்புரி நடவடிக்கைகளை ஆதரிக்கும்படியும் ஜனாதிபதியை வலியுறுத்துவதன் மூலமும் மக்கள் பக்கம் நின்று செயற்படும் பாணியிலான கோஷங்களை முன்வைப்பதன் மூலமும் மிகத் திடமான அரசியல் இலக்கு ஒன்றை ஜே.வி.பி எட்டிப் பிடிக்க முனைகிறது.

அதே வேளையில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடுகளை எதிர்ப்பதன் மூலமும் நோர்வேயின் பங்களிப்பில் தீவிர அதிருப்தியையும் விருப்பமின்மையையும் வெளியிடுவதன் மூலமும் நாட்டைக்காக்க இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பது போன்ற முயற்சிகளின் ஊடாகவும் சிங்கள மக்கள் மத்தியில் ஒருவித தீவிர தேசப்பக்தியுணர்வுத் தளத்தில் தனக்கான ஆதரவுத்தளத்தை கட்டி வளர்த்து தென்னிலங்கையின் மூன்றாவது பெரும் அரசியல் சக்தி என்ற ஸ்தானத்தில் இருந்து இரண்டாவது பெரும் அரசியல் சக்தி என்ற ஸ்தானத்தை அடைவதே ஜே.வி.பியின் இலக்காக தெரிகிறது.

ஜே.வி.பி போரைத் தொடங்குவதற்காகவா சமாதான முயற்சிகளில் முட்டுக்கட்டைகளைப் போட முனைகிறது என்றொரு கேள்வியும் நிலவுகிறது.

சமாதானப் பேச்சுக்கள் தொடங்கினால் மட்டுமே வாக்குறுதியளிக்கப்பட்ட சர்வதேச நிதியுதவிகள் கிடைக்குமென்ற நிலையில் – அவ்வாறு நிதியுதவிகள் கிடைத்தால் மட்டுமே ஜே.வி.பி சிங்கள மக்களுக்கு வழங்க விரும்பும் மானியங்கள், விலைக்குறைப்புகள் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்ற நிலையில் – ஜே.வி.பி ஏன் சமாதான முயற்சிகளுக்கு தீவிர நெருக்கடிகளை ஏற்படுத்த முனைகிறது? போர் தொடங்கினால் சிங்கள மக்கள் மத்தியில் தீவிர தேசப்பற்றை தூண்டி போரினூடாக அரசியல் வளர்ச்சியை தனது கட்சி தான் சம்பாதிக்கும் என்பதில் ஜே.வி.பி திடமாக இருப்பதாக தெரிகிறது.

அவ்வாறு போர் தொடங்கப்படாத அதே வேளையில் சமாதானமும் எட்டப்படாமலிருக்கும் பட்சத்தில் சந்திரிகா அரசின் மீது விடுதலைப்புலிகளின் நெருக்கடிகள் அதி

-யாழ். ஆத்மா-

கரிப்பதுடன் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் சிறுபான்மை மக்களின் ஆதரவு தேய்ந்து குன்றும்.

அத்துடன் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சிங்கள மக்களும் அதிருப்தியை உணர்வார்கள். புதிதாக உருவாகும் அதிருப்திச் சூழ்நிலையைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை தேய்த்துச் சிதைப்பதுடன் தான் இன்னும் பெரும் அரசியல் சக்தியாக எழுச்சி கொள்வதும் இலங்கையின் எதிர்கால அரசாங்கங்களில் ஆட்சியைத் தீர்மானிக்கும் பிரதான பங்காளிகளாகி ஆட்சியாளர்களாக மாறுவதுமே ஜே.வி.பியின் மூல உபயமாகும்.

ஜனாதிபதி மீதான ஜே.வி.பியின் சுற்றிவளைப்புக்கள்

இவ்வாறு ஜே.வி.பியினால் அரசியல் சுற்றிவளைப்புக்குள்ளாகியுள்ள ஜனாதிபதிக்கு

(7 பக்கம் பார்க்க...)

சூற்றுவாளி புஷ்!



இரண்டு வருடங்களுக்கு முன்னர் - செப்ரெம்பர் 11 இல் அமெரிக்கா புளுதி மண்டலத்தினுள் மூழ்கி எழுந்தது. உலக வர்த்தகக் கட்டடங்கள் இரண்டு பூமி நோக்கி விரைய வான் நோக்கிச் சிரிய அந்த புளுதிக்குள் நடப்பட்ட விதைதான் அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போர்.

உலகம்பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கிறது. அந்த ஆபத்தில் இருந்து உலகைக் காக்க ஒன்று திரளுங்கள் என்று அறைகூவல் விடுத்துக் கொண்டு களம் இறங்கியது அமெரிக்கா.

இரண்டாண்டுகள் கழிந்து விட்டன. இடையில் முழுமையாக இரண்டு போர்களை அமெரிக்கா நடத்திவிட்டது. பயங்கரவாதத்தை ஒழிக்கவென உலகின் முதன்மையான இராணுவம் ஆரம்பித்த இந்தப் போரால் இப்போது முழு உலகமுமே ஆபத்துக்குள் சிக்கிக் கொண்டு விட்டது என்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை. புஷ் நிர்வாகத்தின் மீது அது ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுக்கிக் கொண்டே போகின்றது.

உலகைக் காப்பாற்ற ஆபத்பாந்தவனாகப் புறப்பட்ட புஷ், இப்போது உலகையே ஆபத்தில் சிக்க வைத்து விட்டார் என்ற முரண்பட்ட வினோத நிலை. அவரும்தான் என்ன செய்வார். இந்த இடியப்பச் சிக்கலை நீக்குவதற்கு எவ்வளவுதான் முயன்றாலும் ஏதோ ஒரு வகையில் அது மேலும் மேலும் பிரச்சினையை இறுக்கிக் கொண்டே செல்கின்றது.
தீவிரவாதத்துக்கு எதிரான போருக்குப் பின்னர்தான் பெரிய அளவில் தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. ஈராக்கிலிருந்து அனேகமாக ஒவ்வொரு நாளும் சவப் பெட்டிகள் வாஷிங்டன் வந்து சேர்கின்றன.

அடிமேல் அடி. குற்றச்சாட்டுக்கு மேல் குற்றச்சாட்டு. இதற்கிடையில் அடுத்த அதிபர் தேர்தல் வேறு, என்னதான் செய்வார் புஷ்? வெட்ட வெட்டத் தளைக்கும் வாழையாகத் தீவிரவாதம் வளர்கிறதே தவிர குறைவதாகத் தெரியவில்லை.
அல் - குவைதாவின் வலைப் பின்னலில் மட்டும் சுமார் 18 ஆயிரம் பேர் இன்னும் இருக்கிறார்கள் என்கிறார்கள். அவர்கள் எப்போது வெடிப்பார்கள்? எங்கு விமானத்தை மோதுவார்கள்? யாருக்கும் தெரியாது.



ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். புஷ் எதிர்பார்த்த வேகத்தில் தீவிரவாதத்தை உலகில் இருந்து அழிக்க முடியப்போவதில்லை. அதற்கிடையில் அவரின் இரண்டாவது பதவிக் காலம் கூட முடிந்து விடக்கூடும். உலகை ஆபத்துக்குள் சிக்க வைத்த முதல் குற்றவாளியாக இப்போது உலகின் பொலிஸ்காரன்தான் தலைகுனிய வேண்டி உள்ளது.

ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கப் படையினர் மீது மேலும் மேலும் குற்றச்சாட்டுக்கள் வேறு அதிகரித்து செல்கின்றன. உலகின் முன் குற்றவாளியாகி நிற்கின்றார் புஷ். இதிலிருந்த மீண்டு விட அவர் ஈராக்கை அதன் நிர்வாகத்திடம் ஒப்படைத்து விட அவச்ர அவசரமாக முயன்று வருகிறார். ஆனால், அது மட்டுமே அவரது குற்றங்களை மன்னித்து விடப் போதுமானவையாக இருக்கப் போவதில்லை.



இருளை நீக்கும் ஒளி...

காலையில் உதிக்கும் சூரியன் மாலையில் அஸ்தமிக்கும் போது உலகெங்கும் இருள் கவ்விக் கொள்கிறது. இது இயற்கையின் விதி.
மனித வாழ்க்கைக்கும் பொருந்தும். இயற்கையின் கைப்பிடிக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் உங்களின் வாழ்க்கையைப் பற்றி என்றும் சிந்திக்கும் செலிங்கோ லைப், உங்களுக்காக அறிமுகப்படுத்தும் புதிய ஆயுட் காப்புறுதி செலிங்கோ பிரதீப்!
நீங்கள் இல்லாத நேரத்திலும் உங்கள் மனைவி, பிள்ளைகளின் வாழ்க்கைக்கு ஒளியாகும் காப்புறுதி செலிங்கோ பிரதீப்!

ஒரு இலட்சம் ரூபா ஆயுட் காப்புறுதியைப் பெற, 5 வருடத்திற்கும் நீங்கள் செலுத்த வேண்டியது ரூபா.1,250/- மட்டுமே.

மேலதிக தகவல்களுக்கு
2461461 ஐ அழையுங்கள்.

செலிங்கோ
பிரதீப்
வாழ்வின் புது ஒளி

செலிங்கோ லைப்
வெறுமனே சிறுசேமிப்பை மட்டுமே காப்பது - செலிங்கோ
இல. 154 காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2461461 தொலைநகல்: 2437613
மின்னஞ்சல்: pradeepa@ceylinco.lk
வெப்தளம்: www.ceylincolife.com/pradeepa
இலங்கையில் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம்.

மேலும் விபரங்களுக்கு
இந்த கூப்பனை நிரப்பி அனுப்பவும்
பிரிவு முகாமையாளர் - செலிங்கோ பிரதீப்
இல. 154, காலி வீதி,
கொழும்பு 03.

பெயர்: _____
முகவரி: _____
_____
தொலைபேசி: _____

பித்தன் பதில்கள்

டி.தோமஸ், நீர்கொழும்பு.

கேள்வி:– அன்பின் பித்தா! மழையோ, வெய்யிலோ இல்லாத போது காதல் ஜோடிகள் கோல்பேஸில் குடைவிரித்துக் கொண்டிருப்பதேன்?

பதில்:– அவர்களுக்கு ஏதாவது கொடுக்கல் வாங்கல் இருக்கும். அதையேன் மற்றவர்களுக்கு காட்டிக்கொள்வான்என்று குடையால் மறைக்கிறார்களோ.... என்னவோ.

எம்.கஜேந்திரன், யாழ்ப்பாணம்.

கேள்வி:– Dear பித்தா! திருமணமான பின் பெண்கள் வாழ்வினில் சுமைகளை சுமக்கிறார்களா?

பதில்:– திருமணமானபின் மட்டுமா சுமக்கிறார்கள். இப்போது சிலர் திருமணம் ஆகாமலும் சுமக்கிறார்களே.. நான் சுமைகளைச் சொன்னேன்.

அ.ரேகா, முத்தரிப்புதுறை.

கேள்வி:– Dear பித்தா! நான் ஒரு ஆசிரியை..... எனது வகுப்பறையில் ஒரு மாணவன் ஏதும் எழுதும் போது ''ண'' என்பதற்குப் பதிலாக ஒரு சுழியை இணைத்து '' 6000 '' என்று எழுதுகிறானே. அப்படி அவன் எழுதுவதற்கு என்ன காரணமாக இருக்கும்?

பதில்:– தமிழ்வளரணும் என்று அம்மாணவன் நினைக்கிறானோ என்னவோ?

தி.ரங்கன், மட்டுவில்.

கேள்வி:– மருமகளை வருத்தும் மாமியாரை கேள்விப்பட்டிருப்பீர். மாமியை வருத்தும் மருமகளைப் பற்றி உமது கருத்து?

பதில்:– தங்களுடைய சுயநலத்துக்காக மற்றவர்களை எவர் வருத்துகிறார்களோ அவர்கள் அப்பாவத்தின் பலனை என்றோ ஒருநாள் அடைந்தே தீருவார்கள்.

மாமியாரை வருத்தும் மருமகளுக்கு என்றோ ஒரு மருமகள் வரலாம் தானே வாழ்வில்.

டபிள்யூ (w) முன்னுக்கு இருக்கு Cow க்கு டபிள்யூ (w) பின்னுக்கு இருக்கும். ஓ.கே தானே பிரதீபன்.

ரி.சுரேந்திரன், கோண்டாவில்.

கேள்வி:– Dear பித்தா! ஆண்கள் தங்கள் மனைவியரை நிலவுக்கும், பூவுக்கும் ஒப்பிடுகின்றார்கள். ஆனால், பெண்கள் ஏன்? தங்கள் கணவன்மாரை எதற்கும் ஒப்பிடுவதில்லை?

பதில்:– ஏன் ஒப்பிடுவதில்லை. கல்லானாலும் கணவன் என்றும், புல்லானாலும் புருஷன் என்றும் கல்லுக்கும் புல்லுக்கும் ஒப்பிடுகிறார்களே.

உ.ஜெயந்தினி, மருதங்கேணி.

கேள்வி:– Dear பித்தா! தமிழீழ விடுதலைப்புலிகளை ''பயங்கரவாதிகள்'' என்று அபாண்டமாய் பட்டம் கட்டிய அமெரிக்கா, ஈராக்கிய சிறைக் கைதிகளை கீழ்த்தரமாகவும் பயங்கரமாகவும் சித்திரவதைக்குட்படுத்துகிறதே இது பற்றி நீர் சொல்ல விரும்புவது?

பதில்:– அமெரிக்கர்கள் உலகப் பொலிஸ்காரர்கள் தாங்கள் தான் என்ற நினைப்பில் வெளிவிவகார விடயங்களில் வீணாகவும், தானாகவும் மூக்கை நுழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், எல்லா நாடுகளும் அமெரிக்கர்களுடைய ஏற்பாடுகளையும் ஏற்பதாக இல்லை. அதிலும் ஈராக்கியர்கள் ஏற்பதற்கில்லை. எதுதான் என்னவோ சிறைக்கைகிகளின் சித்திரவதைக்கெல்லாம் சேர்த்து அமெரிக்காவுக்கு ஈராக்கியர்கள் வியட்நாம் விளைவுகளை ஏற்படுத்தப் போவதுமட்டும் உண்மை.

குமணன், உரும்பிராய்.

கேள்வி:– Dear பித்தா! பொதுவாகப் பல பெண்கள் வேலைக்குச் செல்லும் போது ஏன் இரண்டு Bag கொண்டு செல்கிறார்கள்?

பதில்:– ஒன்று வீட்டிலிருந்து தொழிலுக்கு உபயோகமான பொருட்களை வைத்துக் கொண்டு செல்வதற்கு. மற்றையது தொழில் கூடங்களில் இருக்கிற பொருட்களை எடுத்து வைத்துக்கொண்டு வீடு வருவதற்காகவும் இருக்கும்.

சுகி, கிளிநொச்சி.

கேள்வி:– Dear பித்தா! நான் கண்ணன் என்பவரைக் காதலிக்கிறேன். அவரை நான் நக்கலாகவும் அதே நேரம் தூக்கலாகவும் கொள்ளத்தக்க ஒரு கவிதை சொல்வீரா பித்து?

பிற்றிய அறிவை முறையாக பயின்று கொள்ளாத நிலையில் மேலைத்தேய நாகரீகம் எமது சமூகத்தினிடையே வேரூன்றி நிற்கும் பாருங்கள்.

தி.சாரங்கன், கல்வியங்காடு.

கேள்வி:– என் மனைவிக்கு சிங்களம் தெரியும் எனக்கு தெரியாது. கையடக்க தொலைபேசியில் சில இளைஞர்களுடன் சிங்களத்தில் மனைவி உரையாடுகிறார். சிரித்தும் சந்தேகத்திற்கிடமான முறையிலும் கதைக்கிறாள். இவளை எப்படி கட்டுப்படுத்துவது பதில் தரவும் பித்து அண்ணா?

பதில்:– சந்தேகப்பட்டான், சந்தோஷம் கெட்டான். ஆனபடியால் எதனையும் எடுத்த எடுப்பிலே சந்தேகப்படாதையும். சாதுரியமாக சம்பவங்களின் உண்மைத் தன்மைகளை அறிந்து கொள்ள முயற்சியும், அத்தோடு உம் மனைவி பிற ஆடவரோடு சிங்களம் பேசுவதை தடுக்க அக்கறையாக இருக்கிற உமக்கு சிங்களம் பேசுவதைக் கற்றுக் கொள்ள ஆர்வம் இல்லையா?

தி.தயானந்தன், கல்வியங்காடு.

கேள்வி:– டியர் பித்துக்குட்டி, எனது வகுப்பு ஆசிரியை நான் வகுப்புக்கு நேரம் பிந்திப் போனால் பிள்ளை குட்டி சுகமா? 1 வது மனைவியா, 2 வது மனைவியா வராமல் தடுத்தவள் என கேள்வி கேட்கிறார். இவருக்கு என்ன பதில் கூறலாம்?

(மழுப்பாமல் முழுமையாக விடை தரவும்)

பதில்:– இப்படிப் பதில் சொல்லும்

''ஒருத்தரும் என்னைத் தடுக்கலே ரீச்சர்''

''குரங்கு ரீச்சர், பனங் கொட்டை ரீச்சர்''

''பொறுக்கி ரீச்சர் எறிஞ்சது ரீச்சர்''

''அதைப் பார்த்துக் கொண்டு நின்றதில லேட்ராச்சு ரீச்சர்'' இப்படிச் சொன்னால்

ரீச்சரை திட்டிய மாதிரியும் இருக்கும். தாமதமாகப் பாடசாலைக்கு போனதற்கான காரணத்தை சொன்ன மாதிரியும் இருக்கும்.

க.நதீஸ், கோட்டைக்காடு.

கேள்வி:– ஒரு ஆண் வாழ்க்கையில் முன்னேறுவதால் அவனுக்கா அல்லது அவனுடைய மனைவிக்கா அதிக பலன் கிடைக்கிறது?

பதில்:– இதிலென்ன சந்தேகம். முன்னேறுவதால் பெண்களுக்குத் தானே அதிக பலன். நான் வாழ்க்கையில் முன்னுக்கு வருவதைத்தான் ''முன்னேறுதல்'' என்று சொன்னேன்.

ஜே.கஜனி, வட்டுக்கோட்டை.

கேள்வி:– பித்தா! நாம் திருமணம் முடித்த பின்பு கணவரிடம் அன்பு வைப்பதா? அல்லது அம்மாவிடம் அன்பு வைப்பதா?

பதில்:– கணவனோ புதிதாக இணையும் தாலிகொடி உறவு. அவரிடத்தில் அன்பை வைக்க வேண்டும். அம்மா என்பவர் எம் இருப்புக்குரியவரான தொப்புள் கொடி உறவு. அவரிடத்தில் ஏற்கனவே நாம் வைத்த அன்பினை மேலும் வளர்க்க வேண்டும்.

இ.நெடுஞ்செழியன், சுன்னாகம்.

கேள்வி:– முரளிதரனின் பந்துவீச்சை அவுஸ்ரேலியர்கள் பந்தை எறிகிறார் என்று குற்றம் சாட்டுவதைப் பற்றி என்ன நினைக்கின்றீர் பித்தா?

பதில்:– அவர் எறியவில்லை... சரி அவுஸ்ரேலியர்கள் கூறுவது போல முரளிதரன் பந்தை எறிகிறார் என்றே வைத்துக்கொள்வோம். அப்படி எறிந்தாலும் பிரட்லி, கிலெஸ்பி, மக்ராத் போன்றோர் பந்து வீசுகின்ற வேகத்தை விட மிகக் குறைவாகத்தானே முரளி எறிகிறார். அப்போ அவுஸ்ரேலியர்கள் விளாசலாம் தானே. என்னையா கதை இது!

பிரசாத், வத்தளை

கேள்வி:– ஒரு ''ஈ'' இருந்த ரீ (Tea) யை குடித்து விட்டேன் எனக்கு பயமாயிருக்கு பித்தா?

பதில்:– ஏன் பயப்படுகிறீர் ஒரு ''ஈ'' (e) இருக்கிற ரீ (Tea) யை குடித்ததற்கே பயப்படுகிறீர். நான் தினமும் இரண்டு ''ஈ'' (e) இருக்கிற ''கோப்பி'' (Coffee) யை குடிக்கிறேன் ஆனால், நான் பயப்படவில்லையே.

பிரபு, கோண்டாவில்

கேள்வி:– திருமணமான அழகான பெண்ணொருத்தி என்னை காதலிப்பதாக கூறுகிறாள். நான் என்ன செய்வது?

பதில்:– நீர் திருமணமாகாத பெண்ணொருத்தியை காதலிப்பதாக பொய் சொல்லிவிடும்.

பா.குட்டி, முல்லைத்தீவு.

கேள்வி:– புதிய அரசுடன் நடைபெறப் போகும் பேச்சு வார்த்தைக்கு கருணா, பெருமாள், டக்ளஸ் இம் மூவரையும் தமிழரின் பிரதிநிதியாக அனுப்பினால் தமிழரின் தலைவிதி எப்படி இருக்கும்?

பதில்:– ஒப்பேறாத ஒன்றுக்கு ஒரு கேள்வி தேவையா? குட்டி.

பித்தனின் கேள்வி

கேள்வி:– பெண்களிடம் ஆண்கள் எதிர் பார்ப்பது என்ன?

வாசகர் பதில்கள்

ஜூவன் – நீர்கொழும்பு.

தேவையான நேரத்தில் தேவையானவற்றை தருவதை எதிர்பார்ப்பார்கள்.

மஞ்சுளா – திருகோணமலை.

காதலிப்பவராயின் காதலனின் பணப்பையில் பணத்தை எதிர்பார்ப்பார்கள்.

பிரேம் – யாழ்ப்பாணம்.

திருமணமானவராயின் நெருங்கிய அன்பையும், நீண்ட ஆயுள் காலத்தையும் ஆண்களிடமிருந்து எதிர்பார்ப்பார்கள்.

ரோகினி – கிளிநொச்சி.

ஒரு ஆணோடு ஒரு பெண்ணானவள் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து செல்லும்போது அந்த ஆண் பள்ளமுள்ள பாதையில் மோட்டார் சைக்கிளை செலுத்துவானா என்று எதிர்பார்ப்பாள்.

சதீஸ் – கொழும்பு.

ஆண்களிடம் பெண்கள் எதை எதிர் பார்க்கிறார்களோ அதையே பெண்களிடம் ஆண்களும் எதிர்பார்க்கிறார்கள்.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான –
குறும்பான –
யதார்த்தமான –
பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஜூன் 13 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு – 14.

ஞா.கிளமன், வவுனியா.

கேள்வி:– நடிகை என்றால், பலதும் நினைக்கின்றார்களே, ஏன்?

பதில்:– பெயர்தான் வெள்ளித்திரை! உண்மையில் அது இருட்டறை.

மை.டிரோன், நாவலப்பிட்டிய.

கேள்வி:– அன்பின் பித்தா! பெண்களுக்கு எது அழகு?

பதில்: – உங்கள் கண்கள் மேய்வது எங்கே.

தேவகி, மட்டக்களப்பு.

கேள்வி:– பெண்கள், பையன்களுடன் சேர்ந்து ஊர் சுற்றலாமா?

பதில்:– துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.

கு.யான்சன், தாளையடி.

கேள்வி:– பித்தா! தயவு செய்து ஒரு ஜோக் தாரும்.

பதில்:– ஒரு ஆச்சிரமத்தில் தலைமைத் துறவி ஒருவர் மரணப்படுக்கையில் உயிருக்காக ஊசலாடிக் கொண்டிருந்தார். இத்துறவியை சூழ நின்ற சீடர்களின் ஒருவன் ''குருவே.. நீங்கள் இல்லாத இந்த ஆச்சிரமத்தில் உங்களைப் போல ஒரு நேர்மை நிதானம் பரிவு கொண்ட குறிப்பாக உயர் ஒழுக்கமுடைய ஒரு தலைமைத் துறவி எமக்கு கிடைக்குமா?'' எனக் கண்ணீர் வழிந்தோட கவலையோடு கேட்டான்.

''சீடனே கவலைப்படாதே.. இங்கே என்னைவிட மிக ஒழுக்க முடைய சிவானந்தா என்ற ஒரு சீடன் இருக்கிறான். அவனை இனி இந்த ஆச்சிரமத்துக்கு தலைமைத் துறவி ஆக்குங்கள்'' எனப் பெருமிதத்துடன் கூறினார். அப்போது இன்னோர் சீடன்,

''குருவே... சிவானந்தா மிக ஒழுக்கமுடையவன் என்று எப்படி நீங்கள் உறுதிபடக் கூறுகிறீர்கள்?'' என மிகப் பணிவோடு கேட்க.... அதற்கு அந்தத்தலைமைத் துறவி சொன்னாராம்.

''சிவானந்தா எனக்குப் பிறந்த மகன்'' என்று.

இ.ஜெகரூபன், ஆவரங்கால்.

கேள்வி:– எனது மனைவிக்கு ஆசையா எதையாவது கொடுத்தால் மாமி தனக்கும் தருமாறு கேட்கிறார். மாமிக்கும் கொடுக்கலாமா?

பதில்:– மனைவிக்கு கொடுக்கிறதைக் கொடும் மறுப்பில்லை. ஆனால், மாமிக்கு மனைவிக்கு முன்னால் கொடுக்காதையும்.

த.தர்சிகா, சாவகச்சேரி.

கேள்வி:– நான் நடிகர் மாதவனோடு டூயட்பாடி ஆடுவதாக கனவு கண்டேன். அப்படி ஆடும் பொழுது என் தாவணி அவிழ்ந்து தரையில் விழுந்து விட்டது. இந்த விழுகையை விளக்குமுகமாக இரண்டு வரிக் கவியில் பதில் சொல்ல முடியுமா பித்தா?

பதில்:– O... Yes... தர்சிகா உடையோ உரிந்தது இடையோ தெரிந்தது!

பு.பிரதீபன், கோண்டாவில்.

கேள்வி:– நண்பனே பித்தா! பெண்களுக்கு முன்னுக்கு இருக்கும். பசுவுக்கு பின்னுக்கு இருக்கும். அது என்ன? (மழுப்பாமல் பதில் தாரும் பித்தா)

பதில்:– பெண்களை ஆங்கிலத்தில் Woman என்றும் பசுவை Cow என்றும் சொல்வதுண்டு. ஆனபடியால் Woman க்கு (ஒரேவரியில்இரண்டுபொருள்படக்கூறும்)

பதில்:– கண்ணா....!

நீ சுமக்கும் பூக்களை
நான் சுமப்பேன்
ஏனெனில்
அப்(பு) பூவாய்
நீ இருப்பதால்

வி.மயூரா, யாழ்.பல்கலைக்கழகம்.

கேள்வி:– ''கலை'' என்றால் என்ன பித்தா?

பதில்:– உள்ளார்த்தமான உணர்வுகளை ஊடறுத்து ஆத்மீகமான போதனைகளைத் போதிப்பதே ''கலை'' ஆகும்.

த.வினிதா, மல்லாகம்.

கேள்வி:– மேலைதேச நாகரிக வருகையானது தமிழ் கலாசாரத்தை சீரழித்துக் கொண்டு இருக்கிறதே பித்தா?

பதில்:– மேலைத்தேய நாகரிக வருகையால் தமிழ் கலாசாரம் மட்டுமா சீரழிந்து கொண்டு இருக்கிறது. எமது சமூகத்தினர் ஒரு கட்டமைப்புக்குள் வைத்து காப்பாற்றிக்கொண்டு இருக்கிற சடங்குகளும், சம்பிரதாயங்களும் கூடத்தானே சீரழிக்கப் பட்டுக்கொண்டு இருக்கின்றன. வரும் காலத்தில் எமக்கு அடுத்தடுத்த சந்ததியினர் தமிழ் கலாசாரத்தைப்

தேன் கூட்டுக்கு கல் எறிந்தால்...!

இலங்கையில் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பது மீண்டும், மீண்டும் உறுதி செய்யப்பட்டு வருவதை அண்மைக் கால சம்பவங்கள் ஆணித்தரமாக வெளிக்காட்டிவருகின்றன. புதிய அரசு பதவியேற்ற பின்னர் மலையகத் தமிழர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

தென்பகுதியில் தோட்டப்புறங்களில் வாழும் தமிழர்கள் எந்த நேரத்திலும் தமக்கு எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்துடன் வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

புதிய அரசு பதவியேற்று மூன்று மாதங்களில் நான்கு வன்முறைச் சம்பவங்கள் மலையகத் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

குறுகிய இடைவெளிக்குள் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட இந்த மிலேச்சத்தனமான சம்பவங்கள் காரணமாக மலையகத்தவர், புதிய அரசு தமக்கு பாதுகாப்பு வழங்காது என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கந்தப்பொல கலவரம் முடிவுற்று அதன் சூடு தணிய முன்னரேயே இங்கிரிய தோட்டத்தில் வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. அதன் பின்னர் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

அத்தாக்குதல் நடந்து ஒரு சில தினங்கள் கடந்த நிலையில் புளத்சிங்கள, மில்லகந்த தோட்டத்தமிழர் மீது பாரிய வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு அவர்களின் லட்சக் கணக்கான பெறுமதியான சொத்துக்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இங்கு பத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் வாள் வெட்டுக்கும் கண்மூடித்தனமான தாக்குதலுக்கும் உள்ளாகினர். ஒருசிலர் கை, கால்களை இழந்து ஊனமாக்கப்பட்டுள்ளனர்.

இந்த நாட்டில் இனரீதியான பிரச்சினையே இல்லை. பயங்கரவாத பிரச்சினையே உள்ளது. என சர்வதேசத்துக்கு தெரிவித்து வரும் அரசு மலையகப் பகுதிகளில் தமிழர்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல் சம்பவங்களுக்கு என்ன பதில் கூறப்போகின்றது?

புளத்சிங்கள மில்லகந்த தோட்டத்தில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவங்களின் பின்னணியில் புதிய அரசின் பிரதேச சபை உறுப்பினர்களும் அரசின் உயர் பதவியில் உள்ள நபர்களின் நெருங்கிய சகாக்களின் அடிவருடிகளுமே இருந்தனர் என மில்லகந்த தோட்ட மக்கள் தெரிவித்தனர்.

பத்திரிகையாளர் பார்த்திருக்க காடையர் அட்டகாசம்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கச் சென்ற மலையக மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் சிலருடன் பத்திரிகையாளர்களும் கடந்த புதனன்று அங்கு சென்றிருந்தனர்.



சேதமாக்கப்பட்ட வீடுகளில் ஒன்று

பத்திரிகையாளர்கள் சென்றபோது தோட்டத்தைச்சுற்றி பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

அப்படி இருந்தும் அதை உடைத்துக் கொண்டு இரண்டு ஆட்டோக்களில் ஏழு காடையர்கள் தோட்டத்துக்குள் புகுந்து கலாட்டாவில் ஈடுபட்டனர். தோட்டத் தமிழர்களைப்பார்த்து தோட்டத்தை விட்டு விரட்டுவோம் என அவர்கள் சத்தமிட்டனர்.

அருகில் காவல் கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரியிடம் ''இவ்வளவு சேதங்கள் ஏற்பட்ட பின்னரும் காடையர்கள் இப்படி வந்து மீண்டும் கலாட்டாவில் ஈடுபடுவதைப்பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே?'' என்று பத்திரிகையாளர்கள் கேட்டனர்.

அதற்கு அந்த பொலிஸ் அதிகாரி ''நாங்கள் என்ன ஐயா செய்ய முடியும்?'' என்று பதில் அளித்தார்.

சம்பந்தப்பட்ட நபர்கள் அரசியல்வாதி ஒருவரின்அடியாட்கள் என அந்த தோட்டத்தில் உள்ள வயோதிபர் தெரிவித்தார்.

இப்படி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட ஒரு சூழ்நிலையில் பாதுகாப்புப் படையினர் புடைசூழ மலையக அரசியல்வாதி ஒருவர் அச்சமயம் அங்கு வந்து நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருந்தார். வேகமாக இரண்டு ஆட்டோக்களில் சம்பவ இடத்துக்கு வந்த இதே காடையர் கும்பல் அவர் மீது ஆட்டோவை மோத எத்தனித்தது. பின்னர் பொலிஸார் ஆட்டோவைச் செலுத்தி வந்த காடையர் ஒருவரைக்கைது செய்துகொண்டு சென்றனர். அந்த நபரும் பின்னர் விடுவிக்கப்பட்டுவிட்டார் என்று தெரிய வந்தது.

பத்திரிகையாளர்கள் நிலைமைகளை நேரடியாக அவதானித்துக்கொண்டிருக்கும் போதே இப்படியான சம்பவங்கள் இடம் பெற்றனவென்றால் சம்பவம் இடம்பெற்ற கடந்த 31ஆம் திகதி என்ன நடந்திருக்கும் என்பதை ஊகிக்க வேண்டியதில்லை.

31ஆம் திகதி நடந்தது என்ன?

மில்லகந்த தோட்டத்தில் சுமார் 300 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் வசிக்கிறார்கள். தோட்டத்தில் வசிக்கும் இருநூறுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வெளியிடங்களில் தொழில்புரிந்துவிட்டு தினமும் வீடு திரும்புபவர்கள்.

பெரும்பாலான வீடுகள் அவர்களின் சொந்த உழைப்பில் கட்டப்பட்டவை. பெரும்பாலான மக்கள் லயன்களில் இருந்து வெளியேறி தமது லயன்களுக்கு அண்மித்த பகுதியில் உள்ள நிலங்களில் வீடுகளை கட்டியுள்ளனர்.

வீடுகளில் அவர்களால் சிறுகச்சிறுக சேமித்து வாங்கப்பட்ட மின்சார உபகரணங்கள் உட்பட்ட பொருட்கள் அனைத்தும் சம்பவ தினம் கொள்ளையடிக்கப்பட்டன. ஒரு குடியிருப்புக்கூட காடையர்களின் கைவரிசையிலிருந்து தப்பவில்லை.

ஒரு லயன் குடியிருப்பில் 12 வீடுகள் முற்றாக சேதமாக்கப்பட்டன. அங்கிருந்த ஒரு பொருளும் மிஞ்சவில்லை. சகல பொருட்களும் சூறையாடப்பட்டன. பின்னர் தீயிட்டுக்கொளுத்தப்பட்டன.

நாட்டில் எந்தப்பிரச்சினை வந்தாலும், தமது போக்கில், எந்த அரசியல் பிரச்சினைகளுக்குள்ளும் தலையிடாமல் வாழும் அப்பாவிகளான தோட்டத்தமிழரை சீண்டிவிட்டு எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் நடவடிக்கையின் ஆரம்பமா இது? அமைதி காத்துவரும் மலையகத்தமிழரை அடித்து உதைத்து ஐயா சாமி போட வைக்கும் திட்டமா இது? என்று யோசிக்க வேண்டியிருக்கிறது.

அரசியல் சமூக நீரோட்டத்தில் படிப்படியாக கால்பதிக்கும் மலையகத் தமிழரை அடித்துத் தன்புறுத்தி அவர்களின் சொத்துக்களை சூறையாடுவதன் மூலம் அவர்களை அடக்கி ஒடுக்கி வைக்கலாம் என பேரினவாதிகள் திட்டமிட்டு மேற்கொள்ளும் செயற்பாடுகள் அமைதியான மலையகத்தில் பூகம்பத்தை உருவாக்க எடுக்கும் நடவடிக்கையாகவே அமையும்.

சிறுபான்மை இனம் என்பதற்காக, தாம் நினைத்த போது அடிக்கவும், தேர்தல் வரும்போது அரவணைக்கவும் மேற்கொள்ளும் முயற்சிகள் இனி மலையகத்தில் எடுபடப்போவதில்லை.

சேதமடைந்த வீட்டிலிருந்து மீட்கப்படும் மூதாட்டி

கடந்த மூன்று மாதங்களாக அதாவது, புதிய அரசு பதவியேற்ற பின்னர் மலையகத்தவர் மீது நான்காவது முறையாக அரங்கேற்றப்பட்ட அராஜகம் மிகவும் கண்மூடித்தனமானதும் மோசமானதுமாகும். இது போன்ற தாக்குதல்கள் இனியும் நடக்காது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

தென்பகுதியில் பெரும்பான்மை இனத்தவர்கள் செறிந்து வாழும் பகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் பயத்துடனும், பீதியுடனும் வாழ்ந்து வருகின்றனர். புளத்சிங்கள பகுதியில் பல தோட்டங்களை சேர்ந்த தொழிலாளர்கள் காடையர்களால் மிரட்டப்படுகின்றனர். பஸ்ஸில் பயணம் செய்யும்போது அவதூறு வார்த்தைகளில் தூசிக்கப்படுகின்றனர் என இச்சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் அப்பகுதிவாசியொருவர் கவலையுடன் தெரிவித்தார்.

இந்தப் போக்கு தொடருமானால் மலையகத்தவர் தம்மை பாதுகாத்துக்கொள்ள மாற்று நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முனைவர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. வடக்குகிழக்குத் தமிழர்களை சீண்டிவிட்டு வாங்கிக்கட்டிக்கொண்ட தென் பகுதி பேரினவாதிகள், மலையகத்தவரை சீண்டிவிடுவது எதற்காக என்பது புரியவில்லை. மலையகத்தில் இந்த நிலை தொடருமானால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு மட்டுமல்ல ஐக்கியத்துக்கே ஆபத்து ஏற்படும்.

சிறுபான்மைத் தமிழரை சிதைக்க முற்படுவது தேன்கூட்டில் கல்லெறிந்த கதையாகிவிடும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

தொடர்ந்தும் இதுபோன்ற வன்முறைளை அனுமதிக்க முடியாது. வாய்வீச்சில் வீரர்களான மலையகத்தலைவர்கள் தலையிட்டு இதற்கு உரிய தீர்வு எடுக்காவிட்டால் மலையகத்தமிழர்கள் காலப்போக்கில் அவர்களை விட்டு போய்விடுவார்கள் என்பது யதார்த்தமாகும்.

எனவே, இறுதியானதும் உறுதியானதுமான ஒரு தீர்வை மேற்கொள்ள வேண்டும்

ஆ.வரதன்

எழுத்துச் சுதந்திரத்துக்கு.....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

செய்தியாளர்கள் வடிவில் தோன்றிய வண்ணமேயிருப்பர். அப்டோது துப்பாக்கிகள் வெட்டித் தலைகுனிய வேண்டி நேரிடலாம்.

பத்திரிகையாளர் நடேசனுக்கு விடுதலைப்புலிகள் 'நாட்டுப்பற்றாளர்' என்று பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளனர். தனது எழுத்தினால் தமிழ்த்தேசியத்தின் கூர்மைப் படுத்தலுக்காக அயராது உழைத்தவர் என்று அவருக்கு புலிகள் புகழாரம் சூட்டி உள்ளனர்.

நடேசனின் பூதவுடல் மட்டக்களப்பில் அவரது வாசஸ்தலத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட பின்பு வவுனியாவுக்கும், கிளிநொச்சிக்கும் எடுத்துவரப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன. கிளிநொச்சி கலாசார மண்டபத்தில்—பூதவுடல் வைக்கப்பட்டு நினைவுக்கூட்டமும் நடத்தப்பட்டது. வியாழக்கிழமை நெல்லியடியில் இறுதிக்கிரியைகள் நடைபெற்றன.

நடேசனின் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த புதனன்று அம்பாறை நகரில் சிங்கள ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில் கண்டனப் பேரணி நடைபெற்றது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் உட்பட கிழக்குப்பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கில் யாழ். குடாநாட்டிலும் வன்னியிலும் முழு அளவில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

எதிர்வரும் 10ஆம் திகதி கண்டனப்பேரணி நடத்துவதற்கு வடக்கில் உள்ள அனைத்து அமைப்புகளும் ஏற்பாடு செய்து வருகின்றன.

இவரது இறப்பு தமிழ்த் தேசியத்தைப் பொறுத்தவரை பேரிழப்பு ஆகும்.

எஸ்.எஸ்.ஆர்

அரசின் நெருக்கடியை தனக்கு...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தன்னைத்தானே விடுவித்துக்கொள்வதற்கு உடனடியாகஇரண்டேஇரண்டுவழிகள்தான்உள்ளன.

முதலாவது வழிஐக்கிய தேசியக்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தி ஒருதேசிய அரசாங்கத்தை அமைக்கவேண்டும்.

அவ்வாறு ரணிலுடன் ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவதற்கான பேச்சுக்கள் நடைபெற்றால் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து கழன்று விடுவர்.

இரண்டாவது வழியாக மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு மற்றொரு சிறுபான்மை அரசாங்கத்தை அமைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அழைக்க முனையலாம்.

அடுத்த ஆண்டு ஏப்ரல் வரும்வரை நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது

அடுத்து வரும் ஓராண்டுக்குள் ஜே.வி.பியாலும் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைச் சமாச்சாரங்களாலும் பொருளாதார நெருக்கடியாலும் சர்வதேச அழுத்தங்களாலும் ஜனாதிபதி மிகவும் களைப்படைந்து போகும் நிலையே உருவாகப்போகிறது.

இந்த நிலைமை பற்றி சரியாகக் கணக்குப்போட்டு வைத்திருக்கும் ரணில் அடுத்த பொதுத் தேர்தல் விரைவில் வரும்போது தனது கட்சி ஆட்சி அமைக்க போதுமான பெரும்பான்மை கிடைக்கும் என்றே எதிர்பார்க்கிறார்.

அதுவரை தான் ஒரு தேசிய அரசாங்கத்தில் பங்குகொள்வதையோ அல்லது ஓராண்டு பூர்த்தி அடையும் தறுவாயில் ஜனாதிபதி இந்த அரசாங்கத்தை கலைத்து பிரதமர் பொறுப்பை ஏற்று அரசாங்கத்தை அமைக்குமாறு ரணிலிடம் வேண்டுகோள் விடுத்தால் அதை ஏற்று சிறுபான்மை அரசாங்கத்தை அமைப்பதையோ ரணில்விரும்பப்போவதில்லை என்றும் எதிர்பார்க்கலாம்.

தேசிய நூலகம்

திசை மாறிய தேசியப்பட்டியல்

கி.பி 1796ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பகுதியினையும் 1815இல் கண்டி இராச்சியத்தையும் கைப் பற்றியதுடன் முழு இலங்கையையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பிரித்தானிய சாம்ராஜ்யம், 1833இல் இலங்கையின் நிர்வாகத்தை அரசியல் யாப்பின் அடிப்படையில் நிர்வகித்தது.

1948 பெப்ரவரி 4 வரை கோல்புருக் அரசியல் யாப்பின்படியும் அதன் பின்னர் அடுத்தடுத்து பல யாப்புச் சீர்திருத்தங்களின் அடிப்படையிலும் இலங்கையை பிரித்தானியா நிர்வகித்தது.

இலங்கையில் பிரதான அரசியல், கலாசார, சமூக நீதியிலான திருப்பங்களை ஏற்படுத்திய யாப்புக்களாக 1910,1924,1931 ஆதிய ஆண்டுகளுக்கான யாப்புகளைக் குறிப்பிடலாம்.

1929இல் சீரமைக்கப்பட்டு 1931இல் அமுலுக்கு வந்த டொனமூர் யாப்பு இலங்கை நாட்டினை நாடாளுமன்ற ஜனநாயக நடைமுறைக்குள் இட்டுச் செல்வதற்கான அறிமுகங்களை ஏற்படுத்தியது எனக்கூறலாம்.

சோல்பரி யாப்பின் செனட் சபை

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கையை சுதந்திரநாடாகப் பிரகடனப்படுத்திய சோல்பரி யாப்பின் அரசியல் நீதியான முன்வைப்புக்கள் அனைத்தும் பிரித்தானிய நாட்டின் நடைமுறைகளைப்பின்பற்றியதாகவே இருந்தன.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தாய் என்ற கௌரவம் பெறும் பிரித்தானிய நாட்டின் அரசியல் அமைப்பைப் போன்றே இலங்கைக்கான அரசியல் நிர்வாக அரசியல் அமைப்புக் கட்டமைப்புக்களையும் சோல்பரி யாப்பு வழங்கியிருந்தது.

நாம நிர்வாகம் என்ற பிரித்தானிய முடி போன்று இலங்கைக்கு பேரளவில் நாட்டுத் தலைவராக மகா தேசாதிபதியும், மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பிரித்தானிய பொதுச்சபைபோன்று இலங்கையின் சனப் பிரதிநிதிகள் சபையும், மேற்சபை எனும் பிரித்தானிய பிரபுக்கள் சபை போன்று, இலங்கையில் செனட் சபையும் சோல்பரி யாப்பின் கீழ் வழங்கப்பட்டன

1972ல் சோல்பரி யாப்பு நிராகரிக்கப்பட்டு முதலாவது குடியரசு யாப்பு ஆரம்பிக்கப் பட்ட போது இரண்டாவது சபையாகிய செனட் சபையும் ஒழிக்கப்பட்டது.

மேற்சபையின் மேலான நோக்கங்கள்

சோல்பரி யாப்பில் மேற்சபை எனப்பட்ட செனட் சபை 30 நியமன அங்கத்தவர்களை கொண்டதாக அமைந்தது. இத்தகையதொரு சபை அமைக்கப்பட்டதற்கான பிரதான நோக்கங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1)சட்டம்

2)மருத்துவம்

3)பொருளியல்

4)கலாசாரம்

5)அரசியல்

போன்ற பல துறைகளிலும் துறை சார்ந்த தேர்ந்த ஞானத்தைக் கொண்டிருப்பவர்களின் பங்களிப்புக் களை அரசியலுக்கு அப்பாற்பட்டு பெற்றுக்கொள்வதற்கான ஒரு கௌரவ இடமாக செனட் இருந்தது

* அரசியல் நோக்கோடு அரசாங்கமானது அவசரப்பட்டு நிறைவேற்றும் சட்ட மூலங்களை அரசியலுக்கு அப்பால் இருந்து அலசி ஆராய்ந்து மறு பரிசீலனை செய்வதற்கு வழியமைக்கும் ஒரு தடை இடும் தளமாகவும்,

* நீதித்துறை அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பதனை நிரூபணம் செய்ய நீதி அமைச்சரை தெரியக் கூடிய பீடமாகவும்,

* சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளைப்பாதுகாக்கும் ஒரு கவசமாக அந்த யாப்பின் 29ஆம் சரத்திற்கமைய இந்த செனட் சபை அமைக்கப்பட்டிருந்தது.

தேர்தல் மூலம் வாக்குப்பலத்தினால் தமக்கென ஒரு பிரதிநிதியை தெரிவு செய்து கொள்ள முடியாத வல்லமை இழந்த சமூகத்தினரின் பிரதிநித்துவத்திற்கு நியமனம் மூலம் வாய்ப்பினை வழங்குவதற்கான ஒரு தளமாகவும் இது இருந்தது.

மேற் கண்ட நோக்கங்களை வழங்கிய சோல்பரி யாப்பு இரண்டாவது சபையான நியமன அங்கத்தவர்களைக் கொண்ட செனட் சபையின் உயரிய தூய நோக்கங்களை வெளிப்படுத்தும் ஒன்றாக இருந்தது.

எனினும் இந்த நோக்கங்கள் பூரணமாகவே செனட் சபை மூலம் நிறைவேற்றப்பட்டனவா என்பது கேள்விக் குரியதாயினும், பெருமளவில் செனற்சபைக்கான நியமனங்கள் தனித்துவம் வாய்ந்தவை என்பதில் மறு கருத்து இருக்க முடியாது.

1972ஆம் ஆண்டின் குடியரசுயாப்பில் நியமன அங்கத்துவம்

சேல்பரி யாப்பு செயல் இழந்த பின் முதலாவது குடியரசு யாப்பு 1972இல் அமுலுக்கு வந்தபோது செனட் சபையும் அகற்றப்பட்டது. அதேவேளை தேசிய அரசுப் பேரவை என்னும் மக்கள் பிரதிநிதிகள்சபைக்கான நியமன அங்கத்துவ முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த நியமன அங்கத்தவர்களுக்கான நோக்கங்கள் மேன்மையுடையவனவாக இருந்தபோதும், அங்கத்தவர்களை நியமிப்பதில் அரசியல் செல்வாக்கு குறிப்பாக ஆளும் அணியினரின் செல்வாக்கு மேலோங்கிஇருந்தது என்பதை புறக்கணிக்க முடியாது.

இந்தநிலை 1978 ஆம் ஆண்டின் புதிய குடியரசின் யாப்பின் பின் விஷ்வரூபம் எடுத்திருப்பது அனைவரினதும் கவனத்துக்குரியதாக இருக்கிறது.

1978 ஆம் ஆண்டு யாப்பின்தேசியப்பட்டியல்

1978 ஆம் ஆண்டின் புதிய குடியரசு யாப்பின் மூலம், விகிதாசாரத் தேர்தல் மூலம்மாவட்ட அடிப்படையில் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் முறை அமுலுக்கு வந்தது.

நாடு 22 தேர்தல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு மாவட்ட மட்டத்தில் 196 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 225 அங்கத்துவர்களைக்கொண்ட நாடாளுமன்றத்தில் தெரியப்படும் 196 அங்கத்துவர்கள் தவிர்ந்த மிகுதி 29 பேரும் ஒவ்வொரு கட்சியும் பெறும் மொத்த வாக்குகளின் விகிதாசாரத்துக்கேற்ப மேலதிகப் பிரதிநிதிகளாக நியமனம் பெறுகின்றனர்.

இந்த மேலதிக நியமனங்களுக்காக உரியவர்களின் பெயர்கள் உள்ளடங்கிய பட்டியலை ஒவ்வொரு கட்சியும் தேர்தலுக்கு முன்பே தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்து விடுதல் அவசியமாகிறது.

ஒவ்வொரு கட்சியும் தனித்தனிப்பட்டியலை தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கின்றன. இந்தப் பட்டியலே தேசியப்பட்டியல் என்று நாடு அறிகின்றது.

இதன் மூலம் ஒவ்வொரு கட்சியிலும் தெரிவான உறுப்பினர்களே தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் என்று அறிவிக்கப்படுகின்றனர்- அறியப்படுகின்றனர். ஆனால் நடைமுறையில் நிகழ்வது என்ன?

திசைமாறும் தேசியப்பட்டியல்

தேசியப்பட்டியலுக்காக ஒவ்வொரு கட்சியும் தாம் சிபார்சு செய்யும் பெயர்களுக்கான நோக்கங்கள் எவ்வாறானவையாக இருந்தபோதிலும், நிறைவேறியுள்ள பல நிகழ்வுகளை அவதானிக்கும் போது இத்தகையதொரு தேசியப்பட்டியல் முறை கேலிக் குரியதாகியுள்ளது என்பதனைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

* தேர்தலுக்கு முகம் கொடுத்து மக்களின் வாக்குப்பலத்தை பக்கத்துணையாகக்கொண்டு தெரிவு செய்யப்படாமல் நிராகரிக்கப்பட்டு, தம்மிடமுள்ள வேறு பலதரப்பட்ட பலங்களை பக்கதுணையாகக்கொண்டு தாம் சார்ந்துள்ள கட்சியில் உயர்நிலையில் உள்ளவர்களை அடிபணிய வைத்து-ஏற்கனவே தேசியப்பட்டியலில் உள்ளவர்களை வெளியேற்றி நாடாளுமன்றக் கதிரையைத் தமதாக்கும் அரசியல் பண்பாடற்ற நடைமுறையைத் தற்போதைய தேசியப்பட்டியல் முறை சற்றேனும் கூச்சமின்றி உள்வாங்கி வெளிப்படுத்துகின்றது.

* சமூகத்துக்காகவும், தாம் சார்ந்த கட்சிக்காகவும் நீண்டகாலம் பணி புரிந்து போட்டிக்கு நிறுத்தப்படாமல், கௌரவத்துடன் மக்கள் சபையின் ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதற்காகச் சிபார்சு செய்யப்படுபவர்கள் பலத்த எதிர்பார்ப்புகளுடன் காத்திருக்க- வாக்காளர்களினால் புறக்கணிக்கப்பட்டுத் தேர்தலில் தோற்றாலும் "நாடாளுமன்றக் கதிரை எனக்குத் தான்" என்று சவால் விடும் வேட்பாளர்களுக்குத் தற்போதைய தேசியப்பட்டியல் முறை புகலிடம் வழங்கும் தளமாக அமைகின்றது.

பலகோடிக்கணக்கான ருபாவை விலை கொடுத்து வாங்கும் விற்பனைப் பீடமாகத் தற்போதைய தேசியப்பட்டியல் முறை வேண்டத்தகாத ருபம் எடுத்துள்ளது.

* தேர்தலில் வெற்றி பெறாது கட்சித் தலைமைத்துவங்களுடன் அசுரச் சமர் செய்து பலவகைப் பேரங்கள் பேசி நாடாளுமன்றக் கதிரையைப் பெறுவ துடன், அமைச்சர்களாகவும் நியமனம் பெறுதல் மூலம் தேசியப்பட்டியலின் இலக்குகளையும் இலட்சியங்களையும் திசைமாற்றிவிட்ட போக்கினையும் நாம் இத் தேர்தல் முறை மூலமாக கண்டு வந்துள்ளோம்.

பல விடயங்களில் திசைமாறுகின்ற இலங்கை அரசியலின் உயர் விழுமியங்களுள் தற்போதைய தேசியப்பட்டியல் முறையின் தடம் தவறியமை முக்கியமான அங்கீகரிக்க முடியாத அரசியற் சுழற்சியாகும். திசைமாறிய யாப்பு எனும் கப்பலின் சவால்களை எதிர்கொண்டு நிதானமாக வழி நடத்தி நேர் திசையில் செலுத்தத்தக்க கற்பித்தான்கள் தேவை. திசைமாற்றியுள்ள தேசியப்பட்டியல் குறித்த இலக்கும் நோக்கும் நேர் திசை காணுமா?

கலாநிதி ஜெ.திவ்யநாதன்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

மாகாணசபை வாகனங்கள் துஷ்பிரயோகம் கடமையின் போது ஊழியர் திண்டாட்டம்

வடக்கு – கிழக்கு மாகாணசபையில் பல்வேறு அமைச்சுகளின் வாகனங்கள் சட்டத்துக்கு விரோதமாகப் பயன்படுத்தப்படுகின்றன. சில அதிகாரிகள் தமது விருப்பம் போல் அவற்றைப்பயன்படுத்து கின்றனர். எனினும் ஏனைய அதிகாரிகளி டமிருந்து வாங்கிக்கட்டிக்கொள்வதெல் லாம் விடயத்துக்குப்பொறுப்பான லிகிதர் களும் சாரதிகளுமே.

மாகாணசபை அமைச்சுக்களின் வாக னங்கள் அலுவலக நேரம், அது தவிர்ந்த நேரங்களில் வழியாட்டுத் தலங்கள், சந்தை, கடைத்தெரு, பாடசாலைகள், உல்லாச விடுதிகள் எனப்பல இடங்களி லும் அரச வாகனங்களை காணமுடிகின் றது.

மரக்கறி, மீன்சுமத்தல், பிள்ளைகளைப் பாடசாலைக்கு விடுதல், அழைத்தல், மனைவியரை வேலைத்தளத்துக்குக் கொண்டு செல்லல், கொண்டுவருதல் என அரச வாகனங்கள் அதிகாரிகளின் சொந்தத் தேவைக்குப் பயன்படுகின் றன. சில வேளைகளில் வேலைக்காரர்க ளுக்கும் வாகனம் வழங்கப்படுகிறது.

இத்தகைய வாகனப்பயன்பாட்டால் அலுவலகத் தேவைக்கு வாகனம் இல் லாது போவதுடன் வேலைகளும் ஸ்தம்பி தம் ஆவதாக தெரிவிக்கப்படுகிறது.

அலுவலகத் தேவை குறித்து கேட் டால் பிள்ளையைப்பாடசாலைக்கு விட் டுட்டு பிறகு போகலாம் என்று சொல் லப்படுகின்றதாம்.

அண்மையில், ஒரு அமைச்சில் அதி காரம் வழங்கப்பட்ட பொறியியலாளர் ஒருவர் செயலாளரையும் மீறி வாகன விடயத்தில் ஆதிக்கம் செலுத்துகின்ற னராம். செயலாளர் தமது பணியை தியா கம் செய்துவிட்டார் போலும்.

ஏற்கனவே அங்கு வாகனத்துக்குப் பொறுப்பாக்கப்பட்டிருந்த அம்மணிக்கு பூமரங்களையும், சுத்திகரிப்புத் தொழி லாளரையும் கவனிக்கும் உத்தியோகம் வழங்கப்பட்டுள்ளதாம்.

அம்மணியோடு பொறியியலாளர் ஏறி விழுவதும், சாரதியர் சிற்றூழியர்க ளோடு எகிறுவதுமாக அவர் இருக்கிறார். "தியாகம்" செய்த செயலாளர் முறைப் பாடுகளைக் கணக்கில் எடுத்த பாடில்லை என்று பாதிக்கப்பட்டோர் சுடர் ஒளிக்கு தெரிவித்தனர்.

சொந்தத் தேவைகளுக்கு மட்டுமல்ல தூர இடத்துக்கும் வாகனங்கள் பயன் படுத்தப் படுவதை தட்டிக்கேட்க அங்கு ஆளில்லாத நிலையே தொடர்கிறது.

அமைச்சு அலுவலகங்களில் மட்டு மல்ல, திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் இதே நிலைதான் காணப் படுகிறது.

சட்டவிரோத வாகனப் பயன்பாடு, எரி பொருள் இருட்டடிப்பு, அதற்குரிய பணம் பிடுங்கல் என எவ்வளவோ நடக் கின்றன.

மாகண சபைக்கு தனிக்காட்டு ராஜாக் களாக செயற்படுபவர்களுக்கும், மாவட்ட எம்.பிக்களும் இது விடயத்தில் அக் கறைப்பட்டதாகத் தெரியவில்லை. கண் டிக்க வேண்டிய அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை.

"மடியில் கனம் இருப்பதால் வழியில் பயப்படுத்துகின்றனர் போலும்."

மேற்படி குற்றச் செயல்களுக்கு அப் பாற்பட்ட அமைச்சுகள், திணைக்களங்கள் அரச அலுவலகங்கள் இல்லாமலில்லை.

அதிகார துஷ்பிரயோகம், அரச சொத்துக் களை சட்ட விரோதமாகப் பயன்படுத்தல் இன்னும் கட்டுப்படுத்த முடியாத காட்டுத் தீபோல் உள்ளது வேதனையே.

-எஸ்.எஸ்.ஆர்-

அணையாத விளக்கு

''டாக்டர், எங்களுக்குள்ள ஏக்கம் தீர வழியே இல்லையா...? எமக்கென்றொரு குழந்தை பிறக்கும் என்கிறதை வெறும் கனவாக மறந்துடவேண்டியது தானா?'' எஞ்சிநின்ற எதிர்ப்பார்ப்புக்களும் தவிடு பொடியாகிவிரக்தியின்விளிம்பில்நிற்கும் அந்த இளம்தம்பதிகளைப் பார்க்க டாக்டர் குணசேகரின்அடிமனம்வெம்பியது.

அன்றாடம் சிகிச்சைக்கென அவரிடம் வருகின்ற இளம் குடும்பங்களில் அரைவாசியிலும் கூடுதலானவர்களுக்குள்ள அதே பிரச்சினைதான் இதுவும்!

''டாக்டர், உயர்கல்வி படித்த சமயம் அனாதரவாகநின்றகுமுதாமேலே முகிழ்த்த காதல்... வீட்டவர்கள் எதிர்ப்பையெல்லாம் மீறி இவளையே கைபிடித்தது முதல் இந்த ஏழாண்டுகளில் எமக்கிடையிலான அன்பில் சிறுவிரிசல் தானும் வந்ததில்லை. குழந்தையொன்று நமக்கென்று இல்லைங்கற குறையை – அதுவும் அடுத்தவர்கள் சிலேடையாகக் குத்திக் காட்டுகின்றபோது சவுக்கடி பட்ட மாதிரி துடிச்சுப் போயிடறோம்.'' நித்தியனின் விழியோரம் ஈரம்.

''நித்தி, அறிவியல் முன்னேற்றத்தினால மனித உடம்பில ஏற்படுகிற எத்தனையோ பிணிகள் – பிரச்சினைகளை சீர்செய்ய முடியுதேன்னு நீங்க சொல்றது ஓரளவுக்கு சரி. அந்தவழியில டெஸ்ட் ரியூப் பேபியை அல்லது இன்னொரு வாடகைத்தாய் உதவியால் குழந்தையை பெற்றுக்கொள்வதை எமது சமுதாயத்தில் மேற்கொள்ள முடியுமா...? இவையெல்லாம் எங்களைச் சுற்றி இருப்பவர்களால் அங்கீகரிக்கப்பட இன்னும் நீண்ட காலம் தேவைப்படும். அதற்கு முதலில் எம்மைப்பிணைத்துள்ள அர்த்தமற்ற கட்டுப்பாடுகள் அறுத்தெறியப்பட வேணும்.'' டாக்டர் குணசேகர் கூறியவற்றைக் காது கொடுத்துக் கேட்கும் நிலையில் அமுதா இல்லை.

அப்பால் நடைபாதையில் போய்க்கொண்டிருக்கும் கற்பகத்தைஇமைக்க மறந்து பார்த்துக்கொண்டிருந்தாள் அமுதா.

பின்னால் தாயின் சேலைத்தலைப்பைப் பிடித்துக்கொண்டு பிஞ்சுக்கால்களால் வேக நடை பயிலும் இரண்டரை வயதே நிரம்பிய மூத்தவன்.... மூக்கைச் சிந்தியபடி அவள் இடுப்பில் தொற்றியிருக்கும் இரண்டாவது பெண்... போதாக்குறைக்கு அவள் வயிற்றை நிறைத்தபடி இன்னும் ஐந்தோ ஆறு கிழமைகளுக்குள் பிரவசமாகப்போகின்ற மூன்றாவது குழந்தை....!

டாக்டர் குணசேகரின் பார்வையில் நடைபாதையோர கச்சான் கடைக்காரி கற்பகம் கூட பரிதாபத்துக்குரிய பிறவிதான்! அடுத்தடுத்த குழந்தைகளுக்கிடையிலான இடைவெளி போதாதென்று எச்சரிக்கையுடன் முன்னேற்பாடாக செய்த கருத்தடை முறைகள் அத்தனையையும் பொய்யாக்கிகொண்டு இப்போது மூன்றாவதும்.... குணசேகர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். இந்தப் பிரசவத்தோடு நிரந்தர கருத்தடை அறுவைச் சிகிச்சை தானென்று.

''பிஞ்சுகளோடு விடாக் குடியனான கணவனுக்கும் சேர்த்து தினப்படி சம்பாதிக்க வேண்டிய துர்ப்பாக்கியசாலி தான் கற்பகம்.

எவ்வளவோ படிச்சு உலகத்தைப் புரிஞ்சுகொண்ட நீங்களே துவண்டு போயிடலாமா? எல்லோருடைய வாழ்க்கையிலும் ஏதோ ஒருவிதமான பற்றாக்குறை, ஏக்கம், வேதனை நிரம்பியிருக்கு.

என்னையே எடுத்துப் பாருங்க... சொல்லப்போனா உங்களைவிட வாழ்க்கையையே தொலைச்சுட்டு நிற்கிறேன். என் மனைவி காயத்திரி – இந்த 'காயத்திரி தனியார் மருத்துவ மனையின் சொந்தக்காரி. என்னோடு ஓராண்டு காலம் மட்டுமே வாழ்ந்தவ.. ஆனா அவளுக்கு அந்த கௌரவத்தை நான் கொடுக்கலை.

காயத்திரி குடும்பத்தின் அந்தஸ்துக்கும் பணத்துக்கும் ஆசைப்பட்டு தீராத மூட்டுவாதக்காரப் பெண்ணை என் தலையில கட்டிவிட்டதாக என் பெற்றோர் மேலேயே எனக்கு நிறையக் கோபமிருந்தது....''

நித்தியனும் குமுதாவும் அதுவரை தெரிந்திராத டாக்டரின் மறுபக்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

''இன்றைக்கு காயத்திரி என்னை விட்டுப் போனதை நினைச்சு எனக்குள்ளேயே கழிவிரக்கப்படுறன். குறைந்தபட்சம் வைத்தியனென்ற முறையில் அவளருகிலிருந்து ஆறுதல் தராதுபோன குற்ற உணர்வு என்னை வாட்டுது.

ஆகவே தான் இரண்டாவது கல்யாணமே செய்து கொள்ளாமல் காயத்திரி நினைவோட இதை இலவசமாக நடத்திட்டு வாறேன். மிகுதி நேரத்தில ஆதரவிழந்த சிறார்களை அரவணைச்சு வளர்க்கிற 'பாரதிஇல்லம்' போயிடுவேன். நீங்க இரண்டு பேரும் கூட ஒரு தடவை அந்த இல்லத்தைப் போய்ப் பார்க்கணும்.''

''குமுதாவும் அங்குதான் வளர்ந்தவ..... உயர்கல்வியில தேறி பல்கலைக்கழகப் பட்டம் பெற்றது எல்லாமே அவங்க தயவினால் தான்!''

''அந்த உறவை நீங்க தொடருவதுதான் வெறுமையாகிக் கிடக்கிற உங்க வாழ்க்கையில மாற்றத்தைக் கொண்டுவரும்; சிறந்த வடிகாலாக அமையும். ஒரு வேளை அங்குள்ள குழந்தைகளுடன் ஒன்றித்து அவர்களுக்குக் கற்பித்துக் கொடுக்கக் கூடிய வாய்ப்பு குமுதாவுக்கு ஏற்படுமென்றால் அதுவே நல்ல மருந்தாகும்.''

''டாக்டர் உங்க கருத்தை செயற்படுத்த இயன்றவரை முயற்சிக்கிறேன். நிச்சயமாக குமுதாவின் கவனத்தை வேறுதிசையில் திருப்பியாகணும். புற்றுநோய் தினம் என்னைக் கொன்னுட்டிருக்கு....என்னையே உலகமாக நெஞ்சிலிருத்து நம்பியிருக்கிறவ திடீர்னு நிர்க்கதியாகப் போயிடக் கூடாது.''

''மனதைத் தளரவிடாதீங்க நித்தியன். இந்தாங்க உங்க 'பிளட் ரிப்போர்ட்' இரண்டு மாசம் கழிச்சு திரும்பவும் செய்து பார்க்கணும்.''

அந்தளவில் மூச்சுவிட சிரமப்பட்டவாறு முகத்தை விகாரமாக்கிக்கொண்டு 'அஸ்மா' நோயாளி ஒருவர் டாக்டரைத் தேடிவர நித்தியன் குமுதாவை தோளோடு ஆதரவாக அணைத்தவாறு வெளியேறினான்.

இரு மாதங்களின் பின்பு நித்தியன் பரிசோதனைக்கென வந்தபோது குருதிப் புற்றுநோயின் கொடியகரங்கள் அவனுயிரை அணு அணுவாகச் சிதைக்கத் தொடங்கிவிட்டதைக் காணமுடிந்தது.

எலும்புக் கூட்டோடு ஒட்டிப்போன தேகம்; உதிர்ந்துவிட்ட கேசம். உட்குழிந்த கண்களில் மட்டும் ஒரு பிரகாசம்!

''குமுதா பழையபடி படிப்பிக்கப் போகிறா – அதுவும் அவள் வளர்ந்த 'பாரதி இல்லத்தில்' ஆரம்ப ஆசிரியையாக!''

''அப்பிடியா.. நிறையவே மகிழ்ச்சி!'' பரிசோதனைக்கு எடுத்த இரத்தத்தை குப்பியில் விட்டுக்கொண்டு நிமிர்ந்தார் டாக்கடர் குணசேகர்.

''கூடவே அவர்களின் பராமரிப்பிலிருந்த இரண்டரை வயதுப் பெண்குழந்தை ஒன்றையும் வீட்டிற்கு அழைத்து வந்திருக்கிறாள். இப்போது குமுதா ஓர் அம்மாவும்கூட!'' இதைச் சொல்லும் போது அவன் குரலில் அயர்ச்சி.

''நித்தி உண்மையைச் சொல்லுங்க – குழந்தையைத் தத்தெடுத்த விஷயத்தில் உங்களுக்கு உடன்பாடில்லையா....? ஏன் கேட்கிறேன்னா உங்க குரல்ல உற்சாகமேயில்லை.''

நித்தி அவசரமாகத் தலையாட்டி மறுத்தான். ''குமுதாவோட விருப்பத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். அந்தக்குழந்தையை – சிந்துவை – இல்லத்திலிருந்து கூட்டிவருவதற்கான விடுகைப் பத்திரத்தில் நான்தான் பாதுகாவலன் என்ற பொறுப்பினை ஏற்றுக்கொண்டு ஒப்பமிட்டேன்.''

''வீட்டில உங்க அம்மா, அப்பா, உறவுக்காரங்க ஏற்றுக்கலையா....? அதனால மனமுடைஞ்சு போயிட்டீங்களா...? ஓ, என்ன உலகமிது...? போரின் கொடுஞ்சுமைகளை தோள்களில் சுமந்து சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த இந்த மண்ணில் வாழும் மைந்தர்களா இன்னும் இப்படியான மனச்சிறைகளுள் புதையுண்டு...! இதன் மூலம் மழலைப்பேறிழந்த அந்த அபலைப் பெண்ணின் நிம்மதியை, நிறைவை இவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களில்லையே.. இந்த மனங்கள் பண்பட இன்னும் எவ்வளவு காலமாகுமோ...?''

''என் ஆயுளின் எஞ்சியநாட்கள் எண்ணப்பட்டுக்கொண்டிருக்குது டாக்டர்... நிர்க்கதியாகப் போகின்ற குமுதாவுடன் சிந்துவும் சேர்ந்து தவிக்க நேரிடுமோ என்ற கவலை என்னை வாட்டுது.''

''அப்படி கவலைப்படுவதில் அர்த்தமில்லை நித்தி. அதற்குப் பிறகும் தான் வாழவேண்டுமென்ற துடிப்பு, அவசியம் அவளுக்கு உணரப்படுமென்று நீங்க நினைக்கலையா?''

''குமுதா தனிச்சு எல்லாத்தையும் எப்பிடி சமாளிக்கப் போறான்னு தவிப்பாயிருக்கு டாக்டர்''

''நீங்களாகவே எதையெதையோ எல்லாம் கற்பனைபண்ணி குழம்பாதீங்க நித்தி. ஐந்தறிவு மீனுக்கு நீச்சலும் வான்பரப்பில ஓயாது சிறகடிக்கிற பறவைக்கு பறக்கவும் யாரும் கற்றுக்கொடுக்கலையே!

அவையெல்லாம் தம்பாட்டில் எதிர்நீச்சலடிச்சு வாழ்க்கையை எதிர்கொள்ளும்போது படிச்ச பட்டம் பெற்ற உங்க மனைவி நிச்சயம் எல்லாத் தடைகளையும் கடத்திடுவான்னு நம்புங்க. பலமான நம்பிக்கைதான் வாழ்க்கையின் உறுதியான அத்திவாரம்.''

'சிரிஞ்ச்' இல் நிரப்பிருந்த 'கான்சர்' நோய்க்கான மருந்தை டாக்டர் அவன் புயத்தில் பக்குவமாகச் செலுத்தினார்.

அவசரசிகிச்சைப் பிரிவு வாசல் கதவில் சரிந்துநின்ற குமுதா கலைந்த கூந்தலுடன் சூழ்நிலையை மறந்து விம்மிக்கொண்டிருந்தாள். நெற்றி வியர்வையில் குங்குமம் மெல்ல மெல்ல கரைந்து கொண்டிருந்தது.

''குமுதா, அருகிலிருந்து அடிக்கொருதரம் நித்தியனைக் கண்காணிக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலதான் 'வார்ட்டில' வைச்சிருக்க வேண்டியவரை உங்க கூட அனுப்பி வைச்சேன். இப்ப என்ன டான்னா...?'' குணசேகர் கைகளைப் பிசைந்தார்.

''ஐயோ, அவருக்கெதுவும் ஆகிவிடக் கூடாதுங்களே... இங்கிருந்து அவரை அழைச்சுட்டுப் போனதிலிருந்து நான் வீட்டைவிட்டு இந்த ஒரு வாரமும் எங்கேயும் போனதில்லை... நேற்றைக்கு சிந்துவோட பிறந்தநாள். இல்லத்துக்கு சிந்துவையும் அழைத்துப்போய் இனிப்புக் கொடுத்துவிட்டு வரச்சொல்லி இவர் தான் வற்புறுத்தி...''

''நீங்க இல்லைன்னா வீட்டில உள்ள மற்றவர்களுக்கு இதைப்பற்றின சிரத்தை கிடையாதா...?'' டாக்டர் குணசேகர் பொங்கியகோபத்தை அடக்கிக்கொண்டு சீறினார்.

''ஆளுதவியில்லாம இப்போ தனியே தான் வாழ்றோம்... குழந்தையை அவங்க வீட்டில யாருமே அங்கீகரிக்காததால தனிக்குடித்தனம் போயிடலாம்னு முடிவெடுத்திட்டார். அவருக்கும் ஏதாச்சும் ஆச்சுன்னா அப்புறம்...?''

''குமுதா.. குழந்தை உங்களையே திகைச்சுப்போய் பார்த்திட்டிருக்கா. உங்களைப் பார்த்துட்டு அவளும் அழஆரம்பிச்சா பிறகு ஆருக்கு ஆர் ஆறுதல் சொல்வது...?''

சிந்துவும் குமுதாவை நெருங்கி வந்து முழங்கால்களை சுற்றிப் பிடித்தவாறு 'அப்பாவுக்கு என்ன ஆச்சு?' என்ற தோரணையில் நிமிர்ந்து ஏறிட்டாள். பதிலுக்கு குனிந்து அவளை வாரிக்கொண்டு மௌனமாகக் கண்ணீர் உருக்கத்தான் இவளால் முடிந்தது. கண்ணாடிக்கதவைத் தள்ளிக்கொண்டு வெளிப்பட்ட ஐ.சி.யு டாக்டர் ரகுபதி பரபரப்படைந்த குமுதாவை ஆற்றுப்படுத்திவிட்டு குணசேகரை மட்டும் உள்ளே அழைத்தார்.

''நித்தியனுக்கு நினைவு திரும்பிவிட்டதா? ஓரளவுக்கு தேறிவிட்டாருன்னா அவர் மனைவியை அருகில அழைச்சு வந்து காண்பிக்கிறதில உங்களுக்கு ஆட்சேபனையில்லையே...?

முன்னால் சென்றுகொண்டிருந்தவர் நின்று குணசேகரின் மணிக்கட்டை இறுகப்பற்றினார்.

''டாக்டர் குணா, இந்த நோயாளியைப் பற்றி அதிகம் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. அவரை இங்கு அனுமதித்த போதே மூளை செயலிழந்து அரை மணி நேம் கடந்திட்டுது.''

''இந்தக் கடதாசி நித்தியனுடைய சட்டைப்பையில் கிடந்தது. டாக்டர் குணசேகருக்கென்று ஏற்கனவே எழுதி வைத்திருக்கிறார்...'' அவசரமாக அவரிடமிருந்து அந்தக் கடதாசியினை பறித்து விரித்தார் குணசேகர்.

அதிலிருந்த எழுத்துக்களை பார்வையால் விழுங்கியவர் தலை கிறுகிறுத்தது. குணசேகர் இதை எள்ளளவேனும் எதிர்பார்த்திருக்கவில்லை. ''குணா, கொஞ்சங் கொஞ்சமாக கண்முன்னாலேயே கருகிப்போன உங்க நோயாளி நித்தியனின் உயிரைத்தான் மருத்துவ உலகத்தால தக்கவைக்க முடியலை. அவரின் விருப்பப்படி கொழுகொம்பு இழந்து தவிக்கும் இளம் மனைவிக்கும் குழந்தைக்கும் நிரந்தர ஆதாரத்தை வழங்குவீங்களா...?''

திகைப்பின் எல்லையில் நின்ற குணசேகருக்கு முன்னால் 'வென்றிவேற்றர்' பொருத்திய நிலையில் நெஞ்சின் மேல் கைகளை ஒன்று குவித்தபடி அமைதியாகக் கிடந்தது அந்த உருவம். 'அவன் எதை யாசிக்கிறான்...?'

''நிச்சயம் செய்கிறேன்..... அந்த இருவருக்கும் இறுதிவரை நிழலாக நானிருப்பேன்...!'' குணசேகர் குரலில் எதுவிதத் தளம்பலுமில்லை.

செல்வி வாகீ கந்தசாமி.

ரணிலுக்கு ஒரு பகிரங்க மடல்

மதிப்பிற்குரிய,

ரணில் விக்கிரம சிங்க அவர்கட்கு.

எனது பணிவான வணக்கங்கள்,

தங்கள் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டதன் மூலம் கடந்த 2 வருடங்களுக்குப் மேலாக நடைமுறையில் இருந்துவரும் யுத்தமற்ற சூழலை ஏற்படுத்தியவர் என்ற பெருமையை நீங்கள் பெற்றுள்ளீர்கள். வாழ்த்துகள்.

விடுதலைப்புலிகளின் உக்கிரமான தாக்குதல் காரணமாக புலிகளை எப்படியாவது யுத்தத்தில் தோற்கடிக்க வேண்டும் என்ற இனவாதிகளின் கூச்சலுக்கு மத்தியில் புலிகளுடன் சமாதானத்தை ஏற்படுத்திக் கொண்ட சமர்த்தன் நீங்கள்.

அன்றைய சூழலில் நேர்மையான ஒரு தலைவனாக நீங்கள் இருந்த போதிலும், கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதலைத் தொடர்ந்து கொழும்பின் உயர்பாதுகாப்பு வலயங்களின் பாதுகாப்புக்கள் யாவும் கேள்விக்குள்ளான நிலையிலேயே புலிகளுடன் பேச்சுக்காக இனவாதிகள் உங்களை அனுமதித்தார்கள். உண்மையும் அதுதான்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பின்னர், ஏற்படுத்தப்பட்ட சமாதான சூழலை தொடர்ந்து அதனை தக்கவைப்பதில் நேர்வே தரப்புடன் நீங்கள் அக்கறையாகச் செயற்பட்டதில், என்னவோ சமாதான சூழலின் மூலமான அனுகூலங்களை சாமானிய மக்கள் பெற்றுக் கொள்கின்றார்களா என்பதை கவனிப்பதில் நீங்கள் தவறிழைத்து விட்டீர்கள் என்பதுதான் எனது கணிப்பு.

குறிப்பாக வடக்கு–கிழக்கைப் பொறுத்தவரை வன்னிப் பாதை திறக்கப்பட்டதும், அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதும், யுத்தமற்ற சூழலில் மக்கள் இரவில் நடமாட பயணம் செய்யக் கூடியதாக இருந்ததும் உண்மைதான். ஆனால், குறிப்பிடத்தக்க அபிவிருத்திகளை தமிழ் தேசத்தில் மேற்கொள்ள முடியாமற் போனது என்னவோ உங்களின் துர் அதிஷ்டம் என்றுதான் கூற வேண்டும்.

பேச்சுக்களின் முடிவாக இடைக்கால தன்னாட்சி அலகுக்கான யோசனைகளை புலிகள் சமர்ப்பித்த சமயம் நீங்கள் அமெரிக்காவில் இருந்தீர்கள்.

வெளியான தன்னாட்சி அலகின் யோசனைகளின் உள்ளடக்கத்தினை அறிந்து கொண்ட ஜனாதிபதி உடனே பாதுகாப்பு மற்றும் ஊடகம் உட்பட மூன்று அமைச்சுக்களை தன்வசம் எடுத்துக் கொண்டார். அமெரிக்காவில் இருந்து திரும்பியபோது தங்களை நோக்கிய ஆதரவான அலையினை அப்போது கொழும்பு – கட்டுநாயக்கா வீதியின் ஊடே நான் நேரில் பார்த்துப் பிரமித்துப் போனேன்.

தங்களை நோக்கி அப்போது இருந்த அந்த ஆதரவின் கனதியை தொடர்ந்து நீங்கள் சீராகப் பேணிக் கொள்ளவில்லை என்பது தான் எனக்குப் பெரிய மனவருத்தம்.

சமாதான முயற்சிகளில் ஆர்வமாக இருந்த சமயம், தேசத்தின் அபிவிருத்தியில் கவனக் குறைவாக இருந்தது போன்றே தேர்தலின் போது உங்கள் எதிரிகள் குறித்தும் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவில்லை என்பது தான் எனது கணிப்பு.

தேர்தல் பிரசாரத்தின் போது, உங்களை புலியாக சித்தரிப்பதில் ஜே.வி.பி உட்பட இனவாதிகள் அனைவரும் மிகதீவிரமாக செயற்பட்டதைக் கண்டும் அசட்டையாக இருந்து விட்டீர்கள்.

அது போன்றே, இப்போதும் உங்களது சமாதான முயற்சிகளை கொச்சைப்படுத்தும் வகையில் ஜனாதிபதியின் தரப்பு நடந்து கொள்வதையும் கண்டு கொள்ளாமல் இருக்கிறீர்கள் என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

தற்போதைய நிலையில், நாடாளுமன்றில் தனது அரசின் பெரும்பான்மைக்குப் பங்கம் ஏற்படாதவகையில் சமாதான முயற்சிகளை எப்படிக் கைவிடலாம் என்பதில்தான் ஜனாதிபதி குறியாக இருப்பதாக எனக்குப் படுகிறது. அது உங்களுக்கும் புரியும்.

இவ்வாறான நிலமைகளை நீங்களும் சிலவேளை விரும்புகிறீர்களோ என்ற சந்தேகமும் எனக்கு ஏற்படுகிறது. இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில், கட்சி நலன்களுக்கு அப்பாற்பட்டு சிந்தித்து செயற்பட்டால்தான் தேசம் எதிர்கொள்ள இருக்கும் ஆபத்தில் அதனைக் காப்பாற்ற முடியும். இது உங்களுக்கு நான் சொல்லத் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

உங்களது சமாதானத்தின் மீதான நல்லெண்ண முயற்சிகளைப் பொறுத்தவரை சமாதானப் பேச்சுக்கள் துண்டிக்கப்பட்ட இந்நிலையில் ஜனாதிபதி அரசை தொடர்ந்து நடத்துவதென்பது இனவாதிகளுக்கும் யுத்தத்தை விரும்பும் சக்திகளுக்கும் மிகவும் வசதியாகப் போய்விடும்.

அதனால், பேச்சுக்களை அரசு மீண்டும் உடனடியாக ஆரம்பிப்பதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதில் முனைப்புடன் செயற்பட வேண்டும். ஆனால் இது விடயத்தில் நீங்கள் அக்கறையாக செயற்படுவதாக எனக்குத் தெரியவில்லை.

குறிப்பாக சிங்கள முற்போக்கு சக்திகள் மத்தியில், இனவாத செயற்பாடுகளுக் கெதிரான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கும் தீர்வின் அவசியத்தை தமிழ் தரப்பு எம்பிக்கள் சிங்கள தேசத்திற்குள் கொண்டு சென்று வலியுறுத்துவதற்கான நிறுவன ரீதியான செயற்பாடுகளை ஊக்குவிப்பதும் இன்றைய நிலையில் தங்களின் தலையாய பணிகளாக இவை இருக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளுடன் பேசுவதையே ஆபத்ததான ஒரு நடவடிக்கையாக தென்னிலங்கை சிறுபான்மைக் கட்சிகள் கூறுவதை தாங்களும், தாங்கள் கட்சியும் பார்த்துக்கொண்டிருப்பதென்பது, கடைசியில் உங்கள் கட்சிக்காரர்களும் அவர்களுடன் கூட்டுச்சேர்ந்து உங்களுக்கெதிராக செயற்படுவதிலேயே கொண்டு போய்விடும் என்பதை நீங்கள் அவசியம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதுவிடயத்தில் கட்சி நலன்களுக்கு அப்பால், ஜனாதிபதியின் தரப்பில் உள்ள தமிழ் எம்பிக்களின் தரப்புடன், இணக்கமான பேச்சுக்களை முன்னெடுப்பதுடன், அனைத்து தமிழ் தரப்பின் பிரதிநிதிகளையும் ஒன்றிணைத்து அரசின் தவறான அணுகு முறைகளுக்கெதிரான சாத்தியமான போராட்டங்களை முன்னெடுப்பது தங்கள் கட்சியின் பிரதான கடமையாகும்.

இந்த நடவடிக்கைகளில் நம்பிக்கை யிழந்தவராகவே நீங்கள் காணப்படுகிறீர்கள்.

இதில் தங்களுக்குள்ள சிரமங்கள் எனக்கும் புரியும். என்றாலும் இப்போதைய நிலையில் எதுவும் செய்ய முடியாதென்று கூறிக் கொண்டு வாளாவிருப்பது என்னவோ எனக்குப் பொருத்தமாகப் படவில்லை.

தற்போது மாகாணசபைத் தேர்தலுக்கான திகதிகள் குறிக்கப்பட்டுவிட்டன. இந்தத் தேர்தலின் முடிவுகள் அனேகமாக சிங்கள மக்களை இனவாதிகள் தங்களது நோக்கங்களுக்குபயன்படுத்துவதில்எந்தளவுக்குவெற்றி கண்டிருக்கிறார்கள் என்பதை புலப்படுத்தப் போகின்றன. எனவே இம்மாகாண சபை தேர்தலுக்கான பிரசாரத்தை, இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீளவும் அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வகையில் முறையாக மேற்கொள்வதில் தான் தங்களின் எதிர்கால வெற்றி தங்கியுள்ளது எனக் கருதுகிறேன்.

இறுதியாக, சமாதானப் பேச்சுக்களுக்குச் சவாலாக ஜனாதிபதி மேற்கொண்டுள்ள சில முயற்சிகள் பற்றி உங்களுக்கு தெரியப்படுத்தலாம் என நினைக்கின்றேன்; தங்களின் பதில் நடவடிக்கைக்காக இவற்றைப் பட்டியலிடுகின்றேன்.

* தன்னாட்சி அலகின் ஊடான அபிவிருத்திகள் என்பதற்குப் பதிலாக ஜனாதிபதி விசேட செயலகம் ஒன்றை அமைத்து வடக்கில் அபிவிருத்தி மேற்கொள்வதாக வெளிநாடுகளுக்கு காட்ட முயல்வது.

*புலிகளுக்கெதிராக கருணா குழுவை பயன்படுத்தி எப்படியாவது புலிகளை யுத்தத்திற்குள் இழுக்க முயற்சிப்பது.

*நாட்டின் அபிவிருத்திக்கென உங்களால் அறிவிக்கப்பட்ட அபிவிருத்திகளை நீங்கள் உங்களது பதவிக்காலத்தில் செய்யவில்லை. இப்போது அதை தான் செய்வதாக கூறிக்கொள்வது.

* உங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மோசடி நிகழ்ந்திருப்பதாக கூறுவது.

*தன்னுடன் உள்ள தமிழ் தரப்புக்களுடன் பகைத்துக்கொள்ளாமல் சமாதான முயற்சிகளில் இருந்து நழுவிக்கொள்வது.

*அவ்வாறு நழுவுவதன் மூலம், இனவாதிகளின் நாடாளுமன்றப் பலத்தைப் பெற்றுக் கொண்டு தனது அரசை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வது.

* நோர்வேயுடன் முரண்படாது மெதுவாக நோர்வேயை சமாதானப்பணிகளில் இருந்து அப்புறப்படுத்த முயற்சிப்பது.

* மொத்தத்தில் இனவாதிகளின் விருப்பத்திற்கு ஏற்றவாறு புலிகளுடன் பகையை வெளிப்படுத்துவது.

தங்களைப் பொறுத்தவரை தங்களின் நேர்மையான சமாதான முன்னெடுப்புக்கு சவாலாக நான் மேற்கூறியுள்ள விடயங்கள் இப்போது உங்கள் முன்னால் உள்ளன.

பிந்தியதாக இனவாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் விடுதலைப்புலிகள் தொடர்பாக ஏற்படுத்தியுள்ள பீதிகள், விடுதலைப்புலிகளையும் கூடவே, தமிழ் மக்களையும் தமிழ் தேசத்தில் இருந்து அப்புறப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருப்பதால், அரசின் இந்ததவறான நோக்கங்களுக்கெதிராக உறுதியான விடாப்பிடியான போராட்டத்தை தாங்கள் நடத்த வேண்டியுள்ளது என்பதை தங்களுக்கு தெளிவு படுத்த விரும்புகிறேன். இது வரலாற்றின் தேவையாகும்.

இதற்காக நீங்கள் உங்கள் கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் கூட போராட வேண்டியிருக்கும்.

தீர்க்க தரிசனத்துடன் காரியங்களை முன்னெடுத்து, தேசம் எதிர்நோக்கியிருக்கும் பெரும் யுத்த அழிவில் இருந்து அதனை மீட்க தங்கள் முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி.

தோழமையுடன்,

– விசித்திரன் – (29.06.04)

சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

நேரம்	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு
6.30	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	
6.59	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	நிகழ்ச்சி ஆரம்பம்
7.00	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	சக்தி செய்திகள்	அன்பு மடல்
7.05	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	அன்பு மடல்/பாடல்கள் 7.30	காலைக்கதிர்
7.30	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	சங்கீதமேடை	காலைக்கதிர்
8.00	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்டி சுட்டி	சிறுவர் நேரம்
8.30	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	கிட்ஸ் மூவி	சிறுவர் நேரம்
9.00	கோலங்கள்	கோலங்கள்	கோலங்கள்	கோலங்கள்	கோலங்கள்	குட்டி சுட்டி	ஸ்டார் சமையல்
9.30	கொமடி டைம்	கொமடி டைம்	கொமடி டைம்	கொமடி டைம்	கொமடி டைம்	குட்டி சுட்டி	அரட்டை அரங்கம்
10.00	பெப்சி உங்கள் சாய்ஸ்	தில்லானா தில்லானா	பாட்டுக்குப் பாட்டு	நம்மநேரம்	கொண்டாட்டம்	களம்	சப்த ஸ்வரங்கள்
10.30	நெஞ்சில் நின்ற ராகங்கள்	சுகமான ராகங்கள்	ஆடலும் பாடலும்	இனிய கீதங்கள்	இசைத் தென்றல்	திரைவானம்	டொப் 10 மூவி
11.00	மெட்டி ஒலி	மெட்டி ஒலி	மெட்டி ஒலி	மெட்டி ஒலி	மெட்டி ஒலி	மறக்க முடியுமா	கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட்
11.30	ஆனந்தம்	ஆனந்தம்	ஆனந்தம்	ஆனந்தம்	ஆனந்தம்	சினி சொய்ஸ்	சின்ன சின்ன ஆசைகள்
12.00	நட்சத்திரம்	சுப்பர் சீன்ஸ்	திரை விமர்சனம்	மீண்டும் சிரிப்பு	பிரபலன்கள் ரசித்தவை	ரிலாக்ஸ் டைம்	சின்ன சின்ன ஆசைகள்
12.30	செய்திகள்(எம்.ரீவி)	செய்திகள்(எம்.ரீவி)	செய்திகள்(எம்.ரீவி)	செய்திகள்(எம்.ரீவி)	செய்திகள்(எம்.ரீவி)	ரிலாக்ஸ் டைம்	ஸ்டார்ஸ்பெஷல்
1.00	மதிய செய்திகள்	மதிய செய்திகள்	மதிய செய்திகள்	மதிய செய்திகள்	மதிய செய்திகள்	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
1.30	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	மங்கை	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
2.00	(றொமான்ஸ்)	(அக்சன்)	(கொமடி)	(கிளசிக்)	மங்கை	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
2.30	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
3.00	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
3.30	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
4.00	டிஸ்னி வேல்ட்	டிஸ்னி வேல்ட்	கில்லி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	விக்கிரமாதித்தன்	ஜீ பூம்பா
4.30	கார்ட்டூன் நிகழ்ச்சி	கி–மேன்	தமிழ் கார்ட்டூன்	மலரும் மொட்டும்	சக்தி மேட்னி	விக்கிரமாதித்தன்	ஒப்போடு
5.00	கொண்டாட்டம்	சினி சொய்ஸ்	ஸ்டார் ஸ்பெஷல்	சுப்பர் சீன்ஸ்	என்றும் கலாட்டா	கொமடி நிகழ்ச்சி	வேலன்
5.30	இசைத்தென்றல்	இசைத்தென்றல்	இசைத் தென்றல்	இசைத் தென்றல்	இசைத் தென்றல்	இப்படிக்கு நீங்கள் அன்பு மடல் 5.45	அன்பு மடல் 5.45
6.00	களம்	இளைய கானம்	ஒப்போடு	பாடல்கள்	கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட்	TO BE CONFIRMED	மின்னல்
6.30	குங்குமம்	குங்குமம்	குங்குமம்	குங்குமம்	குங்குமம்	TO BE CONFIRMED	மின்னல்
7.00	காவ்யாஞ்சலி	காவ்யாஞ்சலி	காவ்யாஞ்சலி	காவ்யாஞ்சலி	காவ்யாஞ்சலி	அலைஸ்	"24"
7.30	நீ நான் அவள்	நீ நான் அவள்	நீ நான் அவள்	நீ நான் அவள்	நீ நான் அவள்	(அக்சன் சீரியல்)	அக்சன் சீரியல்
8.00	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்
8.30	சித்தி	சித்தி	சித்தி	சித்தி	சித்தி	ருத்ர வீணை	இளைய கானம்

கவிதைப் புனல்

காலத்தின் தேவை

உறங்கிக் கிடந்த என் உணர்வுகளை
ஒருமுறை தட்டிப்பார்த்தேன்
உறவுகளின் ஸ்பரிசத்தால்
உயிர்த் துடிப்புக் கூட
ஒருமுறை அடங்கித் துடித்தது
உறவுகளின் அன்பென்பது
பிரித்தறிய முடியாத மூலக்கூறு..!
என்பதை இப்போது தான்
புரிய வைத்தது எனக்கு
இயற்கையின் நியதியைக் கூட
ஏற்க மறுக்குது மனது!
காலம் இட்ட கட்டளையைக் கூட
புறந்தள்ளத் துடிக்குது உள்ளம்!
ஆனால், புரிந்தோ புரியாமலோ
தெரிந்தோ தெரியாமலோ
காலத்தின் தேவையை – நாம்
நிவர்த்தி செய்யவே வேண்டும்!

கி.செந்துஷா, மல்லாவி.

நிமிர்ந்து நட!

மணப்பெண்ணே....
ஆயிரம் பேர் சாட்சியாக
ஆண் மகனை
விலை கொடுத்து
வாங்குகிறாய்?
தலை குனியாதே?
நிமிர்ந்து நட!

இ.வனிதா, வட்டக்கச்சி.

அது ஒரு மழைகாலம்!

ஆறுதல் சொல்ல யாருமேயின்றி
அழுது கொண்டிருந்தது வான்மேகம்!
சோலைகள் எல்லாம் சோகத்தை தொலைத்து
சொரிந்து கொண்டிருந்தது பூச்சாரல்!
சூரத்தில் குயிலோ இயற்கையை வாழ்த்தி
தேனென இசைக்குது பூபாளம்!
அழகிய தோகைக் குடையினை விரித்து
மயிலினம் போடுது ஜதிதாளம்!
மலையினில் தவண்ட நதி மெல்ல நடந்து
கடல்மடி
சேருது இசையோடு!
அலையது வந்து கரத்தினை உயர்த்தி
ஆறுதல் தேடுது கரையோரம்!
இயற்கையின் அழகால் சிறகினை விரித்த – என்
மனதினில் மலர்ந்தது கவிமலரும்!
உவப்பினை தந்து உணர்வினை தொட்டது
உண்மையில் அதுவொரு மழைக்காலம்!

கி.திருவேணி, யாழ்.பல்கலைக்கழகம்

ஏன் இந்த மாற்றம்

காலமெல்லாம் – என்
கரம் பிடித்தே
வாழ்வேனென்றாய்....
கன்னியவள் கண்களுக்குள்
கனவுகளை தேக்கி
நெஞ்சமெல்லாம் – உன்
எண்ணங்களை நிரப்பி
நித்தமும் – உன்
நினைவுகளை சுமந்தபடி
உனக்காய் ஒருத்தியிங்கு..!
என் நெஞ்சக் கோவிலில்
உன்னையிருத்தி
பல காலம் பூஜைகள் உனக்காய்...

நீ மட்டும் ஏனோ – இன்று
திசை மாறி நிற்கிறாய்
ஒன்று மட்டும் உண்மை
உன்னையிழந்து இனி
என் ஜீவன் வாழாது
கண்ணீரில் கரையும்
என் வாழ்க்கைக்கு
முடிவொன்று சொல்லிவிடு
இல்லையேல் – என்
கல்லறைக்கான நீருக்காய்
உன் கண்ணீரை
உதிர்த்து விடு!...

சிந்துஜா.
ஊர்காவற்துறை.

மனிதனாக

என் கறுப்பான.
கண்ணீர்த் துளிகள்
ஒவ்வொன்றினாலும் உனக்கான
கல்லறை இதயத்தில்
ஈர விழிகளில்
இளமையான பொழுதுகள்
மனதுக்குள் வலிகளாக
வழிந்து கொண்டிருக்கின்றன.
நிகழ்காலப் பொழுதுகள்
பௌர்ணமி நாட்களாய்
ஒரு பகலுக்காய் காத்திருக்கின்றன
என்னாள் எப்போதுமா?
அமைதியான உன் புன்னகைப்பின்
ஒலிகள் தான் என்
இதயத்தை இயக்கிக் கொண்டிருப்பதால்
மகிழ்வுகள் மரணிக்கப்பட்டபின்பும்
மனிதனாக நான்
மரிக்கப்படாதவுன் நினைவுடன்.

விஜி நடேசபிள்ளை, பளை.

நம்பிக்கையில்

நதி ஓடுகிறது
கடலை நோக்கி
வண்டு பறக்கிறது
பூவை நோக்கி
நான் நடக்கிறேன்
வெற்றியை நோக்கி
ஆனால்–
என்னை நோக்கி
ஓடி வந்தது தோல்வியே
ஆனாலும் நான்
துவண்டு போகவில்லை
ஒரு முறையல்ல ஓராயிரம்
முறையும் போராடினேன்
தோல்வியுடன்
ஏன் தெரியுமா?
ஓராயிரத்து ஓராவது முறையாவது
எனக்கு வெற்றி கிட்டும் என்ற
நம்பிக்கையில்.

பெ.டெல்சன் றோய், பெரியவிளான்.

தோல்வி

வெற்றிவாகை சூடிய நான்.
இப்போது மகாதூசி ஆக்கியவர்
நீதானே?
தோகையே எனது தோல்வியை
ஒப்புக் கொடுக்கிறேன்!

ம.வோஜினி, தாளையடி.

கல்வி முக்கியம்

(கிராமியப் பாடல்)

பள்ளிக்குப்போய் வரவே
பாவி உள்ளம் துடிக்குதம்மா
பள்ளிக்கூடம் வேண்டாமென்று
பாலரையும் தடுக்கலாமோ
எமையொத்த வயதினிலே
சிறுவரெல்லாம்படிக்கவே செல்கிறார்கள்
துணையென்று சொல்லி நீரும்
பள்ளி செல்லத் தடுக்கலாமோ
கட்டாயக்கல்வி வந்து
காலமெல்லாம் போகுதம்மா
எட்டாத கனிகளாகி
ஏங்க நீரும்விடலாமோ
நல்லவனாய் வாழ வேண்டும்
வல்லவனாட வாழ வேண்டும்
நல்ல கல்வி தேடிடவே
பள்ளி வழி காட்டுமம்மா

ச.சுப்பிரமணியம்.

காதல் இதயத்துடிப்பு

காதல் என்ன..!
பட்ட மரமா
'படீர்' என்று முறிவதற்கு....
காதல் என்ன...
வீசும் காற்றா மாறி மாறி
வீசுவதற்கு...
காதல் என்ன..!
கரும்பலகையில் எழுதிய
எழுத்தா வேண்டாம்
என்றவுடன் அழிப்பதற்கு...
காதல் என்ன..!
முகம் பார்க்கும் கண்ணாடியா
தவறி விழுந்தவுடன்
உடைவதற்கு...
காதல் என்ன..!
மண்பானையா..!
போட்டு விட்டதும்
பொட்டென்று சிதைவதற்கு..!
காதல் என்ன..!
பூவா வாடி
விழுவதற்கு...
மழையா இடைக்கிடையே
பொழிவதற்கு...
காதல் ஒரு
இதயதுடிப்பு – உயிர்
இருக்கும் வரை
துடித்த வண்ணமே...!

பி.சசி, நானாட்டான்.

புன்னகை

உன் புன்னகை என்னும் அம்புகளால்
என்னைத் தாக்கி என் உதிரம்
வெளியேறும் போதும் மீண்டும்
மீண்டும்
புன்னகைக்கிறாயே என்னை
கொல்லுவதற்கா
இந்த புன்னகை?

அ.அனுஷன், வட்டக்கச்சி.

சென்றுவிடுவாயோ காதலியே!

செந்நிற தோலுடையாள்
செம்பவள இதழ்களால்
செப்பிய வார்த்தைகளோடு
சென்னி குனிந்து என்னருகில்
செருப்பால் மண்தடவியபடி –
நிற்கையில்
செத்துப்போன இதயமதில் –
பவளத்தால்
செதுக்கிய சிலை வடிவாய்,
செங்கமலத்தில் வீற்றிருக்கும்
செல்வமகளாய் காட்சி அளித்த –
அன்று
சென்றுவிட்ட காதலன்
செருக்களத்தில் நிற்பதறிந்து
சென்று விடுவரயோ காதலியே!

க.ந.நவலோகன், வட்டக்கச்சி.

பிரசவங்கள்

அன்னையே!
உன் கருவிலிருந்து
எனை பிரித்தது
எனது –
உலகுக்கான பிரசவம்
உனக்கது –
''முதலாம் பிரசவம்''
உன் மடியிலிருந்து
எனை பிரிததது
எனது –
பாடசாலை பிரவேசம்
உனக்கது –
''இரண்டாம் பிரவேசம்''
உன் விழியிலிருந்து
எனை பிரிக்குதே
இந்த –
மறுவூர் பிரவேசம்
உனக்கிது
''மூன்றாம் பிரசவம்.''

ஜாவிட் ரயிஸ், நிந்தாவூர்

மூன்றெழுத்து

உன்னைப் பாராத நாள்
முதல் என் வாழ்வில்
தென்றல் வீசியது
ஏன் என்று கேட்டால்
பாசம், அன்பு, பண்பு
மரியாதை
என்று கூறியது
உன்னை
நீ என்றால் உனது எனது
நமதாகும் இல்லையேல்
பூமிக்கு அர்ப்பணமாகும்.

ஜோதிகா.

ஆதிவாசி ஆழகிகள் அணிந்திடும் ஆடை!



இந்தியக் காடுகளில் வாழும் ஆதிவாசிப் பெண்கள் அழகானவர்கள். அழகான ஆடைகளையும் அவர்கள் அணிந்திருப்பார்கள். ஆதிவாசி அழகிகள் அணிந்திருக்கும் ஆடைகளை அணிந்து புது டில்லியில் நடைபெற்ற அழகிக் கண்காட்சியில் இந்த அழகி தோன்றி அனைவரையும் கவர்ந்து விட்டார். இந்திய ஆடைக் கலைஞர்கள் அஷிமாவும் லீரைவும் இந்த ஆடைகளை உருவாக்கியிருந்தார்கள்.

இரவு நேரச் சூ வருகை தந்த சூ

மேல் நாடுகளின் சில பகுதிகளில் இரவு நேரத்திலும் சூரியன் வானில் தென்படும் இந்த இரவு நேரச் சூரியனைக் காண்பது மனோரம்மியமானது. வானத்தின் ஒரு கோடியில் சந்திரன் தென்பட மறுமுனையில் சூரியன் வருகை தந்தால் அது ஒரு இனிய காட்சிதான். கடல் அலைகள் ஆர்ப்பரிக்க இரவு நேரம் சூரியன் தோன்றும் காட்சியை ரசிக்கின்றார் இந்த உல்லாசப் பிரயாணி.



ஊனமுற்ற ஹொக்கி வீரன் நலன் பேணும் நண்பன்

உடல் ஊனமுற்றவர்களுக்கு தேவையான பணிவிடைகளைச் செய்வதற்காக சிறுவர்களை வேலைக்காரர்களாக வைத்திருப்பதற்கு மேலை நாட்டுச் சட்டம் இடம் தராது. எனவே வீட்டு வேலைகளைச் செய்வதற்கு குரங்குகளை அவர்கள் பழக்கி எடுத்து விடுகிறார்கள். போஸ்டன் நகரில் ரோய் என்னும் இந்த ஹொக்கிவீரன் பாரிசவாதத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறார். சக்கர நாற்காலியில் காலம் தள்ளும் ரோய் கேட்டபடி தண்ணீர் போத்தலை எடுத்துக் கொடுத்து உதவுகிறார் இந்த குரங்கு நண்பன்.

மசா மிக்

மூன்று வயதடைந்த குழந்தைக்கு மெத்தை மீது படுத்து செய்வது என்றால் கொ தான். கம்போடியாவின் ஓயியன் சம்பாட்டுக்கும் பட்டுக்காவிட்டால் தூக்க ஆனால், அவன் விரும்ப ஆபத்ததானது. அவன் 13 ஷாமிரன் என்றும் பெ பாம்பு கருண்டு படுத்திரு ஒரு மெத்தையாகக் கரு விடுகிறான் பாலகன் ஓயி பாம்பும் அவனைத் தன் யாக வரித்து விட்டது பட தாலே தெரிகிறது.

குலோகாட் தரும் ஜேர்ம்கார்ட்

வாய்ச்சுகாதாரத்தில் ஒரு புதிய புரட்சி

புளோரைட் மட்டுமே அடங்கிய பற்பசை பற்களுக்குச் சிறிது பாதுகப்புத் தரக்கூடும். ஆனால்... இதோ! பல்துலக்கிப் பல மணி நேரத்துக்குப் பின்னரும் கிருமிகளைத் தாக்கிப் போராட விசேசமாகத் தயார்செய்த இலங்கைப் பற்பசை!

அறிமுகம் செய்கிறோம். "குளோகார்ட்" தரும் ஜேர்ம்கார்ட் பற்பசை. வாய்ச்சுகாதாரத்தில் ஒரு புதிய புரட்சி "கிருமிகளை" எதிர்க்கும் ட்ரைக்லோசான் உள்ளடங்கிய அதிசிறந்த ஜேர்ம்கார்ட் செய்முறையும் சில் என்ற மின்ற் சுவையும் கொண்டது. உங்கள் வாயைக்

கிருமிகளின்றி ஆரோக்கியமாக வைத்திருக்க ஒரே தெரிவு ஜேர்ம்கார்ட்!



புளோரைட் மட்டுமே அடங்கிய சாதாரண பற்பசை

அதிசிறந்த ஜேர்ம்கார்ட் செய்முறை அடங்கிய புதிய ஜேர்ம்கார்ட் பற்பசை

சூரியன் குதூகலம்



சாலா மிக்ஸ்

...த்து நித்திரை
...ொண்டாட்டம்
...ாவின் பாலகன்
...கும் மெத்தை மீது
...தூக்கம் வராது.
...ிரும்பும் மெத்தை
... 13 ... நீளமான
... பெண் மலைப்
...த்திருக்க அதனை
...க் கருதி தூங்கி
...ன் ஓயியன். பெண்
...த் தனது குழந்தை
...து படத்தைப்பார்த்

சுகமான நித்திரைக்கு மலைப்பாம்பு மெத்தை!

இறைச்சிக் கடைகளில் தொங்குவதில் ஆனந்தம்



இறைச்சிக் கடைகளில் மாமிசத்துண்டுகளை கம்பிகளில் குத்தித் தொங்கவிடுவார்கள். தொடை தொடையாகத் தொங்கும் இறைச்சியைப் பாவனையாளர்கள் ஆசையோடு வாங்கிச் செல்வார்கள். லண்டனில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் கலந்து கொண்ட மந்திரவாதி ஜோன் கமிக்காஸே இறைச்சிக்கடைகளில் மாமிசத் துண்டுகள் தொங்குவது போலத்தானே தொங்கி அனைவரையும் அதிர வைத்துவிட்டார்.

ஒளிந்திருக்கும் முகம் எது?

மே 24 , சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை திவ்யா உன்னி. சரியான விடையைக்கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

1. க.குமாரி, நிலாவெளி, திருகோணமலை. 2.மு.அருள், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. 3.கு.தர்ஷன், மட்டக்குளி, கொழும்பு. 4. ஜோ.ரோகினி, கொட்டாஞ்சேனை, கொழும்பு. 5. குமார், யாழ்ப்பாணம்.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த உருவம் யாருடையது?

பல இதயங்களை தனது நடனத்தின் மூலம் திருடியவர், இன்றைய பிரபல நட்சத்திரமான தனுஷுடன் அறிமுகமானவர்.

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

ஜேர்ம்கார்ட் பல்துலக்கிப் பலமணிநேரம் கிருமிகளை எதிர்த்து நிற்கும்.

உங்கள் மூக்கினால் கவலையா? பிளாஸ்டிக் சிகிச்சை நிவாரணி

கேள்வி: பெண் வயது 20. எனது மூக்கு சப்பையாக தோற்றமளிக்கின்றது. இதனால் மற்றவர்கள் என்னைக் கேலிசெய்கின்றார்கள். இதனை நிவர்த்திக்க வழியுண்டா?

பதில்: நீங்கள் PLASTIC SURGEON எனப்படும் அழகு சிகிச்சை நிபுணரின் ஆலோசனை பெறவேண்டும். இந்த நிபுணர்கள் உங்கள் சப்பை மூக்கை அழகான மூக்காக்கும் திறமை கொண்டவர்கள். ஆனால் சிகிச்சை செலவோ பல ஆயிரம் ரூபாவாக இருக்கும்.

கேள்வி: ஆண் வயது 20. கடந்த இரண்டு மாதமாக – குளித்துவிட்டு நன்றாக துவட்டினால் தேகம் முழுவதும் எறும்பு கடித்தது போல் தடித்து விடுகிறது. மெதுவாக தோலில் நகத்தால் தேய்த்தால்கூட இப்படியாகிவிடுகிறது. இதற்கு என்ன காரணம்?

பதில்: உங்களுக்கு ஒரு ஒவ்வாத்தன்மை (ALLERGY) ஏற்பட்டுள்ளது. உங்கள் நோய் – GIANT URTI CARIA என்ற யானைக்கரப்பான். அழுத்தமாக துவட்டும் தோலில் கலங்கள் சிதைவுற்று HISTAMINE என்ற ஒவ்வாத்தன்மையைத்தரும் சுரப்பை தோலில் சுரக்கின்றன. இந்தச்சுரப்பினால் தான் இந்த மாதிரி தேகத்தில் தடித்து காணப்படுகின்றது. இது ஏன் ஏற்படுகின்றது என்பது கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், HISTAMINE க்கு சமப்படுத்தும் ANTI HISTAMINE மருந்துகளை தொடர்ந்து உபயோகித்து வர குணம் காணலாம். சில ANTI SHISTAMINE மருந்துகள் – பிரிட்டோன் (PIRITON), LORATIDINE, ASTEMIZOLE ஆகும். மருந்துவரின் ஆலோசனையுடன் உபயோகிக்கவும்.

கேள்வி: ஆண் வயது 19 அரையில் அரிக்கின்றது. வட்ட வட்டவடிவமான சொறிபோல் தெரிகிறது பரிகாரம் கூறவும்?

பதில்: இது (RING WORM) என்கின்ற ஒரு பங்கசு தொற்று. உள்ளாடைகளில் இந்த பங்கசு SPORES எனப்படும் வித்துகள் தொற்றப்பட்டு உருவாகின்றது. அனேகமான சலவை தொழிலாளிகள் ஆடைகளை தோய்த்து புற்தரையில் உலரவிடுவார்கள். அத்தரையில் நாய், பூனை போன்ற பிராணிகள் உருண்டு புரளுவதுண்டு. அவைகளில் உள்ள பங்கசு SPORES தரையில் சிந்தப்பட்டு உங்கள் ஆடைகளுடன் சேர்ந்து கொள்ளலாம். இவைகூட இம்மாதிரியான பங்கசு தொற்றுகளை தரும். இதற்கு முற்றாக சிகிச்சை அளிக்கப்படுவதென்றால் வெளிப்பூச்சு மருந்தும், உள் மருந்தும் எடுக்க வேண்டும்.

CLOTRIMAZOLE பூச்சு மருந்தும் பூசுவதற்கு உரியது. GRISO FULVIN மாத்திரைகள் – குறைந்தது 3 மாதம் தொடர்ந்து உபயோகிக்கவேண்டும். உள்ளாடைகளை நாமே தோய்த்து நல்ல வெய்யிலில் உலரவிடுவது இத்தொற்றுகளில் இருந்து எம்மை பாதுகாக்க உதவுகின்றது.

கேள்வி:– பெண். வயது 25. எனது கால் பெருவிரல் நகங்கள் அருகிலுள்ள தசைக்குள் புதைந்து வளருகின்றன. இதனால் சிலவேளைகளில் தாங்கொண்ணாத வலி ஏற்படுகிறது. என்ன செய்யலாம்?

பதில்:– உள்நோக்கி வளரும் கால் நகம் (INGROWINGTOE NAIL) என்ற நிலையினால் நீங்கள் கஷ்டப்படுகின்றீர்கள். நகங்கள் பக்க வாட்டில் தசைகளினுள் வளர்வதால் இது ஏற்படுகிறது.

இதற்கு முக்கிய காரணம் நகங்களை பிழையாக வெட்டுவதுதான். நகங்கள் விரலுக்கேற்ற வாறு வளைத்து வெட்டப்படாமல் நேர் கோட்டில் வெட்டப்பட வேண்டும். இப்படி வெட்டினால் பக்கத்து தசைகளை மேவி – தசைகளுக்குள் புகாமல் – நகம் இயற்கையான முறையில் வளரும்.

தற்போதைய நிலையில் நீங்கள் – தசையினுள் புகுந்திருக்கும் நகப்பகுதியை கத்தரித்து அகற்றி வெந்நீரில் அடிக்கடி பாதங்களை நனைத்து வைக்கலாம். வெட்டப்பட்ட நகப்பகுதியின் கீழ் – தசைக்கு மேல் – பஞ்சுத் துண்டு ஒன்றை செருகி சில நாட்களுக்கு வைப்பதால்– தசைப் பகுதியை மேவி நகம் வளர ஏதுவாகும்.

கேள்வி:– வயது 50. ஆண். எனக்கு இதய நோய் இருக்கின்றது. இதயத்துக்கு இரத்தத்தை விநியோகிக்கும் 'கொரனரி' நாடிகளில் அடைப்பு 60% இருப்பதாக இதய நிபுணர் கூறியுள்ளார். இதற்கு கொரனரி பைபாஸ் (CORONORY BYPASS) சிகிச்சை செய்யும்படி ஆலோசனை சொன்னார். இந்த சிகிச்சை செய்ய எனக்கு பண வசதியுமில்லை– அதைவிட இதய சத்திர சிகிச்சை செய்ய மிகவும் பயமாகவும் உள்ளது. இதய நாடிகளில் உள்ள கொழுப்பைக் கரைத்துவிட ஊசி மருந்தில் சிகிச்சை நடைபெறுவதாக அறிந்தேன். எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இவ்வாறு சிகிச்சை பெற்று இப்பொழுது எதுவித மருந்தும் இன்றி சுகமாக வாழ்க்கை நடத்துகிறார். இந்த இரத்த நாடி அடைப்புக்களை கரைக்கும் சிகிச்சை பற்றி அறியத் தருவீர்களா?

பதில்:—நீங்கள் சொல்லும் சிகிச்சைக்கு CHELATION THERAPY என்று பெயர். 1960ஆம் ஆண்டிலிருந்து இருதய நாள அடைப்புகளுக்கு இன்னொரு சிகிச்சை முறையாக வெற்றிகரமாக இது நடைபெற்று வருகிறது. இந்த சிகிச்சையின் வெற்றி— தேர்ந்தெடுக்கப்படும் நோயாளியின் தன்மையிலேயே தங்கியிருக்கின்றது. அதாவது நோயின் தீவிரம், பாதிக்கப்பட்ட நோயாளியின் மற்றைய உறுப்புகளின் சுகபலம், என்பவை இந்த சிகிச்சையின் முன்னர் இனம் காணப்படவேண்டும். அதன் பின்னர் இவர்களுக்கு EDTA (ETHYLENE DIAMINE TETRA ACETIC ACID) என்ற மருந்தை குளுக்கோஸ் அல்லது சேலைன் (SALINE) கலந்து மெதுவாக 3—4 மணி நேரம் ஏற்றுவார்கள். குறைந்தது 30 தடவை இந்த மருந்து ஏற்றப்பட வேண்டும். அதன் பின்னர் மாதத்துக்கு ஒரு தடவையோ இரண்டு மூன்று மாதத்துக்கு ஒரு தடவையோ மருந்து ஏற்றப்படும்.

இந்த மருந்து இரத்தக்குழாயில் இரத்த ஓட்டத்தை தடை செய்து கொண்டிருக்கும் கொழுப்புத்திட்டுக்களில் படிந்துள்ள கல்சியம் என்ற உப்பை கரைத்துவிடுகிறது. அதன் பின்னர் – கொழுப்பு மென்மையடைந்து அழுந்தி இரத்தத்தில் கரைந்துவிடுகிறது.

இதய சத்திர சிகிச்சைக்கு பயந்தவர்கள் இந்த வழிமுறையைக் கையாண்டு பார்க்கலாம். செலவும் மிகக்குறைவு.

இன்று உலகில் இந்த சிகிச்சை முறை— இதயக்குழாய்களின் அடைப்பினை கரைப்பதற்கு மாத்திரமல்ல நீரிழிவு நோயால் ஏற்படும் சதை கரைவு (DABETIC GANGRENE), கண்களுள் இரத்தக்குழாய் அடைபட்டு ஏற்படும் குருட்டுத்தன்மை—(MACULAR DEGENERATION OF THE EYE) பித்தப்பை—சிறுநீரகக் கற்கள் போன்றவற்றிற்கும் இந்த chelation சிகிச்சை செய்யப்படுகின்றது.

கேள்வி:— வயது 24. திருமணமாகி கர்ப்பமாக இருக்கிறேன். இத்தோடு மூல வருத்தமும் இருக்கிறது. முதற்பிள்ளை என்பதால் பயமாக இருக்கின்றது. ஆலோசனை கூறுங்கள். இந்தக்கேள்வியை இது வரை 4 தரம் கேட்டிருந்தும் பதில் தரப்படவில்லை. எனவே இம்முறையாவது தயவு கூர்ந்து பதில் தாருங்கள்.

பதில்:— முதலில் நீங்கள் இறுதியாக சொல்லிய விடயத்தை விளக்கிவிட்டு உங்கள் நோய் பற்றி பதிலளிக்க விரும்புகிறேன். இந்த மருத்துவ பகுதிக்கு நாளாந்தம் நூற்றுக்கணக்கான கேள்விகள் வந்த வண்ணம் உள்ளன. எனவே அவற்றுள் வாரத்துக்கு சிலவற்றுக்குத்தான் பதிலளிக்க முடியும். இதனால் உங்கள் கடிதம் தவறுதலாகத் விடுபட்டுப்போயிருக்கலாம். இனி உங்கள் நோய் பற்றி கவனிப்போம். உங்களுக்கு கர்ப்பமாகுமுன்னரே மூல நோய் இருந்ததா அல்லது கர்ப்பத்தின் பின்னரே மூல வருத்தம் ஏற்பட்டதா என்று நீங்கள் அறியத்தரவில்லை. எதற்கும் இந்த இரண்டு நிலைகளுக்கும் ஆலோசனை தருகிறேன். கர்ப்பத்தின் முன்னரே மூல நோய் இருந்தால் — கர்ப்ப காலத்தில் இரத்தப்போக்கு அதிகரிப்பதால் உங்கள் இரத்தச்சத்து (HAEMOGLOBIN) குறைந்து இரத்தச்சோகை (ANAEMIA) உண்டாக வாய்ப்புண்டு. வெளி மூலம் போல் கட்டிகள் மட்டும் இருந்தால் அவை வீங்கி வேதனை தரும் சாத்தியக்கூறுகள் உண்டு. கர்ப்பமாக இருக்கின்றபடியால் உங்களுக்கு சத்திரசிகிச்சை இப்போதைக்கு செய்ய முடியாது. இழக்கும் இரத்தத்தை ஈடு செய்ய — இரும்புச்சத்துள்ள மாத்திரைகளை கர்ப்ப காலத்தில் உபயோகிக்க

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்திமல்லிமராய்ச்சி மாவத்தை
> கொழும்பு – 14

வேண்டும். வீங்கி வேதனையுடன் வெளியே தள்ளி இருக்கும் மூலத்துக்கு anusol, pilex போன்ற பூச்சு மருந்துகள் பூசி குணம் பெறலாம். குழந்தை பெற்றவுடன் சத்திரசிகிச்சை செய்துகொள்ளலாம். கர்ப்பம் அடைந்த பின்னர் சில பெண்களுக்கு மூல நோய் ஏற்படும். இது அதிகமாக வெளியே வந்த வீங்கிய மூல நோயாகவே இருக்கும். குழந்தை வயிற்றினுள் வளர வளர இந்த மூல நோய் அதிகரிக்கலாம். மேற்கூறிய களிம்பு வகைகளை உபயோகிக்கலாம். மலச்சிக்கல் ஏற்படாமல் உணவு முறைகளை கைக்கொள்ள வேண்டும். காய்கறிகள், கீரை வகைகள், பழவகைகள் உணவில் சேர்ப்பது மலச்சிக்கலைத்தவிர்க்கும். மலச்சிக்கலில் மலம் கழிக்கும்போது அதிக நேரம் மூச்சுப்பிடித்து கஷ்டப்பட்டு மலம் கழிப்பதால் — மூலம் வெளியே வந்து வேதனை தரும். பல மணி நேரம் உட்கார்ந்து வேலை பார்க்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் மூல நோய் ஏற்பட வாய்ப்புண்டு.

கலைந்துபோன ஆசைகள்

இரண்டு பெரிய பொதிப்பைகளுடன் பஸ்ஸை விட்டு இறங்கிய சங்கர், தனது வீடு அமைந்திருக்கும் நீண்ட கிளை வீதிக்குள் பிரவேசித்தான். கையில் பொதிகளின் சுமை அதிகமாக அழுத்த வாடகைக்கு அமர்த்த ஓட்டோ ஏதும் வருமா எனப் பார்த்தவாறு வீதியோரமாக நின்றவன் பதினைந்து நிமிடங்களைக் கடந்தும் ஓட்டோ ஏதும் அவ்வழியால் வராததால் மீண்டும் பைகளைச் சுமந்தவாறு நடக்க ஆரம்பித்தான்.

அம்மாவுக்கு, தங்கைக்கு, மச்சானுக்கு என ஒவ்வொருவருக்கும் ஆசையாசையாய் வாங்கிய பொருட்கள் ஒரு பையை நிறைத்திருக்க மற்றைய பையில் தங்கையின் மடியில் இன்னும் ஏழு மாதங்களில் தவழப்போகும் அந்தக்குட்டிப்பாப்பாவுக்காக வாங்கியிருந்த பொருட்களுடன் நீண்ட காலத்தின் பின் அனைவரையும் பார்க்கப்போகிறோமே என்கின்ற ஆசையில் உள்ளம் சிறகடித்துப்பறக்க நடந்துகொண்டிருந்தான். தோளில் தொங்கிக்கொண்டிருந்த பொதிகளின் சுமை தோளை வெகுவாக அழுத்திய போதும் அவை தனது உறவினருக்கானவை என எண்ணும்போது சுமையைச்சுமப்பது கூட சுகமாகவே இருந்தது அவனுக்கு. நீண்ட வீதியினூடாக நடந்துகொண்டிருந்தான் சங்கர். சூரியனின் கதிர்கள் மேனியைச் சுட்டெரித்துக் கொண்டிருந்தன. மணிக்கட்டைத்திருப்பி கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தான். நேரம் பன்னிரண்டைக்கடந்து கொண்டிருந்தது.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக படையினரிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காக சங்கரும் அகதி என்ற ரீதியில் லண்டனுக்குச் சென்று பத்து வருடங்களைக் கடந்துவிட்டிருந்தது. வயதுக்கு வந்த தங்கையும் வயதானதாயும் தன் தயவில் இருப்பதை உணர்ந்து ஓய்வேதுமின்றி இரவு பகல் பாராது உழைத்தான் சங்கர்.

''தம்பி சங்கர் தங்கச்சிக்குப் பெரிய இடத்தால ஒரு சம்பந்தம் வந்திருக்குமோனை. ஆனா அவையள் கொஞ்சம் தேனம் கூடக் கேட்கினம்.'' தாய் கமலம் கூற ''எல்லாம் அவளுக்காகத் தானே நான் உழைக்கிறன் அம்மா. அதுசரி அவயள் எவ்வளவு கேட்கினம் என்று சொல்லேல்லையே'' என்று கேட்டான் சங்கர். ''தம்பி யாழ்ப்பாணத்தில் வீடு வளவு நகை ஒரு இருபது பவுண். அதோட காசு இருபது லட்சம் தரச்சொல்லினம்'' என்று கமலம் கூற ''ஓமெண்டு சொல்லுங்கம்மா. மேற்கொண்டு நடக்க வேண்டிய எல்லாத்தையும் நீங்கள் செய்யுங்கோ. நான் காசனுப்ப ஏற்பாடு செய்யிறன்'' என்று சங்கர் கூறியதும் மும்முரமாகத் திருமண ஏற்பாடுகள் நடைபெற்றன. தங்கையின் திருமணத்துக்கு வர முடியாமல் போகவே கடும் முயற்சியின் காரணமாக ஓராண்டுகள் கழிந்து இப்போது வந்திருந்தான் சங்கர்.

கடந்த காலத்தைப்பற்றிய சிந்தனையோடு நடந்துகொண்டிருந்தான் சங்கர்.

''அது பாவம் வெளி நாட்டிலயிருந்து உந்தப் பாடுபட்டு உழைச்சனுப்பின காசெல்லாத்தையும் அந்தக்குடிகார நாய்க்கு தேனமாய் அள்ளிக்குடுத்து கலியாணத்தைச் செய்து வைச்சு கடைசியில அந்தப் பிள்ளையின்ர உயிரையும் எல்லே அந்தப் பாவி பறிச்சிட்டான். வாயும் வயிறுமா இருந்த பிள்ளையை குடி போதையில வந்து தள்ளி அடிச்ச அடி, வயித்திலையும் பட்டு கருவும் அழிஞ்சு கடைசியில அந்தப் பிள்ளையின்ர உயிரும் போயிற்றுது. அந்தப்பொடியன் அறிஞ்சா என்ன பாடுபடும்'' என்று கதைத்தவாறு தன் முன்னே சென்றவர்களைக்கண்ட சங்கர் ''என்ன சின்னையா எப்படியிருக்கிறியள். கந்தசாமி ஐயா கடையில வியாபாரம் எப்படிப் போகுது? அதுசரி உந்தக்கொதிவெயிலிலயுங் நடந்து போறியள் என்றவனை உற்றுநோக்கியவாறு நின்றனர் அந்த இரு முதியவர்களும். ''என்ன என்னைத் தெரியேல்லைப் போல. நான் தான் கமலத்தின்ர மோன் சங்கர்.'' விளக்கம் கூறியவாறு அவர்களுடன் இணைந்து நடந்தவன் அவனது வீடு இருக்கும் ஒழுங்கைக்குள் திரும்பியதும் ஒரு கணம் அதிர்ந்தான். வாழைமரமும் தோரணமும் அம்மாக கமலத்தின் அழுகுரலும் சங்கருக்கு அந்த இரு முதியவர்கள் கதைத்த சம்பாசணையிலிருந்து நடந்தது என்ன என்ற உண்மையை புரிய வைத்தது.

ஆசைகள் அனைத்தும் தவிடுபொடியாகப் போக ஆசையாய் தங்கைக்கும் அவளுக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்கும் என கொண்டு வந்த பையைச் சுமந்த கையில் தங்கையின் சிதைக்குத் தீமூட்ட வென தரப்பட்டிருந்த கொள்ளிக்குடத்தைச் சுமந்தவாறு அவளின் பூதவுடலின் ஊர்வலத்தில் நடந்துவந்துகொண்டிருந்தான் சங்கர் ஓர் நடைப்பிணமாக!

க.சுமித்தரா

கண்களின் கீழ் கருவளையமா?

இன்று பல பெண்களுக்கு உள்ள முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று கண்ணுக்குக் கீழே உள்ள கருவளையத்தை எப்படி நீக்குவது என்பது தான்! அதனால் முகத்தின் அழகையே கெடுத்துவிடக்கூடிய கருவளையத்தை நீக்குவதற்கான சில வழி முறைகளை இங்கு பார்ப்போம்.

பப்பாளி அல்லது வெள்ளரியால் தயாரிக்கப்பட்ட தரமான 'அண்டர் ஐ கிரீம்' (மெடிக்கல் ஸ்ரோர்களில் கிடைக்கும்.) இதை கண்களைச் சுற்றித் தடவி அரை மணி நேரம் கழித்து அவற்றைச் சுத்தம் செய்ய வேண்டும். இந்தக் கிரீமைத் தடவியபடியே இரவில் படுக்கச் செல்லக்கூடாது. சுத்தம் செய்த பின்பே தூங்கச்செல்ல வேண்டும்.

பிஞ்சு வெள்ளரிக்காயை நறுக்கி கண்களின் மேல் வைத்து சிறிது நேரம் ஓய்வு எடுக்க வேண்டும். இதனால் கண்கள் குளிர்ச்சியடைந்து கருவளையம் குறையும்.

பச்சை உருளைக்கிழங்கை மேல் தோலோடு சீவி சாறு எடுத்து கண்ணுக்கு அடியில் தடவி வந்தால் கருமை நீங்கும்.

கண்ணுக்குப்பயிற்சி

கண்ணுக்கு வெகு அருகில் கட்டை விரலை நேராக வைத்துப்பார்க்க வேண்டும். பின்பு அதனையே சற்று தொலைவில் கொண்டுபோய்ப் பார்க்க வேண்டும். இது போல் மாற்றி மாற்றி பத்து பதினைந்து தடவைகள் செய்ய வேண்டும்.

முகத்துக்கு முன்னால் இரண்டு கைகளையும் ஒன்றை மேல் நோக்கியும் மற்றொன்றை கீழேயும் வைத்துக் கொள்ள வேண்டும். முதலில் மேல் உள்ள கையைப் பார்த்துத் திரும்பக் கீழே உள்ள கையைப்பார்க்க வேண்டும். இதையே திரும்பத்திரும்ப 10 முதல் 15 தடவைகள் செய்யலாம்.

இரண்டு கைகளாலும் கண்களை மூடி இருட்டை உணர வேண்டும். இதற்கு பால் மிங்க் என்று பெயர். கண்கள் ரிலாக்ஸ் ஆகி ஓய்வு பெறும். கருமைகளும் மறையும்.

சிலருக்கு இரவில் சரியாகத்தூக்கம் வராது. இதற்கு இன்சோமியா என்று பெயர். பல நாட்கள் தூக்கமின்மையால் அவதிப் படும்போது இயல்பாகவே கண்களுக்கு அடியில் கருவளையம் தோன்றிவிடும். லாவண்டர் ஆயிலை இலேசாக நுகர்ந்து பார்த்தாலே போதும். தூக்கம் தானாக வந்துவிடும். உடல் நலமும் நன்றாக இருக்கும். கண்ணின் கருமையும் நீங்கிவிடும்.

கண்ணில் கறுப்புத்துணி கட்டிக் கொண்டு (இறுக்கமாக வேண்டாம்) தூங்கச் சென்றால் கண்கள் இருட்டின் தன்மையை உணர்ந்து தூக்கம் விரைவில் வரும்.

கறுப்பு, வெள்ளை படங்கள் மற்றும் கணினித்திரை ஆகியவற்றைத் தொடர்ந்து பார்ப்பவர்கள் அவ்வப்போது பச்சை அல்லது நீல நிறத்தைப் பார்ப்பது நல்லது.

பச்சையும் நீலமும் கண்ணுக்கு அதிக பளு கொடுக்காது. நீங்கள் வேலை பார்க்கும் இடங்களில் பச்சை நிற ஓவியமோ படங்களோ அறையில் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

இளம் பச்சை நிறமுள்ள வெற்றிலையில் குளிர்ச்சியான பன்னீர் தெளித்து ஒவ்வொருகண்ணின் மேல் கொஞ்ச நேரம் வைத்துக் கொள்ளலாம். இதனால் கருமை நீங்கும்.

எனவே, சகோதரிகளே, உங்கள் கண்களின் கீழ் உள்ள கருவளையத்தைப்போக்குவது எவ்வாறு என்று இவ்வளவு நாளும் நீங்கள் யோசித்தது போதும். இன்றே மேற்கண்ட பயிற்சி முறைகளைப் பின்பற்றிப் பாருங்கள். வெற்றி உங்கள் கையில்.

சமையல் குறிப்பு

நண்டு கட்லெட்

தேவையான பொருட்கள்	
சதைப்பற்றுள்ள பெரிய நண்டு	1 கிலோ
உருளைக்கிழங்கு	1/4 கிலோ
முட்டை	3
வெங்காயம்	1/4 கிலோ
பச்சை மிளகாய்	4
இஞ்சித்துண்டு	சிறியது.
உள்ளிப்பல்	10
மிளகு	1/4 கரண்டி
சீரகம், சோம்பு, கசகசா	1 கரண்டி
ரொட்டித்தூள்	100 கிராம்.
எண்ணெய்	தேவையான அளவு.
கறிவேப்பிலை, கொத்தமல்லி	சிறிதளவு.
உப்பு	தேவையான அளவு

செய்முறை

நண்டைச் சுத்தம் செய்து ஆவியில் வேக வைத்து கூடு நீக்கி சதைப்பகுதியை எடுத்து வைத்துக்கொள்ளவும். உருளைக்கிழங்கை தோலுரித்து கட்டிகள் இல்லாமல் உதிர்த்துக் கொள்ளவும்.

சின்ன வெங்காயம், பச்சை மிளகாயை வெட்டிக்கொள்ளவும். சீரகம், கசகசா, சோம்பு, இஞ்சி, பூண்டு, மிளகு, இவற்றை விழுதாக அரைத்துக்கொள்ளவும். முட்டைகளை உடைத்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி அடித்து வைத்துக் கொள்ளவும்.

பின்பு நண்டுச்சதை, உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், அரைத்த விழுது, உப்பு எல்லாவற்றையும் ஒன்றோடொன்று சேருமாறு நன்கு பிசைந்து, அடித்து வைத்துள்ள முட்டையில் நனைத்து ரொட்டித்தூளில் பிரட்டி நமக்குப்பிரியமான வடிவத்தில் செய்து எண்ணெயில் பொரித்தெடுத்தால் நண்டு கட்லட் தயார். என்ன சகோதரிகளே, நண்டு கட்லட் செய்ய இப்பவே நீங்கள் ரெடியா?

உங்கள் கணவர் பொய் சொல்பவரா?

நல்லதொரு குடும்பம் சிறந்த பல்கலைக்கழகம் என்பார்கள். பொதுவாக ஒரு குடும்பத்தை சிறந்த முறையில் கொண்டு நடத்த வேண்டுமெனில் அதற்கு கணவன்—மனைவி ஆகிய இருவரிடையே முக்கியமாக இருக்க வேண்டியது புரிந்துணர்வே! எந்த ஒரு விடயமானாலும் கணவன்—மனைவி ஆகிய இருவரும் கலந்தாலோசித்து தீர்மானங்களை எடுக்கும்போது தான் அங்கு மகிழ்ச்சி மேலோங்கி, பல தேவையற்ற பிரச்சினைகள் தவிர்க்கப்படுகின்றன.



பொதுவாக கணவன்—மனைவி ஆகிய இருவரிடையே பிரச்சினைகள் தோன்றக் காரணமாக அமைவதில் முக்கிய இடத்தைப் பெறுவது பொய் பேசுதலே! ஒரு சாதாரண விடயத்துக்காகக் கூட ஆண்கள் அதிகமாகப் பொய் பேசுகிறார்கள் என்று ஒரு தன்னார்வ அமைப்பு மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது. சின்னச் சின்னப் பொய்களில் தான் பெரிய பெரிய தவறுகளுக்கான அத்திவாரங்களே ஆரம்பமாகின்றன. அழகை ரசிக்கிறேன் என்று கூறிக்கொண்டு முதலில் அழகிய பெண்களைப்பார்ப்பார்கள். பின்னர் அவள் யாராக இருக்கும் என எண்ணி அவளைப் பற்றிய விவரம் தேடுவார்கள். அதுவும் முழுமையாகக்கிடைத்துவிட்டால் பின்பு அவர்கள் நினைத்ததையும் சாதித்துவிடுவார்கள்.

இந்த விடயத்தில் ஆரம்பத்திலிருந்தே நேர்மையாக நடந்துகொள்ளும் ஆண்கள், பாதை தவறாமல் தப்பித்துக்கொள்கிறார்கள்.

ஆனால் ஆண்கள் பொய் சொல்கிறார்கள் என்பதற்காக பெண்கள் எப்போதுமே ஆண்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். எதற்கெடுத்தாலும் சந்தேகப்படும் சில பெண்களால் தான் பல ஆண்கள் பாதை மாறிப்போகக் காரணமாகின்றன. அதே போல் சந்தேகமே இன்றி தமது கணவன் உத்தமன் என்று நம்புவதும் தப்பு. சந்தேகம் என்பது புற்றுநோய் போன்றது என்பார்கள். எனவே கணவன் மனைவியையோ அல்லது மனைவி கணவனையோ தேவையற்ற விடயங்களிலெல்லாம் சந்தேகப்படுவதை முதலில் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

கணவனின் பேச்சு சாதுர்யத்தால் மயங்கிப் போய் அல்லது எதிர்த்துப்பேச முடியாமல் மனைவிகளும் அடங்கிப்போவது கணவன்மார்களுக்கு மிகவும் சாதகமாக அமைகிறது.

எனவே பெண்களே, கணவர்கள் என்ன பொய் சொன்னாலும் அதை அப்படியே நம்பிவிடாதீர்கள். அடுத்த முறை அவர் அவ்வாறு பொய் சொல்லாத மாதிரி நடந்துகொள்ளுங்கள்.

என்னதான் பெண்கள் முன்னெச்சரிக்கையுடனும், சாமர்த்தியத்துடனும் நடந்துகொண்டாலும், கணவனின் பொய்கள் குறைவதே இல்லை. கணவன்மார்கள் மனதளவில் மாற வேண்டும். அதற்கு உங்கள் அன்பு மற்றும் தோற்றப்பொலிவால் அவரை உங்கள் வசமாக்கப்பாருங்கள்.

உடம்பு வலி பறந்தோட

பொதுவாக பலமணி நேரம் தொடர்ந்து பிரயாணம் செய்தாலோ அல்லது அடிக்கடி வாகனங்களில் பிரயாணம் செய்தாலோ அல்லது கனமான பொருட்களைத் தூக்கி வேலை செய்தாலோ உடல் வலி நிச்சயம் இருக்கும். அவ்வளவு ஏன்? தொடர்ந்து வெகு நேரம் ஏ.ஸி அறையில் இருந்தால் கூட உடம்பு வலி அழையாத விருந்தாளியாக வந்து பாடாய்ப் படுத்தும். 'எத்தை தின்றால் பித்தம் தெளியும்' என்பது போல், ஆவி பறக்க வெந்நீர்க்குளியல், அலுப்பு நீக்கும் மருந்துகள், கஷாயம் என்று எதை எதையோ முயற்சிப்போம். ஆனால் இவற்றுக்கெல்லாம் மசியாத உடல் வலியைப் போக்க இதோ சில பயிற்சி முறைகள் உங்களுக்காக!



*சம தரையில் நேராகப்படுத்துக் கொண்டு கால்களை நேராக நீட்டுங்கள். இடது காலை மடக்கி முட்டியை உயர்த்தி பாதத்தை அழுத்தமாகத் தரையில் பதிய வையுங்கள்.

*வலது காலை நேராக நீட்டியபடியே வைத்து, பெருவிரலைத் தவிர மற்ற நான்கு விரல்களையும் கீழ் நோக்கி மடக்குங்கள். பிறகு நிதானமாக விரல்களை பழைய நிலைக்கு கொண்டுவாருங்கள். இப்படியே தொடர்ந்து சுமார் பதினைந்து முறை செய்யுங்கள். இதே போல் இடதுகாலிலும் செய்யுங்கள்.

*பாதங்களின் மேற்புறம் தரையில் படும்படி குப்புறப்படுத்துக்கொள்ளுங்கள். பின்பு கைகளைத் தரையில் அழுத்தமாக ஊன்றி முழங்காலைத் தரையில் பதித்துக்கொண்டு மெதுவாக எழுங்கள்.

*பின்பு இரு பாதங்களின் மீதும் இடுப்புப்பகுதி இருக்கும்படி உடலைப்பின்னே கொண்டு செல்ல வேண்டும். முகத்தை முழங்காலில் புதைத்துக்கொள்ளுங்கள். கைகள் இரண்டும் தரையில் இருக்க வேண்டும். இவ்வாறு ஏழுமுறை செய்யுங்கள். அசதி போச்சு என்பீர்கள்.

பெண்ணே

நக்மா இனி..!

நடிகை ஜோதிகாவின் அக்காவும், முன்னாள் நடிகையுமான நக்மா, வெகுவிரைவில் இயக்குனராகப் போகிறார்.

இயக்குனர் ஷங்கரால் தமிழ் திரை உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டவர் நடிகை நக்மா, 2 ஆவது படத்திலேயே ரஜினியுடன் ஜோடியாக நடித்தவர், வரிசையாக பெரிய, பெரிய ஹீரோக்களுடன் நடித்து ஒரு ரவுண்டு வந்தவர், பின்னர் காதல் வலையில் சிக்கி அதன் மூலம் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தவிர்க்க சென்னையை விட்டு மும்பை சென்று விட்டார். மும்பையில் பேஷன் டிசைனிங் நடத்திக் கொண்டு செட்டிலாகி விட்டார்.

சிறிது காலம் அவரைப் பற்றி எந்தச் செய்தியுமே வெளிவராமல் இருந்தவர், தேர்தலின் போது திடீரென பரபரப்பாக பிரசாரம் செய்தார். அதனைத் தொடர்ந்து இப்போது ஒரு படத்தை இயக்கவுள்ளார். குழந்தைகளுக்கான ஒரு அனிமேஷன் படத்தை நக்மா இயக்க, 'ஆஸிஸ் சின்னாஸ்' என்ற நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இது பற்றி நக்மா தெரிவிக்கையில்,

''குழந்தைகளுக்கான ஒரு படத்தை இன்றைய நவீன தொழில்நுட்பங்களுடன் இயக்க வேண்டும் என்பது எனக்கிருக்கும் நீண்ட நாள் எண்ணம். இதே அடிப்படையில், ஆங்கிலப் படங்களான 'லயன் கிங்', 'ஜங்கிள் புக்' போன்ற படங்களைப் போல அமைக்கத் திட்டமிட்டுள்ளேன். இந்தப் படத்தை ஆங்கில மொழியில் இயக்கி, பின் தேவையான மொழிகளுக்கு ஏற்ப டப்பிங் செய்து கொள்ளும் திட்டத்தில் உள்ளோம்'' என்று தெரிவித்தார்.

நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வரும் இந்தத் திட்டம் வெகுவிரைவில், மும்பையில் நிறைவேறும் என்று தெரிவிக்கிறது நக்மாவின் நண்பர்கள் வட்டாரம். சக நடிகைத் தோழிகள் பலர் படங்களைத் தயாரித்தும், இயக்கியும், பெரும்பாலும் கையைச்சுட்டுக் கொள்ளவே செய்தனர். நக்மாவின் நிலை படம் வெளிவந்த பிறகே தெரியும் என்கிறது நம்ம கோடம்பாக்க வட்டாரம்.

பொய் சத்தியம் செய்யாத கமல்



கமல் இளைஞராக இருந்த காலத்தில், அவரது தந்தை பெண்கள் விஷயமாக கமலிடம் கேட்ட சத்தியத்தை செய்யாமல், வெளிப்படையாக மறுத்துப் பேசிய சுவாரஸ்யமான தகவல் பற்றி சமீபத்தில் கமல் சொன்னார்.

சினிமாவில் ஆரம்பக்கால வளர்ச்சியில் இருந்த நேரம் அது. ஓரளவு பிரபலமாக வந்து கொண்டிருந்தார். அவரது தந்தையான வழக்கறிஞர் சீனிவாசன் (பெருந்தலைவர் காமராஜின் நண்பர்) தனது மகன் சினிமாவில் இருப்பதால் கெட்டுவிடுவான் என்ற எச்சரிக்கையுடன் கமலைக் கூப்பிட்டு மூன்று சத்தியங்கள் கேட்டார். மொத்த குடும்பம் முன்னிலையில் கமலின் தகப்பனார் கமலை அழைத்து, ''நீ உனக்கு பிடிச்ச தொழில்லே இருக்கே. அது சினிமாவாக இருந்தாலும் எங்க யாருக்கும் அதுல வருத்தமோ ,கருத்து வேறுபாடோ இல்லை. ஆனா, சினிமா உலகம் ரொம்ப ஆடம்பரமானது. எல்லாவித வசதிகளையும் அனுபவிக்கும் ஆசையும் வாய்ப்பும் அங்கு அதிகம். அதனால நீ எனக்கு மூணு சத்தியம் செய்து கொடுக்கணும். புகைப் பிடிக்கக் கூடாது. மது அருந்தக் கூடாது. பெண்களிடம் தொடர்பு வைக்கக் கூடாது'' என்று கூறினார்.

உடனே கமல் ''அத்தி! (அப்பாவை கமல் அப்படித்தான் அழைப்பார்) உங்க அக்கறை, பாதுகாப்பு உணர்வு புரியுது. புகை பிடிப்பது உடல் நலத்துக்கு தீங்கானது. அதை தொடமாட்டேன்னு உங்களுக்கு சத்தியம் செய்து கொடுக்கிறேன். குடித்தால் அறிவு மழுங்கிப்போகும். அதனால் குடிக்கமாட்டேன்னும் சத்தியம் செய்து தர்றேன்''. என்றவர் சுற்றிலும் பார்த்தார். அப்பா, அம்மா, பெரியண்ணா, பெரிய அண்ணி அனைவரும் இருந்தார்கள். இத்தனைப்பேரும் இருக்கிறார்கள். எதற்கு வம்பு? மிகச்சுலபமாக பெண்களை தொடமாட்டேன் பொய் சத்தியம் செய்து விட முடியும். இருந்தாலும் கமல் அவ்வாறு செய்ய வில்லை. ''அத்தி! நீங்க மூன்றாவது சொன்ன பெண்கள் விஷயத்தில் என்னால் தாண்டிச் செல்ல முடியாது. அந்த மனப்பக்குவம் எனக்கு இல்லை. எனவே, பொய்ச் சத்தியம் பண்ண விரும்பவில்லை'' என்று துணிந்து கூறியேவிட்டார். வீட்டில் யாரும் இதுபற்றி இதற்கு மேல் பேசவில்லை.

குஷியில் குஷ்பு

தயாரிப்பாளர் குஷ்புவின் முதல் வெற்றி

நடிகை குஷ்பூ முதல் முறையாக, அவனி சினிமேக்ஸ் என்ற படநிறுவனத்தின் சார்பில் 'கிரி' என்ற படத்தைத் தயாரிக்கிறார். இப்படம் இப்போதே வினியோகஸ்தர்கள் மத்தியில் வியாபாரம் ஆகி முடிந்து விட்டது.

கதை, திரைக்கதை, அமைத்து சுந்தர். சி. டைரக்ட் செய்ய 'கிரி' என்ற படத்தை குஷ்பு தயாரிக்கிறார். இப்படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு கும்பகோணம், மாயவரம், திருச்சி போன்ற இடங்களில் நடைபெற்று வருகிறது முதல்கட்ட படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே அனைத்து ஏரியாக்களிலும் விற்று முடிக்கப்பட்டுவிட்டது.

'கிரி' படத்தில் அர்ஜுன் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக ரீமாசென் நடிக்கிறார். இவர்களுடன் ரம்யாவும் முக்கியமான வேடத்தில் பிரகாஷ்ராஜும், தேவயானியும் நடிக்கின்றனர். மற்றும் வடிவேல், பெப்ஸி விஜயன், மகாநதி சங்கர், மதன் பாப், பொன்னம்பலம், மாணிக்கம் விநாயகம், மயில் சாமி, முத்துக்காளை, போண்டா மணி, ஆர்த்தி, லீலா ஆகியோரும் நடிக்கிறார்கள்.

டி. இமான் படத்திற்கு இசைமயைக்க தினேஷ் நடனம் அமைக்கிறார். ஜி.பூபதி பாண்டியன் படத்திற்கு வசனம் எழுத கே.எஸ்.செல்வராஜ் ஒளிப்பதிவு செய்கிறார்.

ஏற்கனவே ரேவதி, பானுப்பிரியா, ரோஜா, ரம்பா, தேவயானி போன்றவர்களெல்லாம் சொந்தப் படம் எடுத்தவர்கள்தான் ஆனால் இவர்கள் தயாரித்த படங்கள் எல்லாம் வினியோகஸ்தர்கள் மத்தியில் வியாபாரம் ஆகாமல், தாங்களாகவே சொந்தமாக ரிலீஸ் செய்ய வேண்டிய நிலைக்கு ஆளானார்கள். அதனால் கையைச் சுட்டுக்கொண்டு கடனில் மூழ்கினார்கள். ஆனால், குஷ்பு கதையே வேறு. முதல் கட்ட படப்பிடிப்பு முடிப்பதற்கு முன்பே விற்று விட்டார். என்பதால் குஷ்பு விற்கு முதல் வெற்றி கிடைத்துவிட்டது என்று பேசிக் கொள்கின்றனர் கோடம்பாக்க வட்டாரங்கள்.

'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்' நூறு நாள்கள் ஓடியிருந்தாலும் பெரிய அளவில் பேசப்படவில்லை. எனவே தனுஷின் தற்போதைய நம்பிக்கை எல்லாம் 'சுள்ளான்' மீதுதான். இதில் போக்கிரித் தனமான வேடம் தனுஷிக்கு. அவருக்கு ஜோடி சேருகிறார் புதுமுகம் சிந்து துலானி. 'திருடா திருடி' போல் காதல், ஆக்ஷன், காமடி கலந்த படமாகும். இதை இயக்குபவர் 'திருமலை' படத்தை இயக்கிய ரமணா.

ரம்யாகிருஷ்ணன்

சாயாசிங்கும் அவர் வளர்க்கும் நாயும்

தான் வளர்க்கும் செல்லப்பிராணியான நாய்க்குட்டிக்காக சாயாசிங் விமானத்தில் பயணம் செய்வதில்லை.

'திருடா திருடி' படத்தில் 'மன்மதராசா' பாடல் மூலம் பிரபலம் ஆனவர் சாயாசிங். இவர் இப்போது 'அம்மா அப்பா செல்லம்', 'ஜெயகுரியா' மற்றும் தெலுங்கில் 2 படங்களில் நடித்து வருகிறார். இவர் வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணியான 'பொமேரியன்' ரக நாய்க்குட்டி மேல் மிகவும் பிரியம் வைத்திருக்கிறார். 'செபாஸ்டியன்' என்று அதற்கு பெயர் வைத்திருக்கிறார். 'சாபி... சாபி' என்று அதை செல்லமாக அழைக்கிறார். அதை விட்டு எப்போதும் பிரியாமல் இருக்கிறார். வெளியில் எங்கு போனாலும், சாபியை விட்டு சாயாசிங் பிரிவதில்லை. படப்பிடிப்பு நடக்கும் இடங்களுக்கும் நாய்க்குட்டியை கூட்டிக்கொண்டு போகிறார்.

இதில் அவருக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டது. விமானத்தில் நாயை ஏற்றமாட்டார்கள் என்று கேள்விப்பட்ட சாயாசிங் விமானப் பயணத்தையே வெறுத்துவிட்டார். நாய்க்குட்டியை கூட்டிப்போவதற்காகவே எங்கு போனாலும் காரில் தான் போகிறார். இதனால் ஒரு பிரச்சினையும் செய்யவில்லை. ஆனால் அவருக்கு ஏற்பட்டது ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்க வைத்தும் சாபிக்காக அவர் தியாகம் செய்துவிட்டார். சாதாரண ஹோட்டல்களிலும் சாயாசிங் தங்குகிறார். "சாபி மீது எனக்கு அவ்வளவு பிரியம். அது ஒரு குழந்தை மாதிரி" என்கிறார் சாயாசிங்.

"ஹீரோ இடுப்பில் ஏறி உட்கார்வது தான் உங்கள் ஸ்டைலா?" என்று கேட்டதற்கு "நான் ஆசைப்பட்டு ஒயிப்போய் இடுப்பில் ஏறி உட்கார்ந்த மாதிரி கேக்கறீங்களே! 'டான்ஸ் மாஸ்டர்' லக்கும் மூவ்மெண்ட் அது. அதை எப்படி நான் மறுக்க முடியும்" என்றார்.

விஜயகாந்தின் மற்றொரு அதிரடி படம் தான் 'கலெக்டர்'. அவருக்கு ஜோடி சேருபவர் லயா. சுரேஷ் கிருஷ்ணா இயக்குவதால் ஆக்ஷன் மட்டுமின்றி குடும்ப பாசம், சென்டிமெண்ட் படத்தில் முக்கிய பங்கு வகிக்கும்.

ஜோதிகா காய்ச்சலில்

ஜோதிகா, நெருப்புக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதால், அவர் சம்பந்தப்பட்ட படப்பிடிப்புகள் அத்தனையும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

நடிகை ஜோதிகா, ஏற்கனவே 'மணிகண்டா' படத்தின் பிரச்சினை காரணமாக தயாரிப்பாளர்கள் சங்கத்தினரால் ரெட் கார்ட் வழங்கப்பட்டு, நடிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறார். அதன் மூலம் வேறு படங்களில் நடிக்க முடியாமலும், புதிதாக எந்த ஒரு படத்திலும் ஒப்பந்தம் செய்யப்பட முடியாமலும், அவதிப்பட்டு வந்தார். இந்த குழப்பங்களில், சென்ற வாரம் அவருக்கு காய்ச்சல் வந்தது. அதனால் வீட்டிலேயே ஓய்வெடுத்த அவருக்கு அருகில் இருந்து கவனித்துக்கொள்ள ஆள் இல்லாத காரணத்தால், மும்பைக்குச் சென்றார். அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இரண்டு நாட்களில் உடம்பு சரியாகி விட்டது என்று மருத்துவர்கள் தெரிவிக்க, உடனே சென்னை திரும்பினார். சென்னைக்கு வந்த பிறகும், ஜோதிகாவுக்கு விட்டு விட்டு காய்ச்சல் வர ஆரம்பிக்கவே மறுபடியும் மருத்துவமனைக்குச் சென்றார். அங்கு ஜோதிகாவுக்கு டாக்டர்கள் சிகிச்சை செய்து பார்த்தபோது, அது நெருப்புக் காய்ச்சல் என்று தெரிவித்தனர்.

இதனால் எந்தவொரு வேலையும் செய்யாமல் முழுமையாக ஓய்வு எடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் பரிந்துரைத்ததன் பேரில், ஜோதிகா சம்பந்தப்பட்ட அனைத்துப் படங்களின் படப்பிடிப்புகளும் ரத்து செய்யப்பட்டன. சென்னை வீட்டிலேயே முழுமையாக ஓய்வு எடுத்து வரும் ஜோதிகாவுக்கு, வைத்தியர்கள் வீட்டிற்குச் சென்று சிகிச்சை அளித்து வருகின்றார்.

* மதுரையில் நடந்த முடிந்து கொண்டிருக்கிற உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு 'ஏற்றுகு' என்ற பெயரில் ஒரு படம் உருவாக உள்ளது. 'அன்பு' காதல் கிகிகி' ஆகிய படத்தில் கதாநாயகனாக நடித்த பாலா நாயகனாக நடிக்கிறார். 'தேசிய விருது பெற்ற 'வாருக்கு நூறுபேர்' என்ற படத்தில் கதாநாயகன் ஹனிபாவுமிக், இந்த படத்தில் வில்லனாக அறிமுகமாகிறார்.

* 'காதல் கொண்டேன்' செல்வராகவனின் புதிய படைப்பு இது. சென்னை கே.கே.நகரில் காதல் காவியம் தான் இதன் கதைக் கரு. புதுமுகம் ரவிக்கிருஷ்ணா நாயகனாகவும் சோனியா அகர்வால் நாயகியாகவும் நடிக்கின்றனர். ஏ.எம்.ரத்னம் தயாரிக்கிறார்.

சொற்சிலம்பம் போட்டி இல.111

சொற்சிலம்பம் 111 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஜூன்14ஆம் திகதி ஆகும். விடைகள் ஜூன்21ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூன்28ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.109க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

சொற்சிலம்பம் போட்டி இல.111



சொற்சிலம்பம் போட்டி இல.109

1 மு	2 க	ஸ்	3 து	4 தி	■	5 க	6 வி
7 த	ர	■	8 வி	த்	9 து	ட	ல்
10 லா	ம்	11 பு	■	12 தி	ணி	வு	■
ளி	■	13 தி	14 கை	ப்	பு	■	15 த
■	16 வ	ன	ப்	பு	■	17 நா	ன்
18 கு	ட	ம்	பி	■	19 மே	தி	னி
20 வ	லி	■	21 ச	22 க	டை	■	றை
னை	■	23 ஆ	கு	தி	■	24 சா	வு

சொற்சிலம்பம் போட்டி இல.111

இடமிருந்து வலம்

1. ஒன்றாக வாழ்தல்/தோழமை பழக்கம்.
5. ரஜனியின் கடைசிப்படம்.
7. கட்டுப்படுத்தும்/மட்டுப்படுத்தும் சொல்.
8. நீரில் மிதப்பது.
9. தானை.
10. பூமி.
12. தங்குதடையின்றி.
14. கல்யாணம்.
16. மரம்.
17. நில்லை.
19. தின்/சாப்பிடு.
21. சீட்டில் முக்கியமானது/சிறியது. பல் குத்தவும் உதவும் என்பர்.
22. எடை அளக்கும் கருவி.

மேலிருந்து கீழ்

1. வேறுபாடின்றி அனைவரும் ஒன்றாக இருந்து உணவருந்துவது.
2. குற்றம்/குட்டை.
3. மெலி/வதங்கு.
4. முழுமை.
5. படிக்க வேண்டியது/படிப்பது.
6. நீர்த் தன்மைக்கும் திரவத் தன்மைக்கும் இடைப்பட்டது.
8. வலு.
11. குழப்ப நிலை.
12. நேரான தரை.
13. இரும்பில் பிடிப்பது.
15. ஒரு சுவை.
16. ஒரு நாண் வாத்தியம்.
18. பெண்.
20. குழந்தை.

சொற்சிலம்பம்-108 பரிசு பெறுவோர்.

1. இரா.தாட்சாயணி, பது/பட்டவத்த.த.வி, மடுல்சீமை.
2. த.சுவர்ணா, 13, கொல்லைவிளாங்குளம், வவுனிக்குளம்.
3. திருமதி.லோ.சோமலிங்கம், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

பாராட்டுப்பெறுவோர்

1. ச.பிளேசியஸ், தலைமன்னார் வீதி, பேசாலை.
2. சி.பவித்திரா, வதிரி, கரவெட்டி.
3. கே. ஸ்ரீவிமலராணி, கணேசபுரம், கிளிநொச்சி.
4. கு.அர்ச்சனா, 5ஏ வட்டாரம், நயினாதீவு.
5. எஸ்.டி. தாசன், 135, கங்க வீதி, திருகோணமலை.
6. ஆ.அதிரூபசிங்கம், அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.
7. ஆர்.ராகினி, எஸ்பீல்ட் தமிழ் வித்தியாலயம், டிக்கோயா.
8. நா. சிவலிங்கம், எம்.ஓ.எச். விடுதி ஒழுங்கை, கல்முனை.
9. செல்வி.க. சஷீலா, மூளாய் றோட், வட்டு மேற்கு.
10. பொ.துரைராசா, கன்னாகம் தெற்கு, கன்னாகம்.

இவ்வார 'ராசிபலன்' 07—06—2004 , 13 —06—2004

பொ. சந்திரன்

ராசி பலன்

இவ் வார கிரகநிலை

	ராகு	புதன் சூரியன்	செவ்வாய் சுக்கிரன் சனி
(வக்கிரம்)	செவ்வாய் புனர்பூசம் 4ம் சுக்கிரன் மிருகசிரிடம் செவ் புதன் மிருகசிரிடம் செவ் சூரியன் மிருகசிரிடம் செவ்		குரு
	4ம் புனர்பூசம் 4ம் சுக்கிரன் சனி திருவாதிரை ராகு		
		கேது	

புதன் இடப்பம் முதல் மிதுனம் வரை

சந்திரன் மகரம்முதல் மேடம்வரை

மேடம்: அச்வினி, பரணி, கார்த்திகை 1.

ராசிக்குரிய செவ்வாய் மூன்றில் இருப்பது விசேஷம். செவ்வாய் மூன்றில் வலியவன். மேலும் குருவின் சாரம் பெற்று இருப்பது சிறப்பானது. ராசியில் ராகு இருப்பது குறை. குரு ராசியைப் பார்ப்பது நிறை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. சிறு பிரயாணம் அதாவது குறுந்தூரப்பிரயாணம் அமையும். (2,7) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். 7இல் கேது இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. குரு நல்ல நிலையில் இருப்பதால் திருமண முயற்சி தொடரும். நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு,வாகனம் லாபம் தரும். பத்துக்குரிய சனி 3இல் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். குருவின் இருப்பும் பார்வையும் . ஆலய வழிபாடு, பெரியோர் நட்பு என்பன அமையும்.

இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசிரிடம்1,2.

ராசிக்குரிய சுக்கிரன் இரண்டாம் வீட்டில் இருப்பதும் செவ்வாயின் சாரத்தில் இருப்பதும் பறவாயில்லை. புதனும் சுக்கிரனும் பரிவர்த்தனம் அடைவது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முயில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. கையில் பணம் இருக்கும். சொன்ன சொல்லு செல்லும். அதாவது சொல்லுக்கு மதிப்பு இருக்கும். நாலுக்குரிய சூரியன் ராசியில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். ராசியில் சூரியன், புதன் சேர்க்கை கல்வியில் ஆர்வம் இருக்கும். புதுப்புது எண்ணங்கள் தோன்றும். (7,12) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பதால் திருமண பலன் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய சனி இரண்டில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். குரு. தொழில்ஸ்தானத்தைப் பார்ப்பது சிறப்பு.

மிதுனம்: மிருகசிரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

(1,4) உரிய புதன் 12இல் இருப்பது நல்லதல்ல. மேலும் செவ்வாய் சாரம் பெற்று இருப்பது குற்றம் இல்லை. ராசியில் சனி இருப்பது குறை. எடுத்த முயற்சி தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய குரு மூன்றாம் இடத்தில் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கும். தொழில் துறையில் பின்னடைவு வர வாய்ப்புண்டு. ராசியில் சனி இருப்பதும் குருவைச் சனி பார்ப்பதும் 7ஆம், 10ஆம் வீடுகளைச் சனி பார்ப்பதும் குரு மூன்றில் இருப்பதும் தீய பலன்களைக் கொடுக்கக் கூடும். வார மத்தியில் புதன் ராசிக்கு வருவதால் சிறு முன்னேற்றம் தென்படும்.

கடகம்: புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்.

ராசிக்குரிய சந்திரன் மகரம் முதல் மேடம் வரை அதாவது 7,8,9,10 வீடுகளில் சஞ்சரிப்பதால் குறிப்பாக 8ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் காலம் தீய பலனைச் செய்யும். வார ஆரம்பத்தில் அதன் மேல் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். இரண்டுக்குரிய சூரியன் 11இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் 12இல் மறைவதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். நண்பர்களால் செலவுண்டு. மூத்த சகோதரத்துக்கு நல்லதல்ல. (8,7) உரிய சனி 12இல் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். ஆனால் குரு இரண்டில் இருப்பதால் திருமண முயற்சி தொடரும். 10க்குரிய செவ்வாய் 12இல் இருப்பதால் தொழிற்துறை பாதிக்கலாம்.

சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.

ராசிக்குரிய சூரியன் 10இல் இருப்பது சிறப்பானது. மேலும் செவ்வாயின் சாரத்தில் இருப்பது குற்றம் இல்லை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,11) உரிய புதன் 10இல் இருப்பதும் நல்லது. கையில் பணம் இருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (4,9) உரிய செவ்வாய் 11இல் இருப்பதால் பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். (6,7) உரிய சனி 11இல் இருப்பதால் திருமண பலன் உண்டு. கடன் தீரும். நோய் விலகும். இருப்பினும் குரு இருப்பதால் மன அமைதி இருக்காது. 10க்குரிய சுக்கிரன் 11இல் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். ராசியை சனி பார்ப்பது சங்கடம் தான். அவதானம் தேவை.

கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.

(1,10) உரிய புதன் 9இல் இருப்பது விசேஷம். மேலும் செவ்வாயின் சாரத்தில் இருப்பது குற்றம் இல்லை. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்கும். (2,9) உரிய சந்திரன் 10இல் அதாவது புதன் சுக்கிரன் பரிவர்த்தனம் . கையில் பணம் இருக்கும். இரண்டில் கேது இருப்பது குறை தான். (4,7) உரிய குரு 12இல் மறைவது, வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். 7ஆம் வீட்டை சனி பார்ப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. அதே போல் 4ஆம் வீட்டை சனி பார்ப்பதால் அந்த வீட்டுக்குரிய நன்மைகள் பாழாகலாம். வார மத்தியில் புதன் தன் சொந்த வீடான மிதுனத்துக்குப்போகிறபடியால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.

ராசிக்குரிய சுக்கிரன் 9இல் இருப்பது விசேஷம். மேலும் செவ்வாயின் சாரத்தில் இருப்பது பறவாயில்லை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆராக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உருவாகும். பக்க உதவிகள் கிடைக்கும். (2,7) உரிய செவ்வாய் 9இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உருவாகும். 7இல் ராகு இருப்பது குடும்ப அமைதியைப் பாதிக்கலாம். ராசியில் கேது இருப்பதும் நல்லதல்ல. (4,5) உரிய சனி 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 10ஆம் வீடு சுத்தமாக அதாவது தீய கிரகங்கள் இல்லாமல் இருப்பதால் தொழிற்துறை முன்னேறும். குரு 11இல் இருப்பதால் நல்ல பலனை குரு செய்வார்.

விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை

ராசிக்குரிய செவ்வாய்8இல் இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது. ஆனால் குருவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. (2,5) உரிய குரு10 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். ஆனால் இரண்டாம் வீட்டையும் குருவையும் சனி பார்ப்பது நல்லதல்ல. (3,4) உரிய சனி 8இல் இருப்பதால் வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,12) உரிய சுக்கிரன் 8இல் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். 10க்குரிய சூரியன் 7இல் புதனோடு இருப்பதால் தொழிற்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். ராசி நாதனோடு சனி சேர்ந்திருப்பது எதிர்பாராத தீய பலனைச் செய்யக்கூடும். 10இல் குரு இருப்பதால் ஆறுதல் உண்டு.

தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.

(1,4) உரிய குரு 9இல் இருப்பது விசேஷம். மேலும் சுக்கிரனின் சாரம் பெற்று இருப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். (2,3) உரிய சனி 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். சகோதரங்களுக்கும் நல்லது. (7,10) உரிய புதன் 6இல் இருப்பது கூடாது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு. இராசியைத் தீய கிரகங்களான செவ்வாயும், சனியும் நல்ல கிரகங்கள் ஆன சுக்கிரன், குருவும் பார்ப்பதால் ஒன்றை ஒன்று சமப்படுத்தக்கூடும்.

மகரம்: உத்தராடம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2

(1,2) உரிய சனி 6இல் இருப்பது நல்லது. சனி 6ஆம் வீட்டில் நன்மை செய்வான். ஆனால் ராகுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லதல்ல. எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். நோய்களும் கட்டுமீறிப்போகாது. கையில் பணம் இருக்காது. (4,11) உரிய செவ்வாய் 6இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். நண்பர்களால் தொல்லை உண்டு. 7ஆம் வீடு சுத்தமாக இருப்பினும் குரு 8இல் மறைவதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். 10க்குரிய சுக்கிரன் 6இல் இருப்பதால் தொழிற்துறையில் பின்னடைவு வர வாய்ப்புள்ளது. குரு சுகம் இல்லாமல் இருப்பது குறை. ராசியை சுக்கிரன் பார்ப்பது ஆறுதல் உண்டு.

கும்பம்: அவிட்டம்3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.

(1,12) உரிய சனி 5இல் இருப்பதால் நன்மை செய்யாது. மேலும் ராகுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது கூடாது. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,11) உரிய குரு, 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரங்கள் உதவி செய்வர். (4,9) உரிய சுக்கிரன் 5இல் இருப்பதால் பெற்றோர் நலம். வீடு, வாகனம் லாபம் தரும். தெய்வீக தரிசனம் கிடைக்கலாம். 7க்குரிய சூரியன் 4இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய செவ்வாய் 5இல் இருப்பதால் தொழிற்துறையில் பின்னடைவு வராது.

மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.

(1,10) உரிய குரு 6இல் இருப்பது கூடாது. ஆனால் சுக்கிரனின் சாரத்தில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் தரும். எடுத்த முயற்சி தடைப்படலாம். உடல் ஆராக்கியம் பாதிக்கலாம். தொழிற்துறையில் பின்னடைவு வரலாம். (2,9) உரிய செவ்வாய் 4இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. (4,7) உரிய புதன் மூன்றில் இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். வார மத்தியில் புதன் நாலாம் வீட்டுக்குப் போவதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். ராசியையும் ராசி நாதனையும் 10ஆம் வீட்டையும் சனி பார்ப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது.

சீரழியும் ஸ்ரீபாத கல்லூரி
சிதைக்கும் மலையக தலைவர்கள்

கூடாரத்துக்குள் தலையை மட்டும் நுழைத்துக்கொள்கிறேன் என்று கூறிக்கொண்டு கூடாரத்துள் நுழைந்த ஒட்டகம், கடைசியில் அந்தக்கூடாரத்தையே ஆக்கிரமித்துக்கொண்டதோடு அதை அழித்தும் ஒழித்து விட்டதாம்.

இன்று பத்தனை ஸ்ரீபாத கல்லூரியின் நிலைமையும் இப்படித்தான் ஆகிவிட்டது.

ஐக்கிய தேசியக்கட்சி அரசின்போது புதிய கல்விச் சீர்திருத்தத் திட்டத்தின் படி நாடெங்கிலும் 17 கல்வியியல் கல்லூரிகள் அமைக்கப்பட்டன.

ஆசிரியர்களாக நியமனம் பெற்ற பின்பு ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகளுக்குச் சென்று அவர்கள் பயிற்சி பெறும் முறையினால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிப்படைந்தது. இதனால் ஆசிரியர்களாக நியமனம் பெறுவதற்கு முன்னரே அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் முன்னோடியான நோக்கத்துடனேயே இந்தக் கல்வியியல் கல்லூரிகள் ஸ்தாபிக்கப்பட்டன.

இத் திட்டத்தின் கீழ் 17 கல்லூரிகள் நிறுவப்பட்டபோதும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக நிறுவப்பட்டது பத்தனை ஸ்ரீபாதகல்வியியல்கல்லூரி மட்டுமே.

மத்திய மாகாணம், ஊவா மாகாணம் சப்ரகமுவ மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களிலும் உள்ள தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் அனைவரும் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரிக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். இங்கு பயிற்சி பெறுபவர்களுக்கு மட்டுமே ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும்.

ஏனைய 16 கல்வியியல் கல்லூரிகளிலும் மலையக மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

மத்திய மாகாணத்திலும், ஊவா மாகாணத்திலும், சப்ரகமுவ மாகாணத்திலும் சிங்கள மொழி மூல கல்வியியல் கல்லூரிகள் இருக்கத்தான் செய்கின்றன. அங்கே தமிழ் மொழி மூலப்பாட நெறிகளும் இல்லை. தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்படுவதும் இல்லை.

இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழர்கள் செறிந்துவாழும் வெள்ளாந்துறை என்ற இடத்தில் சகல நவீன வசதிகளுடனான கல்வியியல் கல்லூரி அண்மையில் நிறுவப்பட்டது. அங்கேயாவது இப்பிரதேச தமிழ் மாணவர்களுக்கு இடம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், அதுவும் ஏமாற்றத்திலேயே முடிந்தது.

அங்கே தமிழ்மொழி மூல பாடநெறிகளை ஆரம்பிக்கவோ தமிழ் மாணவர்களை அனுமதிக்கவோ கூடாது என பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் அனைவரும் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரே குரலில் எதிர்த்து தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்பை இல்லாமல் செய்துவிட்டனர்.

ஆனால் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரிக்கு ஏற்பட்ட கதி என்ன?

தமிழ் அரசியல்வாதிகளின் போட்டா போட்டியினால் மலையக இளைஞர் யுவதிகளுக்கு மட்டுமே என அமைக்கப்பட்ட இந்த ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியையும் தாரைவார்க்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

இக்கல்லூரி ஆரம்பிக்கப்படும்போதே முன்னாள் அமைச்சரான மலையக மக்கள் முன்னணித்தலைவர் பெ.சந்திரசேகரன் சகல அமைப்புகளையும் ஒன்றுதிரட்டி போராட்டம் ஒன்றை நடத்தினார்.

தோட்டத் தொழிலாளர்களும், நலன் விரும்பிகளும், பொது அமைப்புகளும், புத்திஜீவிகளும் இப்போராட்டத்துக்கு ஆதரவு வழங்கினர்.

ஆனால் இ.தொ.கா.வின் அப்போதைய தலைவரான சௌமிய மூர்த்தி தொண்டமான் இந்தப்போராட்டத்தை மழுங்கடித்து விட்டார். தலைவர் போராட்டத்துக்கு ஆதரவு வழங்காதது ஏன்? அப்படி அவர்கள் முன் வைத்த கோரிக்கைகள் தான் என்ன?

ஸ்ரீபாதகல்வியியல் கல்லூரிக்கு தமிழர் ஒருவரே பீடாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும்.

மலையக தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு மட்டுமே இங்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

இதுதான் அவர்களுடைய கோரிக்கைகள். இதில் என்ன பிழை கண்டார்கள் பெருந்தலைவர்கள். இது அடிப்படை உரிமைப் போராட்டம் தானே?

அங்கே நடந்த பிழை என்னவென்றால், போராட்டத்தை சந்திரசேகரன் முன்நின்று நடத்தினால் பெயரும் புகழும் அவருக்கு அல்லவா போய்விடும். இதைத்தடுக்க வேண்டும். எனக்கு இரண்டு கண்களும் போனாலும் பாதகமில்லை. எதிரிக்கு ஒரு கண்ணாவது போக வேண்டும் என்ற இலட்சிய நோக்குடன் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் 25 சதவீதமான சிங்கள மாணவர்களுக்கும் அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து தனித்தமிழ் கல்லூரி என்ற போராட்டத்தைக் கொச்சைப்படுத்திவிட்டார் பெருந்தலைவர்.

அன்று 25 சதவீதமான சிங்கள மாணவர் அனுமதி சாதாரணமாக இருந்திருக்கலாம். ஆனால் அது தான் பூதாகரமாக வளர்ந்து பாரிய அனர்த்தங்களை ஏற்படுத்தி உள்ளது.

75 வீதமான தமிழ் மாணவர்களை 25 வீதமான சிங்கள மாணவர்கள் ஆட்டிப்படைக்கிறார்கள். சிங்கள பீடாதிபதி, சிங்கள நிர்வாகிகள். கல்லூரி நிதி லட்சக்கணக்கில் கொள்ளை, தட்டிக்கேட்ட மாணவர்கள் பொலிஸாரால் முட்டிக்கு முட்டி தட்டி ஒடுக்கப்பட்டனர். அடித்துத்துன்புறுத்தப்பட்டனர். அப்பாவி மாணவர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அதோடு நின்றுவிடவில்லை. கல்லூரியையும் காலவரையறை இன்றி இழுத்து மூடிவிட்டனர்.

ஊழல் இடம்பெறுகிறது, தடுத்துநிறுத்த வேண்டும் எனப்போராட்டம் நடத்தியபோது, நாங்கள் இருக்கும்போது நீங்கள் எப்படிப்போராட்டம் நடத்த முடியும்? யாரைக்கேட்டு போராட்டம் நடத்தினீர்கள்? அடித்துவிட்டார்களா? விசாரணைக்குக் கேட்போம் என மட்டம் தட்டி விட்டனர்.

இப்பொழுது என்ன நடந்தது? அரசியல் கட்சி, தொழிற்சங்க வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் ஒன்றுபட்டு ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

என்ன கேட்டனாங்கள்? மூடிய கல்லூரியை மீண்டும் திற, மாணவர்கள் மீது தாக்கல் செய்த பொய் வழக்குகளை வாபஸ் வாங்கு என்று தானே கேட்டார்கள்.

இவர்களுக்கு என்ன கிடைத்தது? குண்டாந்தடி அடி, கண்ணீர்ப்புகை, றப்பர் குண்டுத்தாக்குதல். இதனால் இளம்பெண்கள் விரட்டி விரட்டித் தாக்கப்பட்டனர். சில பொலிஸார் துச்சாதனர்களாகவும் மாற முயன்றனர். நல்ல வேளையாக மாணவர்களும் பொது மக்களும் அப்படி ஒரு சம்பவம் இடம்பெறவிடாமல் தடுத்துவிட்டனர். 25 பேருக்கு மேல் காயம் அடைந்தனர். இவர்களுள் எட்டு பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வளவும் நடந்தும் கூட இந்த மலையக அரசியல்வாதிகள் என்ன சொல்கிறார்கள்? நாங்கள் ஜனாதிபதியுடன் பேசினோம், அமைச்சருடன் பேசினோம், விசாரணைக் குழு அமைக்கவிருந்தனர். தமிழ்ப்பீடாதிபதி ஒருவரை நியமிக்க இணக்கம் காணப்பட்டது. அதற்குள் இப்படி நடந்துவிட்டது என்று சப்பைக்கட்டு கட்டுகிறார்கள்.

மலையகத்தில் எது எதற்கெல்லாமோ போராட்டம் நடத்துகின்றனர். ஆனால் அதி முக்கியமான கல்விக்குத் தடை விதிக்கப்படும் போது கண்களை மூடிக்கொண்டிருக்கிறார்கள்.

கல்விக்கண் திறக்கப்பட வேண்டும். மூடிக்கிடக்கும் ஸ்ரீபாத கல்லூரி உடனடியாகத் திறக்கப்பட வேண்டும்.

மாணவர்களுக்கு எதிராகச் சோடிக்கப்பட்ட வழக்குகள் மீளப்பெற வேண்டும்.

தமிழ்ப்பீடாதிபதி நியமிக்கப்பட வேண்டும். தனித்தமிழ் கல்லூரியாக அங்கீகரிக்க வேண்டும்.

ஊழல் பேர்வழிகள் விரட்டி அடிக்கப்பட வேண்டும்.

இப்படியான கோரிக்கைகளை முன்வைத்து மலையகமெங்கும் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் ஒன்றைச் செய்ய இந்த மலையகத் தலைவர்கள் முன்வருவார்களா?

நிச்சயமாக மாட்டவே மாட்டார்கள். தொழிலாளர்களை வைத்து வியாபாரம் நடத்தும் இந்த மலையக தலைவர்களுக்கு அவர்களின் கல்வி அபிவிருத்தியில் சிறிதும் அக்கறை இல்லை. அக்கறை உடையவர்களானால் செயலில் காட்டட்டும். இது ஒரு சவால்.

* * *

டேஸ்ட்கடை
தணிகாசலம்

தணிகாசலம் அண்ணரும் அப்பாவு தலைவரும் மிகவும் சுவாரஸ்யமாக தொலைக்காட்சியில் மின்னல் நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

அப்போது ஏதோ வேலையாக வந்த திலகாவும் அவர்களுடன் சேர்ந்துகொண்டாள்.

"வணக்கம் அண்ணே"

"வணக்கம். வணக்கம். யாரு திலகாவா வாம்மா" என்றார் தணி அண்ணன்.

"என்னங்க அண்ணே ரொம்ப இன்ரஸ்ரடி.வி பார்த்துக்கிட்டு இருக்கிறாப்புல இருக்கு." என்று கூறிக்கொண்டே தானும் அமர்ந்து கொண்டாள் திலகா.

"ஆமாம் ஆமாம் ரொம்ப ரொம்ப இன்ரஸ்ரான சங்கதி தான், நம்ப தலைவர்மாரோட மொகமூடிகளைப்புட்டுப்புட்டு வைக்கிறாங்க." என்றார் அப்பாவுத் தலைவர்.

"அது யாரு குமர குருபரன் ஐயாவா தாடியோட குண்டா இருக்காரே" என்றார் அப்பாவு.

"ஆமாங்க அவரு தான் இப்ப மனோ கணேசனோட சேர்ந்து கொழும்புல போட்டி போடுறாராரு. அது மட்டுமல்ல அவரோட சேர்ந்து நம்ம வேலனைக்காரரும் போட்டி போடுறாராம்." என்று பதில் அளித்தார் தணி அண்ணன்.

"என்னங்க அண்ணே அப்படிச்சொல்லுறீங்க? இவுங்க தானே முந்தி மகேஸ்வரன் ஐயா கொழும்புல போட்டி போட்ட போது யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து கொழும்புல் தமிழர்களின் ஓட்டுக்களை உடைக்க சதி செய்கிறார்கள் என்று பிரதேசவாதத்தையும் கிளப்பிவிட்டதாக ஒரு கதை அடிபட்டதே" என்று சீண்டினாள் திலகா.

"என்ன பிரதேசவாதம் பேசினாலும் மகேஸ்வரன் ஐயா இவர்களை எல்லாம் பின்னுக்கு தள்ளிவிட்டு முன்னாலே வந்துவிட்டாரே!" என்றார் அப்பாவு.

கொஞ்சம் சத்தம் போடாதீங்க. அங்க பாருங்க. ஒருவர் கேள்வி கேட்கிறார். எம்.பியாகத் தான் முடியாமப் போச்சு. எப்படியாவது ஒரு மாகாண சபை உறுப்பினர்பதவியையாவது புடிச்சிக்கலாம் என்று தானே கொழும் பில் போட்டி போடுறீங்கன்னு குருபரன் ஐயாவை மடக்கிப்புட்டார்" என்றார் தணி அண்ணன்.

"அண்ணே அண்ணே அங்க பாருங்க. ஜேழே விழுந்தாலும் மீசையில மண் ஒட்டாங்கிறமாதிரி 'நாங்க எங்க இருந்தாலும் வடக்கு கிழக்கு மலையகம் என்று வேறுபாடின்றி தமிழ்த்தேசிய உணர்வுடன் தான் போட்டி போடுகிறோம் பதவிக்காக அல்ல' என்று குருபரன் ஐயாவும் பதிலடி கொடுக்கிறார்" என்றாள் திலகா.

என்னங்க தலைவரே கதை நம்ப தலைவர் பக்கம் போகுது. ரவிராஜ் ஐயா எதையோ காரசாரமாகச் சொல்லுறாரு, அவரு சொல்லுறதும் நியாயமாகத்தான் இருக்கு. முழுசாக்கேட்போம் என்ன சொல்லுறார் என்று பார்ப்போம்" என்றார் தணி அண்ணன்.

"இது என்னங்க அண்ணே, வடக்கு கிழக்கு மலையகம் என்று பேதம் இல்லாமல் எல்லோரும் சேர்ந்து தமிழர் விடுதலைக்கூட்டணியை உருவாக்கினாங்களாம். அதுல பெரிய தொண்டமான் ஐயாவையும் இணைத் தலைவர்களில் ஒருவராகத் தெரிவு செய்தார்களாம். ஆனால் காலப்போக்கில் அவரு அதை எல்லாம் உதறித் தள்ளிப்புட்டு அரசாங்கத்தோட ஒட்டிக்கொண்டாராம். இது உண்மையாங்க அண்ணே" என்று சந்தேகம் எழுப்பினாள் நிலகா.

"ஆமாம் திலகா. அப்ப நீங்க எல்லாம் பொறக்கக்கூட இல்ல. வழமையாகவே ஒரு கட்சியில போட்டி போடுவாரு, அந்தக்கட்சி தோற்றுவிட்டால் அரசாங்கம் அமைக்கும் கட்சியுடன் ஒட்டிக்கிட்டு மந்திரியாகிவிடுவார். தனித்து நின்று எதையும் சாதிக்கும் துணிச்சல் இல்ல. தனித்துவம் காக்க முடியாது. எந்த ஒரு பெரும்பான்மைக் கட்சியுடனாச்சு ஒட்டிக்கிட்டு மந்திரியாகணும். கடைசியில எல்லாம் மக்களின் நன்மைக்காக அரசுடன் சேர்ந்தோம் என்பார்கள்" என்றார் தணி அண்ணன்.

"என்னங்க தணி அண்ணே. அப்படி சொல்லுறீங்க. அப்படின்னா இவங்களுக்கு என்று ஒரு லட்சியம் உறுதியான கொள்கை இல்லையா? ஆனா அந்த மடம் போனா சந்தை மடம்கிற மாதிரி இல்ல இருக்கு" என்று வியப்புடன் கேட்டார் அப்பாவு தலைவர்.

"ஐயோ, தலைவர் ஐயா இன்னும் நீங்க உலகம் புரியாத ஆளா இருக்கீங்களே! நாங்க எந்தக்கட்சியில இருந்தாலும் பரவா இல்ல. நாங்க வெற்றி பெற ஒரு சின்னம் வேணும். அது யானையாவும் இருக்கலாம். பூனையாவும் இருக்கலாம். சீட்டுக்கிடைத்தவுடன் சந்தர்ப்பம் பார்த்து யானையில் இருந்து பூனைக்குப்பாய்வோம். பூனையில் இருந்து யானைக்கும் தாவுவோம். எங்களுக்கு வேண்டியது அமைச்சர் பதவியும் சொகுசு வாழ்க்கையும் தான். இது தானே அவர்கள் லட்சியம். அதைவிட வேறு உயர்ந்தலட்சியமும் கொள்கையும் வேண்டுமா?" எனக்கிண்டல் அடித்தாள் திலகா.

"திலகா சொல்லுறதும் சரி தான். இப்பக் கூட அம்மாவோட சேர்ந்து மந்திரி பதவி வாங்கப்போறாங்க. தேர்தல் காலத்தில அம்மாவைப்பற்றியும் ஜே.வி.பி காரங்களைப் பற்றியும் எவ்வளவுமட்டமா பிரசாரம் செய்தாங்க. இப்ப ஒரு கோப்பையில ... நாங்க வெட்கம் கெட்ட ஜென்மங்கள்." என தலையில் அடித்துக்கொள்கிறார் அப்பாவுத் தலைவர்.

"இதுக்கு ஏங்க தலைவரே நீங்க தலையில அடிச்சிக்கிறீங்க. இப்பதான் அவுங்க தலையில அடிக்கிற நேரம் வந்திரிச்சே. இப்படி அடிக்கடி கச்சி விட்டு கச்சி மாறும் பச்சோந்திகளுக்கு நல்ல பாடம் படிப்பிக்கலாமே. ஆனையாவது பூனையாவது எதுவானாலும் இவுங்களை அடையாளம் கண்டு வீட்டுக்கு அனுப்பிடலாம். மாகாணசபைத் தேர்தல்ல நல்ல அடி கொடுக்கலாம். இதைவிட்டு நீங்க போய் தலையில அடிக்கலாமா. பொறுமையாக இருங்க" என்று அமைதிப்படுத்தினார் தணிகாசலம் அண்ணன். அதோடு டி.வி நிகழ்ச்சியும் முடிந்தது.



ஒரு லட்சியமே இது இரகசியம்!

சர்வமதத்தவர்களும் சேர்ந்து வழிபடும் மலை உச்சியில் உள்ள பாடசாலையின் அதிபர் ஒரு மன்மதராசனாம். ஆளுக்கு ஆள் ஆசைப்படும் கட்டுடல் கொண்டவராம். ஆனால், சகதர்மினியோ அதற்கு நேர்மாறானவராம். அடக்கத்திலும் நடத்தையிலும் நிறைகுடமாம்.

என்றாலும் இந்த அதிபரோ எந்த ஒரு விழாவுக்கும் சகதர்மினியுடன் செல்வதே இல்லையாம். ஆனால், பாடசாலையில் உள்ள தாய்க்குலங்கள் கலந்து கொள்ளும் எந்த விழாவையும் விட்டு வைப்பதில்லையாம்.

அண்மையில் லிட்டில் இங்கிலண்ட் என அழைக்கப்படும் வசந்த நகரில் இடம் பெற்ற திருமண வைபவத்துக்கு இந்த அதிபர் சென்றிருந்தாராம். அங்கே பாடசாலையில் பணிபுரியும் தாய்க்குலம் ஒன்று குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு அந்த அதிபருடன் உரையாடிக் கொண்டிருந்தாராம். அப்போது அங்கே வந்த ஒரு பெரியவர் "அம்மா வெடிங்குக்கு வந்தீர்களா? இப்படித்தான் குடும்பத்தோடு வர வேண்டும். குழந்தை அப்படியே அப்பாவை உரித்து வைத்த மாதிரி இருக்கு" என்று வாயார வாழ்த்திவிட்டுப் போனாராம்.

பாடசாலையில் அப்படி இப்படி அடிபட்ட கதையை அந்தப் பெரியவர் உறுதிப்படுத்தி விட்டாராம். தாய்க்குலமோ சர்வசாதாரணமாக 'கிழடும் சரியாத்தான் சொல்லிப் போட்டுது. நல்ல வேளை, மனிசன் பக்கத்தில் இல்லை.' என்று கூறி உதட்டைக் கடித்தாராம். இது எப்படி ஐயா சங்கதி?

மலையக சிறுவர் இல்லத்தில் மணிவிழா நிகழ்வு!

மலையக இலக்கிய செயற்பாட்டாளரான அந்தனி ஜீவா, அகவை அறுபது மணிவிழாவின் முதல் நிகழ்வாக பதுளையிலுள்ள மலையக இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் சிறுவர் இல்ல சிறுமிகளுடன் தனது பிறந்த நாளை பகல் விருந்துடன் கொண்டாடி மகிழ்ந்தார்.

பகல் விருந்திற்கு பின்னர் அந்த சிறுவர் இல்லத்தின் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. இலங்கையின் முதலாவது சிறுவர் நாவலான அமரர் க.நவசோதியின் ''ஓடிப் போனவன்'' சிறுவர் நாவல் உட்பட பல நூல்களை அந்தனிஜீவா அன்பளிப்பாக வழங்கினார். சிறுவர் இல்லத்தின் சிறுவர்களின் ஆக்கத்திறமையை ஊக்குவிப்பதற்காக ஓவிய உபகரணங்கள் அடங்கிய பெட்டி ஒன்றினை அன்பளிப்பாக வழங்கினார்.

பிரபல கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் தந்தையார் வழங்கிய லக்கிலேண்ட் பிஸ்கட் பெட்டி ஒன்றினையும் அந்த இல்லத்தின் சிறார்களுக்கு வழங்கினார்.

மணிவிழாவின் முதல் நிகழ்வை சிறுவர் இல்லத்தின் சிறார்களுடன் கொண்டாடி மகிழ்ந்தது தனக்கு மிகவும் மன நிறைவை தந்தது என அந்தனி ஜீவா மகிழ்ச்சியுடன் ''கடர்ஒளி'' கலை அமுதத்திற்குத் தெரிவித்தார்.

கலை நிகழ்வில் இடம் பெற்ற சிறுவர் இல்ல சிறுமியர்களின் அபிநயப் பாடல் நிகழ்வு.

பதுளை ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் சிறுவர் இல்லத்து சிறுமி புஷ்ப கலாவிடம் மணிவிழா நாயகன் ஓவிய உபகரண பெட்டியை வழங்குகிறார்.

அண்மையில் உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.பீ.கே.ஏக்கரட்ன முன்னிலையில் வானொலி மேடை நாடக கலைஞர் கே.சந்திரசேகரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். ''கலாபூஷனம்'' ஆர். சிதம்பரம், சந்திரசேகரனுக்கு மாலையணிவித்து கௌரவிப்பதையும் அருகில் ''கலைமணி'' ஆர். மணிமேகலையையும் படங்களில் காணலாம். (படம்: எஸ்.சந்திரமோகன்)

திருகோணமலையில் விடுதலை வெளியீட்டு விழா

மனித மனங்களின் விடுவிப்பாகவே அன்ரன் பாலசிங்கத்தின் 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு அமைந்து காணப்படுகிறது.

திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற அறிமுக விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

''ஆழ்கடலில் அலை அடிப்பதில்லை. அவ்வாறு எவ்வித சலனமும் இல்லாதவர் பாலா அண்ணன். இலகுபடுத்திய இலக்கியம், போராட்டம் பேச்சுவார்த்தை, அனுபவம், இவற்றின் தொகுப்பு விடுதலை. தத்துவம் செறிந்தது நம்மை நாம் புரிய வேண்டும். அடிபணிதல் தவிர்க்கப்பட வேண்டும் என்றார்.''

மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எழிலன் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். ஆ. யதீந்திரா கட்டுரைத் தொகுப்பை அறிமுகம் செய்தார். தேசியஎழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் (சஞ்சை) வெளியீடு செய்து வைக்க நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம் ஆகியோர் முதல் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். சட்டத்தரணி கா.சிவபாலன், அதிபர் சி.தண்டாயுதபாணி, இ.தர்மராஜா ஆகியோர் மதிப்பீட்டுரைகள் நிகழ்த்தினர்.

பிரம்ம ஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள் முதல் முதல் சிறப்புப்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

பெருந்திரளான வாசகர்கள், பார்வையாளர்கள் மத்தியில் 'விடுதலை' நூல் விநியோகிக்கப்பட்டது.

'வெளிச்சம்' ஏட்டில் கட்டுரைகளாகவும், தொடர் கட்டுரைகளாகவும் எழுதப்பட்டவற்றில்முக்கியமானவை செம்மைப்படுத்தப்பட்டு விடுதலையில் வாசகரைச் சென்றடைந்தது.

எஸ்.எஸ். ஆர்

WWW.WTRUK.COM

தாய் மண்ணே வணக்கம்..... தமிழ் மண்ணே வணக்கம்.....

தாயகத்தில் இருந்து தரணி எங்கும் ஒலிக்கும் ஒரே வானொலி....

உலகத்தமிழர் வானொலி

World Tamilar Radio

www.wtruk.com

24 Hours Online Radio

இணையத்தளத்தினூடாக

இலங்கைச் செய்திகளை
உடனுக்குடன் வழங்கும்
உங்கள் வானொலி

??? Sneha Talk
Listen WTR

நடிகை,நடிகர்களின்
Live Talk

WWW.WTRUK.COM

சுடரின் கல்வி வழிகாட்டி

After A/L

100% Guaranteed Success Positions with us

உறுதிப்படுத்தப்பட்ட எதிர்காலத்தை நோக்கி நீங்கள் பயணம் செய்ய விரும்புகிறீர்களா?

க.பொ.த (உ/த) பரீட்சை முடிவடைந்து விட்டது. இனி எந்த திசையை நோக்கி நீங்கள் நகரப் போகின்றீர்கள். ஏதோ ஒரு கற்கை நெறியினை பயில்வதா? அல்லது உறுதிப்படுத்தப்பட்ட எதிர்காலத்தினை உறுதியான சர்வதேச தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேசரீதியிலான அடித்தளம் ஒன்றினை நோக்கி உங்கள் பயணத்தினை தொடர்வதா?

* **Winsys networks** ஆங்கிலக் கல்வியுடன் கூடிய எதிர் காலத்தினை உறுதியான பாதையை உங்களுக்கு வழங்குகின்றது.

* **Winsys networks** பாட நெறிகள் ஊடாக உங்களது எதிர்காலத்தினை உறுதிப்படுத்துவதோடு உங்களையும் சிறந்த ஆளுமை விருத்தி மற்றும் ஆற்றல்கள் கொண்ட ஒருவராக மாற்றியமைப்பதிலும் நாம் உற்றுக் கவனிக்கின்றோம். இவைகள் தான் உங்களது வெற்றிகரமான தொழில்/வெளிநாட்டு உயர்கல்விக்கு உறுதுனையாக இருக்கும்.

DIPLOMA IN COMPUTER HARDWARE & ADVANCED NETWORKING

Hardware & Networking
Introduction to Computers, Computer Peripherals, Boot-up Process, Disk Drives
Computer Assembling, Upgrading, Trouble shooting, Printer, Modem Installation & Configuration
Introduction to Networking, Network Peripherals, Cabling, Crimping, Network card,
Network Printer Installation and Configuration ,Implementing, Introduction to LAN and WAN.

Server Configuration :
Windows 2000 Server and Professional installation, Configuration. User, group creation.
Windows 2000 Security, DHCP , DNS, WINS, WEB ,Remote Access configuration
Windows 2000 Router Configuration

Cisco Routers & Linux OS
Introduction to Cisco Routers, Boot-up process, Basic Router Configuration,

3500/- மாத்திரம்

உங்களின் எதிர்கால வெற்றிப் பாதையை
100மு உத்தரவாதத்துடன் நாங்கள் உறுதி செய்கிறோம்

2504023
2552819

- ஆங்கிலம், ஆளுமையுடன்கூடிய பயிற்சி நெறிகள்.
- 100% Practical செயற்பாட்டு ரீதியிலான முழு நேர, பகுதி நேர வகுப்புகள்.
- அனுபவம் வாய்ந்த உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சியாளர்கள்.
- பயிற்சி முடிவில் சர்வதேச ரீதியில் தரப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள், MicroSoft, Cisco, Linux நிறுவனங்களின் சான்றிதழ்கள்.
- கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் உயர்கல்வி, தொழில்வாய்ப்புகள்.

Approved by :
Ministry of Tertiary & Vocational Educational Training, Ministry of Industrial, Training and Development.
Exclusive Partnership with "Mile2 Mk inc" USA, Canada, UK, Australia, Asia Pacific & Malaysia.

After A/L
↓
Hardware & Networking
↓ ↓ ↓
Cisco **Microsoft** **Linux**
↓
உள்நாட்டு, வெளிநாட்டு
தொழில் வாய்ப்பு, உயர் கல்வி

சூரகிய காலத்தில் நீங்களும் ஒரு
Computer Network Engineer/
Computer Network System Engineer ஆ
உங்கள் பயணத்தைத் தொடர
நாங்கள் உறுதி செய்கிறோம்.

Cisco

CCNA 640-801	Rs.15000/-
CCNP NEW Routing/ Switching/ Remote access/ Trouble shooting	per module Rs.20000/-
CCIE theory	Rs.35000/-

Linux

Linux System and Network Administration
Leading to: Red Head Certified Engineering (RHCE), Linux + Exams
15,000/- Only

Microsoft 2003

MCP	MCSA	MCSE
Rs. 12000/-	Rs. 25000/-	Rs. 40000/-

WinSYS Networks (Pvt) Ltd

HI-TECH TRAINING & CONSULTING

No. 31, 42nd Lane, Wellawatta. TP: 011-2504023/ 2552819
www.winsysnetworks.com Mail: info@winsysnetworks.com

சுடரின் கல்வி வழிகாட்டி

வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்பை வழங்குவதில் Hightech International Computer College முன்னணியில்

தரமான கணினிக்கல்வி வழங்குவதில் தனக்கென தனி இடத்தைப் பெற்று விளங்கும் வெள்ளவத்தையில் அமைந்துள்ள Hightech International Computer College computer and Information Technology Council of Srilanka(cintec) மற்றும் federation of the Information Technology Industry Srilanka (fitis) ஆகியவற்றின் வழித்தோன்றலாக அமைந்த Association of computer Training Organisation Srilanka (actos) இனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கணினிக்கல்வி கல்லூரியாகும் Actos இனால் அங்கீகரிக்கப்பட்ட கணினிக் கல்வி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் அங்கீகரிக்கப்பட்டவையாகவும் தொழில் பெறும் தறுவாயில் பெரிதும் உதவுவனவாகவும் வெளிநாடு செல்பவர்களின் Embassyயின் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் சமயத்தில் கைகொடுப்பனவாகவும் விளங்குகின்றன.

கடந்த மூன்று வருடங்களாக திறம்படச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் Hightech international computer college இல் கல்வி கற்ற 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தொழில்வாய்ப்புக்கள் மற்றும் வெளிநாடு செல்வதற்கான visa என்பனவற்றை இலகுவாகப் பெற்று பயனடைந்துள்ளனர்.

இந்தத் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனிப்பட்ட கவனமுறையில் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன. கட்டணங்கள் யாவும் தவணை அடிப்படையில் செலுத்தும் அதேவேளை, வரையறையற்ற செய்முறை பயிற்சி நெறிகள் ஒவ்வொரு மாணவர்களுக்கும்வழங்கப்படுகின்றன.

2 அல்லது 3 மாதகால அளவான பாடநெறிகளான Web Design, Graphic Design Programming Language போன்ற பாடநெறிகள் மற்றும் Spoken English, U.K. Diploma Courses போன்ற கற்கை நெறிகளும் நடத்தப்பட்டு இவற்றுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு அங்கீரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

ஐக்கிய அமெரிக்க Tinty University மற்றும் இங்கிலாந்து ST.Clements University ஆகிய சர்வதேச பல்கலைக்கழகங்களின் Degree பாடநெறிகளாக Bachelor Of Information Technology, Bachelor Of Science In Computer Science, Bachelor Of Business Administration ஆகிய கற்கை நெறிகள் hightech இல் நடத்தப்படுகின்றன. இந்தபட்ட கற்கை நெறிகள் இருவருடங்களைக் கொண்டதாகவும் ஒப்பீட்டளவில் ஏனைய வெளிநாட்டு பட்டப்படிப்பு பாடநெறிகளின் பாடக் கட்டணத்துடன் ஒப்பிடுகையில் இவை மிகக்குறைந்த கட்டணங்களைக் கொண்டதாகவும் உள்ளன. பாடக் கட்டணங்களை மாதாந்தத் தவணை அடிப்படையில் செலுத்த முடிவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப்பட்டப்படிப்புகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு மேல் படிப்பை (2nd Degree) U.K, U.S.A, கனடா ஆகிய நாடுகளில் உள்ள பிரதான பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கான ஒழுங்குகளும் செய்து தரப்படுகின்றன.

மேலும் மாணவர்கள் தமது கல்வித் த்குதிகளுக்கேற்ப Semester I or II or III வரை பரீட்சையில் விலக்குகள் (Exemptions) பெறலாம். ஏற்கனவே கற்ற பாடநெறிகளை மீண்டும் கற்க வேண்டிய நிலைக்குள்ளாகாது எஞ்சிய பாடங்களை மாத்திரமே கற்று Degree பாடநெறியை மிகக்குறுகிய காலத்தில் நிறைவுசெய்து U.K, U.S.A பட்டதாரியாகும் வாய்ப்புக்கிட்டுகிறது. மேலும் Distance Learning Programme முலம் வெளிமாவட்ட மாணர்கள் மற்றும் தொழில் பளுவில் உள்ளவர்கள் விரிவுரைகளுக்கு சமுகமளிக்காது சுய கற்றல் முறை மூலம் இப்பாடநெறியை கற்கலாம். இதன் மூலம் குறைந்த கட்டணத்தில் பட்டதாரியாகும் சந்தர்ப்பம் கிட்டுகிறது.

இந்த Degree மாணவர்களுக்கு AACP (UK), MACP (UK), AJAB,(UK) போன்ற இங்கிலாந்து சர்வதேச தராதர சான்றிதழ்கள் மற்றும் அங்கத்துவம் என்பன பெற்றுத் தரப்படுகின்றன.

விரிவுரைகள் யாவும் தகுதி வாய்ந்த விரிவுரையாளர்களினால் மேற்கொள்ளப்படுவதுடன் தமிழிலும் விளக்கங்கள் தனிப்பட்டமுறையில் வழங்கப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு 5557725 OR 0777 – 667626 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலமாகவோ Web: WWW.hightechicc.com.என்ற இணையத்தள முகவரி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

Hightech ஆனது University of East London (UEL) உடன் இணைந்து Student Visa. களையும் பெற்றுத் தருகிறது. UEL ஆனது London இல் அமைந்துள்ள மிகப் பிரமாண்ட மற்றும் பிரபல்யமான பல்கலைக் கழகமாகும். இங்கு B.Sc மற்றும் M.Sc இற்கான சகல பாடநெறிகளும் நடத்தப்படுகின்றன. தற்பொழுது சுமார் 16,500 உள் நாட்டு, வெளிநாட்டு மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றனர். மாணவர்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு அவர்களிற்கு பகுதிநேர வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டு வரும் UEL ஆனது இலண்டன் நகரின் மத்தியில் 3 பல்கலைக் கழங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. UEL Degree சான்றிதழ்கள் சர்வதேச அங்கீகாரம் பெற்றவையாகும்.

UEL இன் கல்வியியல் ஆலோசகர் சுகந்தன் தற்பொழுது இலங்கையில் Hightech இல் இலங்கை மாணவர்களுக்காக நேரடியா UEL Admission மற்றும் Visa ஒழுங்குகளை ஏற்பாடு செய்து தருகிறார். சுகந்தன் கடந்த 5 வருடங்களாக UEL இல் கல்வியியல் ஆலோசகராக கடமையாற்றி வருகின்றார். MSC இன் IT கற்கை நெறியை UEL இல் கற்ற இவர் சுமார் 10 வருடங்களாக உயர் கல்வித்துறையில் அனுபவம் பெற்று விளங்குகிறார். இவரை அணுகி மாணவர்கள் பொருத்தமான பாடநெறிகளை தெரிவு செய்து கொள்ளல், மற்றும் இலண்டனில் தொழில் வாய்ப்பு, ஏனைய கற்கை நெறிகள் போன்றவற்றிற்கான மிகச்சிறந்த ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

University of East London ஐச் சேர்த்து டாக்டர் டேவிட் பிறீஸ்டன் ஜூன் மாத நடுப் பகுதியில் இலங்கை வரவுள்ளார். இவருக்கும் UEL இல் நேரடியாக அனுமதி பெற்றுக் கொடுக்கும் அங்கீகாரம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுகந்தனையும், டாக்டர் டேவிட் பிறீஸ்டனையும் No: 296, 7th Floor, Gall Road, Colombo - 06. என்ற முகவரியில் அமைந்துள்ள Hightech International Computer College இல் சந்திக்கலாம். அல்லது 0771 – 209446 என்ற கையடக்கத் தொலைபேசி எண் மூலம் சுகந்தனை தொடர்பு கொள்ளலாம்.

இலண்டன் சென்றவுடன் மாணவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதத்தில் பகுதிநேர வேலை, தங்குமிட உணவு வசதிகள், Visau களை மேலும் 1 முதல் 2 வருடங்களுக்கு நீடித்தல், ஏனைய உயர் கல்விக்கான அனுமதிகள் போன்றவற்றிற்கு மேலதிக கட்டணங்கள் எதுவுமின்றி இவர்களால் ஒழுங்குகள் செய்து தரப்படுவது குறிப்பிடத்தக்கது.

Study in London

University of East London

UEL University of East London www.uel.ac.uk

Instant Admissions will be offered for eligible students

- MBA • MSc in Information Technology
- MSc in Internet Engineering
- MSc Computer Systems
- BSc in Ecommerce
- BSc in Information Technology
- MSc Forensic Computing and many other degrees - Accounting & Finance, Economics, Business Studies, Arts, Fashion & Design.
- Accounting & Finance
- Architecture
- Art & Design
- Biosciences
- Business & Management
- Computing
- Economics
- Education & Community Studies
- Engineering
- Health Sciences
- Humanities
- Information & Technology Studies
- Languages
- Law & Criminology
- Media & Communications
- Psychology
- Social Sciences
- Sports Sciences
- Surveying & Geographical Information Sciences

Dr. David Preston - Reader, University of East London

Will be interviewing students and instant admissions will be given

Interviews by appointments only.

Please contact P.K. Suhanthan - Authorised Education Advisor, University of East London - 0777-209446.

Expert Advice and guidance will be given to obtain the Visa University Accommodation Available

Flex Graphic

September 2004 Intake - Interviews on June 15 & 16 -2004

Hightech International Computer College - 296, 7th Floor Galle Road, Wellawatte. Tel: 011-5557725, E-mail: pksuhanthan@yahoo.co.uk

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

வன்னி மானியமும் அதன் தொன்மை வரலாறும்

இன்றைய புலிகளின் ஆட்சிபீடமாகத் திகழும் வன்னி நாடு கி.மு. 13 ஆம் நூற்றாண்டில் தொண்டை மண்டலத்திலிருந்து குடியேறிய வன்னித் தலைவர்களினதும், மக்களினதும் வருகையை முக்கிய ஆதாரமாகக் கொண்டுள்ளது.

இவர்களினது வருகைக்கு முன்னர் வன்னிப்பகுதியில் முக்கிய குடியேற்றமையங்களாக தனிக்கல், கணுக்கேணி, முள்ளிமாநகர், கிழக்குமூலை, மேற்கு மூலை ஆகியவையே விளங்கின என்பதை வையா பாடல் சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது.

வன்னியர் காலத்தில் மாங்குளம், கொங்கான்புளியங்குளம், செட்டிகுளம், துணுக்காய், பனங்காமம் ஆகியன முக்கிய இடங்களாக குறிப்பிடப்படுகின்றன.

போர்த்துகேயர் கால, டச்சுக்கால ஆவணங்களையும் எடுத்துக்கொள்ளுவோமானால் பனங்காமம், கரிக்கட்டு மூலை, கருநாவல்பற்று, மேல்பற்று, முள்ளியவளை, தென்னமரவடி, செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் நிலைத்திருந்த வன்னிச்சிற்றரசுகள் பற்றி அவை கூறுவதை அறிந்து கொள்ளலாம். யாழ்ப்பாண அரசர்கள் இடையிடையே படை உதவியுடன் தமது நேரடி ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றாலும் கூட பெருமளவுக்கு சுதந்திரமாகவே வன்னிச் சிற்றரசுகள் காணப்பட்டன.

வன்னியர்களின் சுதந்திர வேட்கை

வன்னியர்களின் சுதந்திர வேட்கையை பிரதிபலிப்பதாகவே ''அடங்காப்பற்று'' என்று பெயர் வந்தது. எனினும் வருடமொரு முறை யாழ்நகர் செல்வதும் திறை கொடுப்பதும் வழக்கமாய் இருந்தது.

யாழ்ப்பாண அரசர் குறிப்பாக முள்ளிய வளைப்பகுதியில் கோட்டை அமைத்து இருந்த செய்தியும் வையா பாடலில் உள்ளது.

யாழ்ப்பாணத்து அரசர்கள் யாழ்ப்பாணத்திலேயே தமது பிரதான தலைமைப் பீடத்தை வைத்திருந்த போதும், இவர்களது தலைமையகத்திற்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடும் எனக்கருதி அதனைத் தடுக்கவே பாதுகாப்பான முள்ளிய வளைப்பகுதியை தேர்ந்தெடுத்தனர்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வாவெட்டி, முள்ளியவளை ஆகிய பகுதிகளில் யாழ்ப்பாண அரசர் நிலை கொண்டிருந்ததை வையா பாடல் 96 – 99 எடுத்துரைக்கின்றது.

வன்னி நிலம் ஒருபோதும் அடங்கி கிடக்கவில்லை என்பதையே ''அடங்காப்பற்று'' குறித்து நிற்கின்றது. யாழ்பாணத்து அரசு வீழ்ந்து படும் போதும் யாழ்ப்பாண அரசின் ஆட்சிமைக்காக பெருநிலத்திற்கே (வன்னி) நகர்ந்தது.

பகை சூழ்ந்த வேளையெல்லாம் தமிழரசின் உயிர்ச்சூட்டை பெருநிலமே ஒளித்து வைத்திருந்தது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், இந்தியர் என படையெடுத்துவந்த எல்லாப் பகைவருக்கும் வன்னிப்பெருநிலம் ஒரு பொல்லாத கணவாயாகத்தான் முடிந்திருக்கிறது.

வன்னியர் குடியேறியதாக சொல்லப்பட்ட போதும் ஐதீகத்தின் படி வன்னியரின் தோற்றம் அகஸ்தியர், புலத்தியர் எனும் முனிவர்களின் யாகத்திலிருந்து தோற்றம் பெற்றதாக கூறப்படுகின்றது.

பக்தர்களின் பாதயாத்திரை

அத்தோடு வன்னி மாநிலத்திலிருந்து ஆதிகாலத்திலேயே வண்ணாத்துபூச்சிகளின் உதவியுடன் கதிர்காமக் கடவுளை தரிசிக்கவென வற்றாப்பளை அம்மன் கோயில் பொங்கல் முடிந்தவுடன் பக்தர்கள் பாதயாத்திரைக்காகப் புறப்பட்டனர் என்பது வரலாறு.

தற்போதும் யாழ்ப்பாணம் செம்மணி சந்நிதி ஆலயம், வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம் ஆகியவற்றில் இருந்தகரையாற்று பாதயாத்திரை தற்போதும் நடைபெறுகிறது.

வன்னி பிரதேசத்து எல்லைகள் குறித்து ஜே.பி.லூயிஸ் எழுதியுள்ள குறிப்புகளில் யாழ்ப்பாணம், அனுராதபுரம் ஆகிய இடங்களிலிருந்து அடங்காத பகுதியானபடியால் ''அடங்காப்பற்று'' என அழைக்கப்பட்டது .

அத்துடன் , வன்னி மாவட்டமானது முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்கள், கிளிநொச்சி மாவட்டத்தின் பகுதியான ஆனையிறவுக்கு தெற்கேயுள்ள பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய வன்னிப் பெருநிலப்பிரதேசமாகும்.

வீரவன்னியர் எனும் பகுதியினர் பதினோராம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலிருந்து வந்து வன்னியில் குடியேறினர் என ஜே.பி.லூயிசும், இராஜ இராஜசோழன் (கி.பி. 985 –கி.பி. 1015) ஆண்ட காலத்திலேயே குடியேறினர் என பொன்.பூபாலசிங்கமும் குறிப்பிட்டுள்ளனர்.

மாகோன் வரலாறு எனும் நூலில் 12 ஆம் நூற்றாண்டில் மாகோன் படையெடுப்பு நடந்தாகவும், அதற்கு முன்னே வன்னியர்களின் ஆட்சி ஈழத்தில் செல்வாக்கும் முக்கியத்துவமும் பெற்றிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் வன்னிப் பிரதேசத்தின் அமைப்பு

போர்த்துக்கேயருக்குப்பின் ஒல்லாந்தர் காலத்தில் யாழ்குடாவிற்கு தென்திசையாக அமைந்த வன்னிப்பிரதேசம் மேற்கில் தெதுறு ஓயா முதலாக கிழக்கில் கும்புக்கன் ஓயா வரையான பரந்த பிரதேசத்தை உள்ளடக்கியிருந்தது என டெனிஸ்.என்.பெர்னாண்டோ ஒல்லாந்தரின் புவியியற் படத்தை ஆதாரமாக கொண்டு காட்டுகிறார்.

4.9.1986 ஆம் ஆண்டு டெயிலி நியுஸ் இதழில் அவர் எழுதிய ''இலங்கையின் பழைய புவியியற் தோற்றம்'' எனும் கட்டுரையில் இது பற்றி எழுதியுள்ளார்.

பெரும்பாலான வன்னிப்பகுதி கண்டி அரசனின் நிர்வாகத்திலும், வடக்கு வன்னி அல்லது டச்சுவன்னி நிர்வாக எல்லையாக இருந்தது எனவும் இவர் கூறியுள்ளார்.

ஆனால், எஸ்மே.ரன்சின் எனும் ஒல்லாந்தர் யாழ்குடா நாட்டு அரசின் நிர்வாகத்திற்கு உட்பட்ட கரைப்பகுதிகளாக மேற்கே கற்பிட்டி முதல் மன்னார் வரையும், பின்பு மன்னார் முதல் திருகோணமலை வரையிலான கரைப்பகுதிகளும் அமைந்திருந்தன வென்றும், வன்னி அரசின் மத்திய பாகங்கள் டச்சுக்காரரின் ஆதிக்கத்திற்குள் இருக்கவில்லை என்றும் ஒப்சேவர் பத்திரிகைக்கு எழுதிய ''மறக்கப்பட்ட துறைமுகங்கள்'' எனும் 15.6.1986 கட்டுரையில் தெளிவாக கூறியுள்ளார்.

ஆனால், ஒல்லாந்தக் கொமாண்டரின் 1657 ஆம் ஆண்டுக் குறிப்பின்படி நான்கு பிரதான பிரதேசங்களையும் பதின்மூன்று... தீவுகளையும் கொண்ட யாழ்ப்பாணப் பட்டின இராச்சியத்தில் வன்னி என்று அழைக்கப்படும் பிரதேசங்களும் அடங்கும் என எல்.சாந்திக்குமார் 20.10.1958 இல் எழுதிய ''தமிழரின் பாரம்பரிய பிரதேச வரலாற்று ஆய்வுகள் மீண்டும் தொடர வேண்டும்'' எனும் ஆய்வுக்கட்டுரையில் எழுதியுள்ளார்.

எனவே ஏற்கனவே சங்கிலி மன்னன் காலத்தில் வன்னிச் சிற்றரசர்கள் யாழ் அரசின் மேலாதிக்கத்திற்குள் இருந்தார்கள் என எண்ண வேண்டும்.

வன்னியின் ஏழு பெரும் பகுதிகள்

''வன்னி அன்ட் வன்னியர்ஸ்'' எனும் நூலை எழுதிய சி.நவரத்தினம் அவர்கள் அடங்காப்பற்று பிரதேசம் அன்று ஏழு வன்னியர்களின் ஆட்சிப்பிரதேசங்களாக பிரிக்கப்பட்டிருந்தன எனக்குறிப்பிட்டுள்ளார்

அவையாவன 1)பனங்காமம், 2)முள்ளியவளை, 3)கருநாவல்பற்று, 4)தென்னைமரவடி, 5) மேற்பற்று, 6) கரிக்காட்டு மூலை, 7) செட்டிக்குளப்பற்று என்பனவாகும். இந்த ஏழு வன்னிமைப்பற்றுகளில் பனங்காமப்பற்று அடங்காப்பற்றின் அரைவாசி நிலத்தைக் கொண்டதாகும்.

வன்னி நாட்டின் ஆதிவழிபாடான அம்சங்களுள் தாய் தெய்வ வழிபாடும் நாக வழிபாடும், பாலியம்மன் வழிபாடும் ஒன்றித்து இருப்பதாக சான்றுகள் உள்ளன.

இவர்களின் நாக வழிபாட்டை உறுதிப்படுத்துவதுபோல 24.5.2004 சுடர் ஒளி நாளிதழில் கற்சிலை மடுப்பகுதியில் மிகவும் பழமைவாய்ந்த நாகம்மாள் ஆலயம் பற்றி செய்தி பிரசுரமாகியுள்ளது.

இவ்வாலயத்துக்கு நாக பாம்பு ஒன்று வழமையாக வருவதாகவும் அது திடீரென்று ஒருநாள் இறந்து விட்டதாகவும், அவ்வூர் மக்கள் நாகபாம்பு இறந்தமைக்கு கவலை கொண்டு இறந்த நாகபாம்பை ஆலய முன்றலில் சடங்கு முறைகளுடன் அடக்கம் செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டார வன்னியனின் ஆங்கிலேயருக்கு எதிரான யுத்தம்

இலங்கை ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட வேளையிலே பனங்காமத்தை சேர்ந்த பண்டார வன்னியன் ஆட்சி புரிந்தான்.

இவனது முழுப்பெயர் குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன். அந்நியர் ஆட்சியையும் அடக்குமுறையையும் எதிர்த்து நின்ற பண்டார வன்னியன் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் தனது ஆட்சிப்பொறுப்பை ஏற்றான்.

ஆங்கிலேயர் முதன்முறையாக கண்டியைக் கைப்பற்ற முனைந்தபோது பண்டார வன்னியன் தனது படைகளை அனுப்பி உதவினான் என வரலாறுகள் சான்று பகர்கின்றன.

ஆங்கிலேயர் கரிக்காமம் மூலையில் வன்னியனான காக்கை வன்னியனை துணையாக கொண்டு முல்லைத்தீவு பிரதேசத்தில் ஒரு கோட்டையை கட்டினர். இக்கோட்டையை கைப்பற்றியபோது பண்டாரவன்னியனுக்கு உதவி புரிந்ததற்காகவும் ஆங்கில அரசுக்கு துரோகம் செய்ததற்காகவும் குமரசேகரம் முதலியாரை ஆங்கிலேயர் தூக்கிட்டு கொன்றதாகவும் கூறப்படுகிறது.

இக்கோட்டையை 1803 ஆகஸ்ட்மாதம் 25 ஆம் திகதி ஆங்கிலேயர் கைப்பற்றினர். இவ்விடம் தற்போதும் ''தூக்குமரத்தடி'' என அழைக்கப்படுகிறது.

1803 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு பண்டார வன்னியன் நித்திரையில் இருந்த வேளையில் தோற்கடிக்கப்பட்டான்.

இவ்வேளையில் கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜ சிங்கனின் கண்டி முத்திரையோடு கொடுக்கப்பட்ட பீரங்கி ஒன்றை கைப்பற்றியமை மூலம் இரு மன்னர்களும் ஒருவருக்கு ஒருவர் உதவி இருப்பது தெரிகிறது. பண்டார வன்னியன் தோற்கடிக்கப்பட்டதை நினைவு கூருமுகமாக ''பண்டார வன்னியன் தோற்கடிக்கப்பட்ட இடம் ''31 ஒக்டோபர் 1803 ஆம் ஆண்டு'' என்று பொறிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகால குடியேற்றங்கள்

வன்னிப்பகுதியில் கி.மு.3 ஆம் நூற்றாண்டிலே குடியேற்றங்கள் நடைபெற்றன என்பதை கண்டு எடுக்கப்பட்ட பிரமி எழுத்து சாசனம் இரண்டில் ''தமிழ் வணிகன் விசாகன்'' எனப்பொறிக்கப்பட்டுள்ளதில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இச்சாசனம் பெரிய புளியங்குளம் (புளியங்குளம்) வெடுக்கு நாறிமலை போன்ற இடங்களில் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையில் இருக்கும் மணற்கேணி என்ற இடத்தில் ''பதினெண் பூமி வீரக்கொடியர் எனும் சாசனம் உள்ளது.

இதேபோல் கங்குவேலி சிவன் கோயிலில் உள்ள கல்வெட்டும் சிலாப பகுதியை ஆதிக்கம் செலுத்திய நவரத்தின வன்னியனின் குறிப்பு செப்பேடும் ஆய்வுகள் மூலம் சான்று பகர்கின்றன.

கற்சிலை மடுவில் பண்டார வன்னியன் தாக்கப்பட்டான். அவன் தாக்கப்பட்டபோது வன்னி நாச்சியார், சிவன் ஆலயத்தில் வழிபட்டுக்கொண்டிருந்தபோது துர்க்குறிகள் தோன்றின.

நிராசையாலும், கோபத்தாலும் அவளது இதயம் நொறுங்கிப் போயிற்று. அவள் பெருந்தீயை மூட்டி ஆபத்தில் தனது சகோதரனுக்கு உதவாத அறுபத்தி நான்கு கிராமங்களின் பெயர்களையும் ஓலையில் எழுதி தீயில் போட்டு சபித்தாள்.

அத்தீயிலேயே தன்னையும் மாய்த்துக் கொண்டாள். இதனால் இவள் வழிபட்ட சிவனாலயம் அதன் தலச்சிறப்பை இழந்துவிட்டது.

அவள் சபித்த அறுபத்திநான்கு கிராமத்தவர்களுக்கும் குலைப்பன் காய்ச்சல் வந்ததாக கர்ண பரம்பரை கதையொன்று உண்டு. வன்னிக்காட்டில் நெடுந்தூரம் செல்லும்போது தூர்ந்து கைவிடப்பட்ட பெரிய குளங்களை காணலாம். இங்கு வாழ்ந்த வன்னியர் எங்கோ சென்று விட்டதாகவும் கூறப்படுகிறது. இவை வன்னி நாச்சியாரால் சபிக்கப்பட்ட பிரதேசமாகும். வன்னிப் பெருநிலத்தை தற்போதும் உலுப்புகின்ற மலேரியாக்காய்ச்சலே குலைப்பன் எனத் தமிழில் வழங்கப்படுகிறது.

பேராசிரியர் பொன்.சக்திவேல்

> முல்லைத்தீவு மாவட்டத்தில் எல்லையில் இருக்கும் மணற்கேணி என்ற இடத்தில் ''பதினெண் பூமி வீரக்கொடியர் எனும் சாசனம் உள்ளது.
>
> இதேபோல கங்குவேலி சிவன் கோயிலில் உள்ள 3 2/2 கல்வெட்டும் சிலாப பகுதியை ஆதிக்கம் செலுத்திய நவரத்தின வன்னியனின் குறிப்பு செப்பேடும் ஆய்வுகள் மூலம் சான்று பகர்கின்றன.

> ஆங்கிலேயர் முதன்முறையாக கண்டியை கைப்பற்ற முனைந்தபோது பண்டார வன்னியன் தனது படைகளை அனுப்பி உதவினான் என வரலாறுகள் சான்று பகர்கின்றன.
>
> ஆங்கிலேயர் கரிக்காமம் மூலையில் வன்னியனான காக்கை வன்னியனை துணையாக கொண்டு முல்லைத்தீவு பிரதேசத்தில் ஒரு கோட்டையை கட்டினர். இக்கோட்டையை கைப்பற்றியபோது பண்டாரவன்னியனுக்கு உதவி புரிந்ததற்காகவும் ஆங்கில அரசுக்கு துரோகம் செய்ததற்காகவும் குமரசேகரம் முதலியாரை ஆங்கிலேயர் தூக்கிலிட்டு கொன்றதாகவும் கூறப்படுகிறது

'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

அளவு	கறுப்பு/வெள்ளை	கலர்
முழுப்பக்கம்	ரூ.30,000.00	ரூ. 45,000.00
அரைப்பக்கம்	ரூ.15,680.00	ரூ. 23,520.00
C.M.	ரூ. 98.00	ரூ.147.00
Page Specified C.M.Cl	ரூ.122.50	ரூ. 183.75
Contract ADV. (250-300 Col. Cms)	ரூ. 70.00	ரூ. 110.00

ஒரேயொரு வலையமைப்பு

தேசிய, சர்வதேச செயற்பரப்பில் முன்னணி வகிக்கிறது

GSM தொழில்நுட்பத்தில் என்றும் முதன்மை நிலை வகித்து, 400க்கு மேற்பட்ட சக்திவாய்ந்த ஆதார நிலையங்களின் உதவியினால் கொழும்பு முதல் மட்டக்களப்பு வரையும் பருத்தித்துறை முதல் தேவேந்திரமுனை வரையும் நாட்டின் நாலா திசைகளுக்கும் பரந்த சேவையை நாம் வழங்குகின்றோம்.

குரல் தெளிவுக்கு உலகப் புகழ்பெற்ற டெலாப்ஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதோடு, அதிக சனெல்கள், அதிக கொள்திறன், சிறந்த உள்ளகச் செயற்பரப்பு என்பவற்றிற்கான வாக்குறுதியுடன் **இலங்கையின் முதலாவது இரட்டை அலைவரிசை வலையமைப்பாகவும் நாம் விளங்குகின்றோம்.**

அதுமட்டுமல்ல. நீங்கள் வெளிநாடு செல்லும்போது எமது "ரோமிங்" சேவை மூலம் **177 நாடுகளில்** 308 வலையமைப்பு ஊடாக எங்கள் பரந்த சேவையை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்!

செயற்பரப்பு, தரச்சிறப்பு, குரல் தெளிவு, தொழில்நுட்பம் ஆகியவற்றில் தலைசிறந்து விளங்குவதாலேயே டயலொக் GSM தனித்துவமான ஒரு வலையமைப்பாகப் போற்றப்படுகிறது.

989,348 மேலும் அதிகரிக்கிறது

Minds FCB

ஆயத்தமாகிறது

ஒரு மில்லியன் இலங்கையரை

இணைப்பதற்கு

டயலொக் GSM

எதிர்காலம் இன்றே.

இப் பத்திரிகை கொழும்பு – 06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஜூன் 07 ஆம் திகதி வெளியிடப்பட்டது.